# பழனிஸ்தலமகத்துவம்.



(1932)
Dr. U. V. S. IYER LIBRARY
MADRAS
22793
(4014)




காயமுத்தூர், சி. கு. நாராயணசாமி முதலியாரால் எழுதப்பெற்று,
திரிசிரபுரம் முசிரி. எம். சோமசுந்தர முதலியாரால்,
பழநி நித்தியானந்தம் பிரஸ்ஸில், அச்சிடப்பட்டது.

உ

குகமயம்

தண்டபாணி துணை.

# பழநி ஸ்தல மகத்துவம்.

(ஆராய்ச்சியுடன் பல சித்திரப்படங்களுடன் கூடியது)

இது

தண்டமிழ்வாணர் வரலாறுகள்,

'பேரூர்த் தலமகிமை' என்னும் நூல்களின் ஆசிரியருமாகிய

கோயமுத்தூர்

சி. கு. நாராயணசாமி முதலியாரால்

எழுதப்பெற்று




திரிசிபுரம், முசிரி

எம். சோமசுந்தர முதலியாரால்

அச்சிடப்பட்டது.

பதிப்புரிமை பெற்றது] 1932 [விலை அணா 12



ஸ்ரீ தண்டாயுதபாணி.

# முகவுரை.

'வேண்டுவார் வேண்டுவதை விரைந்தீபவன் வேள் முருகன்' என்றும், இவ்வேள், முன்னும், பின்னும் இக்காலத்தும் இனிவருங் காலத்தும், அருள் வள்ளலாய் நின்று அன்பர்கள் விருப்பத்தை நிறைவேற்றுதலால், 'கண்கண்ட தெய்வம்' என்றும் கற்றுவல்லார் கணித்துக்கூறி யிருக்கின்றனர் இத்தகைய ஏற்றம் வாய்ந்த ஏறுமயிலிறைவன் இனிதமர்ந்துறையும் பழநி மலையையும், மதித்தற்கரிய மூர்த்தியின் மகிமையையும், தீர்த்த விசேடங்களையும் பற்றி முன்னரேயே செய்யுள் வடிவில் 'பழநித்தலபுராணமும்' வசனரூபத்தில் 'பழநித்தல மான்மியமும்' மற்றொரு 'வசன நூலும்' வெளிப்பட்டு உலவுவனவாயிருக்க, 'பழநி ஸ்தல மகத்துவம்' என்ற இந்நூலுமேன்! இப்பொழுது வெளிவர வேண்டும்? என்று சிலர் வினவலாம். இவ்வினவுக்கு விடை—'தலபுராணமும் தலமான்மியமும்' பண்டைக்கால முறையைக் கொண்டுள்ளதாதலாலும், அவற்றில் புராணக் கர்த்தரையும், அவர்க்குரிய மூர்த்தி—தல—தீர்த்தங்களை அபூதவருணனை, அலங்காரரூபகம், இயற்கை விரோதம் முதலியவாற்றால் புராணிகர் வருணித்திருப்பதாலும், அப் புராணமும் செய்யுளாய் கற்றோர்க்கன்றி மற்றோர்க்குப் பொருள் விளங்காதுளதாலும், தமிழபிமானமற்ற இக்கால நவீன நாகரீகர்கரூப, ஆங்கில நூலுணர்ச்சியுடையாரும் வரலாற்று ஆராய்ச்சியாளர்களும், அதனை புராணக் கதையெனக் கொண்டு, கற்பதில் விருப்பமிலராயிருப்பதாலும், இத்தகைய கொள்கையினர், விரும்பி யேற்கும் வகையில் நூலை ஆராய்ந்து ஆண், பெண் என்ற இருபாலரும் எளிதி

லுணரும்படி எழுதி வெளியிடவேண்டுமெனச் சிலர் விரும்பியதாலும், 'பழையனகழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினுனே' என்று கூறிய பவணந்தியாரது இனிய மொழி ஏற்ற சான்ருகத் தோன்றியதாலும், அதனைப்பின் பற்றிப் பழையனகழித்துப் புதியனவாகியவரலாற்றுமுறை ஆராய்ச்சி, காலம், கல்வெட்டு, சுகாதாரம், நகரமைப்பு, தரிசிக்க வேண்டிய விடங்கள், கவனிக்கத்தக்கவைகள், வழி, தங்குமிடம் முதலியவைகளுடன், புதிய கருத்துக்களும் உடன் கொண்டு விரிவாகச் செந்தமிழ் நடையில் பற்பல சித்திரப்படங்களுடன், உயர்ந்த வெண்ணிறக் கடிதத்தில் முத்துப்போன்ற புதிய எழுத்தில், அழகான அமைப்பில் வெளிவர வேண்டியது அவசியமாயிற்று' என்பதே,

இந்நூலை முதலில் அச்சிட்டு உதவுவதாக என்னைப் பழநிக்கழைத்த நண்பர், வாய்மைகாவாது கைவிட்டனர். அதுபற்றிக் கலங்காமலும், கவலைப்படாமலும் முயற்சி மேற்கொண்டேன். 'முயற்சி பொன்னினும் சிறந்தது' என்னும் முதுரை, என்பால் பொய்ப்படாது உறுதுணையாயிருந்தது. அத்துணையைப்பற்றி பழநிஅடிவாரத்துள்ள புலிப்பாணி மடத்து ஆதீனக்கர்த்தர்பால்எனது கருத்தைக் கூறினேன். தமிழருமையும், தண்டமிழ் வாணர்களிடத்து அன்புமுடைய அப்பெரியார், 'அஞ்சாதீர்கள்'என்று அன்பு கூர்ந்து ஆதரவுகூறி நூலை முட்டின்றிமுடித்துத் தருவதாக வாக்களித்தார்கள். அதனுடன் தம் வசத்திருந்த பழைய ஏட்டுப்பிரதியையும் தந்து, பழநி ஸ்தலத்தைப் பற்றி அறியவேண்டுவனவற்றையும் அறிந்து, நூலை அச்சிடத் தொடங்குமாறு சொல்லி, அதன் செலவுகளுக்குப் போதிய பொருளும், எனது நித்திய வாழ்க்கைக்கு வேண்டுவனவற்றையும் தண்டாதளித்து முற்றுப்பெறச் செய்தார்கள். காலமறிந்து தமிழருமையுணர்ந்து செய்த இப்பெரியாரின்.

பேருதவிக்கு எனது மனமார்ந்த பணிவையும் நன்றியறிதலையும் அன்புடன் சமர்ப்பிக்கின்றேன்.

புராணத்தில் காணப்படாத புதிய செய்திகளையும், தலவிசேடம் பற்றிய இனிசெய்யுட்களையும், பிறவற்றையும் அன்பு கூர்ந்தறிவித்த திருவாளர்கள் சு. பெரியசாமிப் பண்டாரம், ப. கிருஷ்ணசாமிப் பண்டாரம், S. K. M. முத்துக் குமார பண்டாரம், மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆசாரியார் முதலிய தமிழ்ப் பெரியார்களது உதவி ஒருபோதும் மறக்கற்பாலதன்று.

பழநியாண்டவனது ஆலய முன்னேற்றத்திற்கும், அதன் நித்திய பூசை நிவேதனவகைக்கும் மூலகாரணராய் விளங்கி, பெருந்தர்மங்களைச்செய்த வாலசமுத்திரம்சமீன் ஆதிபுருஷர், ஸ்ரீமான். சின்னோபள கோண்டம நாய்க்கன் அய்யன் அவர்களது பூர்வீக வரலாற்றையும், திருப்பணிகளையும் விளங்கவுரைக்கும் பழைய எட்டுப்பிரதியை அன்பு கூர்ந்து உதவிய ஆய்க்குடி ஜமீன்தார் மேன்மை தங்கிய இம்மடி ஓபளக்கோண்டம நாய்க்கன் அய்யன் அவர்களுக்கு எனதுமறவா நன்றியை அன்புடன் செலுத்துகிறேன்.

இந்நூலை அச்சிடுவதற்கு நான் அடிவாரத்தில் தங்கியிருந்தபோது எனவிருப்பமுணர்ந்து வசதியான இடத்தையும், ஸ்நானபான வகைகளுக்கு வசதிகளையும், அகமும் முகமும் மலரத் தாயினும் தசமடங்கு அன்புகாட்டி உதவிய எனது தொன்மை நண்பரு[illegible]. அருமைச் சம்பந்தியுமாகிய திருவாளர் சு. நாராயணசாமி முதலியாரவர்கட்கு எனது அன்பார்ந்த வந்தனமும், மறவா நன்றியும் என்றும் உரியதாகுக.

சிறப்பாயிரமும், மதிப்புரைகளும் அன்புடன் உதவிய தமிழறிபுலவர்கட்கும் அப்படியே. சுபம்.

சிவகிரி அடிவாரம்
பிரஜோற்பத்தி ஆண்டு
பங்குனித் திங்கள்
4-ம் நாள் புதன்கிழமை.

[illegible] நாராயணசாமி முதலியார்.

S. IYER

பழநி சுவாமிமலை அடிவார வாசியும்,
முனிசிபல் கௌன்சிலரும், தமிழ்ப் புலவருமாகிய
## திரு. சு. பெரியசாமிப் பண்டாரம்
அவர்கள் கூறிய
# சிறப்புப் பாயிரம்.

பரமபுண்ணிய பூமியாகிய இப்பரத கண்டத்திலே தண்டமிழ் இலக்கியம், பண்டைய இலக்கணங்கள் முற்றிலும் நிரம்பியது இத்தமிழ் நாடு. இந்நாட்டில் உத்தம தெய்வீக சிவ, விஷ்ணு, கணேச, சுப்பிரமணிய மூர்த்திகள் கோவில் கொண்டருளும் திருத்தலங்கள் மிகப்பல. அவற்றுள் அற்புத மகிமைகள் பற்பல வாய்ந்த மகோன்னத மகாவைபவ உத்தமோத்தம திவ்ய க்ஷேத்திரமாகத் திகழ்வது திருப்பழநியேயாம்.

இத்தகைய பெருஞ்சிறப்புவாய்ந்த திருப்பதியின் கண்ணே "சேயோன்மேய மைவரை உலகமும்" என்று தொல்காப்பியனார் கூறிய சூத்திரப்படி முத்தமிழ்ச்சிரகன் என மூவுலகும் புகழும் கலியுக பிரத்யக்ஷாநுபவத் தெய்வமாக விளங்குகின்றவர் தண்டபாணிக் கடவுளரே யாவர்.

இவரையும, பிரபாவமிகுந்த சிவகிரியையும், இவற்றின் அருமை பெருமைகளையும் பற்றி அறிஞர் பலர், பலபடக்கூறியிருக்கும் வரலாறுகளுள், வசனவடிவில் அமைந்து எமது பார்வைக்கு வந்துள்ள "பழநி ஸ்தல மகத்துவம்" எனப் பெயரிய இந்நூலே சிறந்த தென்பது நமது அபிப்பிராயம், எமது நண்பர் கோவை. திருவாளர். சி. கு. நாராயணசாமி முதலியாரவர்களால் ஆராய்ச்சி வழிநின்று புதிய முறையில், இக்கால சந்தர்ப்பத்திற் கேற்றவாறு விஷயங்களை ஆராய்ந்து, அவ்வத் தலைப்பிற்குப் பொருந்தப் பொருள்களை அழகு படுத்தி, இனிய நடையில் இந்நூல்

எழுதப் பெற்றிருக்கின்றது. இதனை அன்புடன் ஓதுவோர் உண்மையறிந்து உளமுவப்பர். அன்றியும், யாத்ரீகர்கட்கு வழிகாட்டியாக வுள்ள இத்திவ்யநூல், செய்யுளின்றி சிறந்த வசனநடையில் அமைந்தது மற்றொரு விசேடம். நமது நாட்டிற்கு இக்காலத்திற்கு வேண்டுவது உரைநடை நூல்களே. தாய்பாஷைக்குத் தொண்டுபுரிவோர் இத்துறையில் வேலை செய்வதே தமிழபிவிருத்திக்கு ஏற்ற செயலென்பது எமது துணிந்த கருத்து.

இந்நூலை ஆக்கிய அன்பர் முதலியாரவர்களது புலமையும், ஆராய்ச்சிமுறையும், இந்நூலை ஒருமுறை ஓதுவார்க்குத் தெற்றெனை விளங்கும். இவர் இதற்கு முன்னரேயே பழநி தமிழ் வாணர்களின் வரலாறுகளில், கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர், பொய்யா மொழியார், இரட்டையர், அருணகிரிநாதர், படிக்காசர் முதலிய புலவர் பெருமக்களது வரலாறுகளை எழுதித் தமிழுலகத்திற்குதவிய இவரைப்பற்றி நாம் அதிகம் கூறவேண்டுவதின்று.

தந்நலங்கருதாது தமிழ் மடந்தைக்குத் தொண்டு செய்வதே தமது மறவாக்கடமையாகக் கொண்டுள்ள நமது முதலியாரவர்களின் சீரிய முயற்சியை நாம் பெரிதும் போற்றுகின்றோம். இதுபோலவே இன்னும்சில நூல்கள் எழுதி வெளியிட அன்பர்க்குத் திருவருளும், தீர்க்காயுளும், அரோக திடகாத்திரா ரோக்கியமும், சர்வாபீஷ்ட மனோரத சித்தியும் இனிதளிக்குமாறு புள்ளிமயிலிலமர்ந்த வள்ளிமணாளன் பொன்னார்தந் திருவடியை மனமார வழுத்துகின்றோம்.

அடிவாரம் பழநி.
16-3-32
புதன் கிழமை.

சு. பெரியசாமிப் பண்டாரம்.

# அபிப்பிராயங்கள்.

தமிழ்மொழி தோன்றினது முதல் இன்றுவரை, யாக்கப்பெற்ற தமிழிலக்கியங்கள் நமது நாட்டில் லட்சக்கணக்காகக்குவிந்து கிடக்கின்றன. இவையெலாம் பல்வேறு காலங்களில் பலரால் எழுதப்பட்டவை. வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், காவியங்கள், இலக்கியங்கள், சரித்திரங்கள் இன்னும் பலநூல்கள், நமது தேசமக்களின் வாழ்க்கை விநோதங்களைத் தெரியக்காட்டும் சாளரங்களாகத்திகழ்கின்றன. ஆனால், 'எப்பொருள் யார் வாய் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்றவாறு, அறிவை வளர்க்க இந்நூற்களை யாராயும் போது ஒன்றற்கொன்று முரண்பாடுடையதாயுமிருக்குமென்பதிற் சிறிதேனும் ஐயமின்று. ஆகவே, தமிழறிஞர் பலர், உண்மையை உள்ளவாறு விளக்கும் ஊக்கங்கொண்டு பழையனவற்றை நன்காராய்ந்து புதுப்பித்த நூலகளாய் வெளியிடுகின்றனர்.

அங்ஙனம் வெளியிட வந்தவர்களுள், எனது நண்பர் கோவை, பல்கலை யறிஞர், திரு. சி. கு. நாராயணசாமி முதலியாரவர்களும் ஒருவராவர். இவர் தமிழும், ஆங்கிரமும், நன்குணர்ந்தவர். இதுவரை, அநேக சிறந்த நூல்கள், உயர்ந்த கட்டுரைகள், நவீனசீர்திருத்தச் சிறுகதைகள், அரிய ஆராய்ச்சிகள் முதலியனவற்றை வெளியிட்டுத் தமிழுலகிற்குப் பாடுபட்டிருக்கின்றனர். இத்துடன், தென்னிந்தியாவுக்கு யாத்திரை செய்யும் யாத்ரீகர்கட்கும், மற்றவர்கட்கும், பெரிதும் பயன் படுமாறு "பழநி ஸ்தல மகத்துவம்" என்னும் இந்நூலையும் வெளியிட்டிருக்கின்றார். பழநி ஸ்தலத்தைப் பற்றிய உண்மைகளை ஆராய்

ந்து தெளிய ஆர்வங்கொள்ளுபவர்கட்கு இந்நூல்,ஓர் அரிய வழிகாட்டியாகும் என்பதை நான் வற்புறுத்தவேண்டுவ தில்லை. ஏனைய நூற்கள், காவியங்கள். சிலா சாஸனங்கள் பட்டயங்கள், சரித்திர உண்மை முதலியவற்றை ஆராய்ந்த எனது நண்பர், கூடியவரை சுருங்கச்சொல்லி விளங்கவைக் கும் பொருள் ததும்பிய எளிய நடையில் எழுதியிருக்கின் றார். இதிற் சில முக்கிய சிலாசாஸனங்களையும், (கல்வெட் டுகளையும்,) ஆதாரமாக எடுத்துக் காட்டி யிருக்கின்றார். சுருங்கக்கூறின், இதைப் பழநிஸ்தலத்தின் பிரதிபிம்பமாய் விளங்கும் ஓர்தூய (The city guide of Palni) கண்ணாடி யாம. பொருளாதார நெருக்கடியான இக்காலத்தில், பெரும் பொருட் செலவுடன், பொதுமக்களின் அவசியங் கருதி வெளியிட்ட இந்நூலைத் தமிழ்மக்களனைவரும் ஏற்றுக் கொண்டு, திரு. முதலியாரவர்களுக்கு மேன்மேலும் இத் தகைய நூல்களை வெளியிடும் உற்சாகத்தை ஊட்டுமாறு வேண்டிக்கொள்ளும்,

முனிசிபல் ஹைஸ்கூல், பழநி. 14—3—32

S. வேங்கடசாமி நாயுடு, B.A. வரலாற்று ஆசிரியர்.

---

## II

### C. கிருஷ்ணய்யர், B A. L.T. அவர்கள்.

முனிசிபல் உயர்தரக் கலாசாலைத் தலைமை ஆசிரியர்,

தமிழ்நாடெங்கும் நாஸ்திகப்பேச்சு உலாவும் இக் காலத்தில் இந்தப் புஸ்தகம் போன்ற பிரசுரங்கள் ஜனங்க ளின் கவலையைத்தீர்க்கும் ஓர் மருந்தாகும். கடவுளைப்பற்றிச் சொல்லக்கூடிய எந்த விஷயமும் நம்பவழியில்லாமற் செய் வதற்கான பிரசாரம் அதிகமாக வளர்ந்தேறி வருகின்ற இந்நாளில், கலியுகத்தெய்வமாகிய தண்டபாணியின் 'ஸ்தல

சரித்திரம்' அவசியமே யாகும். நாஸ்திகரும் இந்நூலின் வாயிலாக க்ஷேத்திரவிசேடத்தை அறிவார்களாகில், கட்டாயம் இந்த ஸ்தலத்திற்கு யாத்திரை செய்ய வேண்டுமென்ற அவாவை மிகக் கொள்வார்கள். ஸ்தல விசேடம் ஒவ்வொருவருக்கும் தனித்தனி அநுபவத்தைப் பொருத்தது. இச் சந்நிதியில் வந்து தேகபரவசம் அடைந்து சாஸ்வதமான பரம்பொருளின் ரூபமாகிய தண்டபாணியின் அம்சத்துடன் கலக்கும் ஆவல் இப்பனுவலைப் படிக்கும் ஒவ்வொருவருக்கும் உண்டாகும்.

'காலத்தினால் செய்த உதவி ஞாலத்தின் மாணப் பெரிது' என்ற முதுமொழிக்கேற்ப, இனிய தமிழில் ஸ்தல விசேடத்தை விளக்கிக்கூறும் இப்புத்தகம் வெளிவருவதற்கு இது தகுந்தகாலம். ஏனெனில், பழநிக்குப் பிரயாணம் செய்வது பண்டைய காலம் போல் கஷ்டமானதல்ல. அன்றியும், பழநித்தலத்தின் ஏகாந்த மகிமை இனிதுபெற விளங்கச் செய்வதற்கு மின்சார வெளிச்சமும் சேர்ந்துவிட்டது. சாதாரணமாக நாலா பக்கங்களினின்றும் பழநியைச் சமீபிக்கும் காலத்தில் பக்தர்கள் மனதை விநாடிக்கு விநாடி மலையின் ஜோதி கவர்ச்சி கொள்ளுகின்றது. ஸ்தலம் இவ்வாறு உயர்வு பெற்றிருக்கும் இந்நாளில் இப்புஸ்தகம் தேடக்கிடையாத செல்வமாகும்.

நூலாசிரியர் கோவை, திரு. சி. கு. நாராயணசாமி முதலியாரவர்களது அமைதி, அருங்குணம் முதலானவைகள் அவரது தமிழில் தொனிக்கின்றன. பழநி ஸ்தல மகத்துவம் பழத்திலும் இனிமையாக இருக்கிறது. தமிழ்நடைப் போக்கானது எடுத்த புஸ்தகத்தை முடிக்காமல் கீழேவைப்பதற்கு இடங்கொடுக்க மாட்டேனென்கின்றது.

புத்தகத்தில் மலையின் மகிமையும், விக்கிரகத்தின் உன்னதமான தெய்வீகத்தன்மையும் சிறப்பாகக் கூறப்பட்

டிருக்கின்றன. போகர், புலிப்பாணி முதலியோர் சிருஷ்டித் தன்மை எவ்வாறு உளதென்பதையும் இந்நூலின் வாயிலாக அறியலாம்.

பழநி ஸ்தலத்திற்கு ஆதிபீடமாகவுள்ள ஆவினன்குடி மகிமையையும் ஆசிரியர் மறக்கவில்லை. இத்துடன் இந்த ஸ்தலத்தை விளங்க வைக்கும் அர்ச்சகர்கள், பண்டாரங்களாகிய நிரந்தர பக்தகோடிகளின் கடமைகள் புத்தகத்தைப் படிப்பவர் சுலபமாக அறியலாம்.

இக்கோவிலைப் பிரதிஷ்டை செய்து சீருஞ் சிறப்புமாகத் திகழச் செய்த சிற்றரசர்களுக்கும், அவர்கள் திருப்பணிகளுக்கும் எவ்வாறு தமிழ்நாடு பிரதி உபகாரம் செய்ய முடியுமென்ற சந்தேகத்தையும் உண்டுபண்ணுகிறது.

பொதுவாக இந்நூலைப் படிக்கும் ஒவ்வொருவரும் உண்மையான பக்திக்கு ஆளாவார் என்பதற்கு சந்தேகமில்லை.

இப்புத்தகத்தில் தொனிக்கும் தெய்வீகத்தன்மை நாடெங்கும் பரவி சமூகவேற்றுமைகளையும், ஆலய வழிபாடுகளின் மாசையும் அறவே ஒழிக்கும் இப்பழநியம்பதியின் ஸ்தல மகத்துவம், மற்றெல்லா இடங்களுக்கும் ஒரு வழிகாட்டியாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

C. கிருஷ்ண அய்யர்,

15—3—32. பழநி.

---

## III

## K. S. சுந்தரஸ்வாமி அய்யர் அவர்கள்.

### தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தரக் கலாசாலை,

கலியுக வரதனும் முருகக்கடவுள் வைபவம் விளங்கும் பல தலங்களுள், முதன்மையானது பழநிப்பதி. இப்பழம் பதியின் சிறப்பைக் குறித்துப் பலர் கூறியிருப்பதினும் சிறந்த முறையில் பல ஆதாரங்களைக் காட்டித் தக்க ஆராய்ச்சியுடன் நமது அன்பர் திருவாளர். சி. கு. நாரா

யணசாமி முதலியாரவர்கள் எழுதிய 'பழநி ஸ்தல மகத்துவம்' என்னும் இந்நூல் பெயருக்குகந்தபடி மகத்துவம் வாய்ந்த தாகவே அமைந்துளது. இதனை ஒருமுறை ஓதுவோர் உண்மை உணர்ந்து உளம் மகிழ்வர். இது யாவரும் எளிதில் படித்தறிந்துகொள்ளுமாறு இனிய உரை நடையில் எழுதப் பெற்றுள்ள சிறப்பைக் குறித்து எவ்வளவு கூறி னும் தகும். சுருங்கக் கூறுமிடத்து நம் தாய் பாஷாபி விருத்திக்கு இதுபோன்ற பல வசன நூல்கள்தான் மிகவும் அவசியமானவை. இதனை ஆக்கிய எம் உரிய நண்பர் பண் டித சி. கு. நாராயணசாமி முதன்மையாரவர்களின் தமிழ்ப் பாண்டித்தியமும், ஆராய்ச்சி முறையும் இந்நூலைப் படிப் போருக்கு நன்கு விளங்குவதோடு இப்பெரியாரால் எழு தப் பெற்றுள்ள இரட்டையர், புகழேந்தியார், பொய்யா மொழிப் புலவர் முதலிய பல நூல்களையும படித்து அதி லுள்ள நுட்பங்களையும் அறியும் ஆவலும் உண்டாக்கு மென்பது திண்ணம்.

தற்காலத்தில் ஆங்கிலக் கலாசாலையில் வியாசம் எழுத உபயோகமாகும்படி அகன்ற படிப்புக்குரிய பாடப் புத்தக மாக (Non-detailed Text) உள்ள பல புத்தகங்களிலும் பாடமாக வைத்து நடத்தப்படுமானால், மாணவர்கள் நம் தாய்பாஷையில் நன்கு அபிவிருத்தி யடைவார்கள்.

இடைவிடா முயற்சியுடன் தன்னலங் கருதாது தமிழ் நலங்கருதும், ஒன்றனையே பெரிதாம பொதுநலமாகக்கருதி உழைத்துவரும் உத்தமத் தொண்டை இந்நூலைப் படிப் போர யாவரும போற்றுமலிருக்க முடியாது. நமது அன்பர் க்கு இந்நூலைப்போன்று தெய்வத் திருவருள் விளங்கத்தக்க இன்னும் பல நன்னூல்களையும வெளிப்படுத்தும் தேக திடத்தையும், மனோ வலிமையையும் தடங் கடல் பெருங் கருணை அண்ணலாம் ஆண்டவன், அருள்புரியும்படி அநவ ரதமும் போற்றும்,

K. S. சுந்தரஸ்வாமி அய்யர்,
13—3—32. பழநி.

கொங்குமண்டல சமரச சன்மார்க்க சங்கத் தலைவரும்,
"சன்மார்க்கன்" பத்திரிகாசிரியருமான
சுவாமி சிவநேசம் அவர்கள்

# மதிப்புரை.

கோவை திரு. சி. கு. நாராயணசாமி முதலியாரவர்களால் உரை நடையில் வரையப்பட்டுள்ள 'பழநி ஸ்தல மகத்துவம்' என்னும் அரிய நூலொன்று எமது பார்வைக்கு வரப்பெற்றேம். தென்னாட்டிலே தலைசிறந்த குமரக்கடவுளின் அறுபடை வீடுகளில் ஒன்றாகிய பழநியம்பதியில் பால தண்டபாணியின் அற்புத விசேடங்களையும், அத்தலத்தின் வரலாறுகளையும் எளியநடையில் இனிய பொருளமைப்பில் தக்க சான்றுகளுடன் இந்நூலாசிரியர் நன்காராய்ந்து வரைந்திருக்கின்றனர்.

நமது இதிகாச புராண மகத்துவங்களில் அறிவிற்கும் அனுபவத்துக்கும் பொருத்தமின்றிய பொய்யும் புனைசுருட்டுமான சில கட்டுக்கதைகளைப் போன்றில்லாமல் இந்நூலின் கண் ஆண்டவன் குன்றின்மீது கோயில் கொண்டருளும் அருட்டிறத்தையும், அக்குன்றின் இருமருங்கினும் இலங்கிநிற்கும் குன்றுக் காட்சியின் இயற்கை வனப்புகளையும, அண்மையிலோடும் ஆறுகளின் அழகையும், குளங்களின் ஒழுங்கினையும், ஏனைய கோயில், மடம், மண்டபமுதலிய வரலாற்று உண்மைகளையும் எடுத்தாண்டிருப்பதோடு அவைகளின் நீங்காக்காட்சிகளையும் கண்டுகளித்தற்கு அழகிய சித்திரப்படங்களும் காட்சிக்குரிய விருந்தாகும்.

ஆகவே, இன்னும் இந்நூலினுள் மூர்த்தி, தலம், தீர்த்தமென்னும் முப்பெருமாண்புகளை விதந்து கூறியிருப்பதோடு, மக்களாய்ப் பிறந்த உயிர்கட்கு இன்மை நலனும்

மறுமைப்பேறும் எய்தற்கு இறைவன் திருவருட் கருணையாலன்றி யெவ்வாற்றானு மியலாதென்று இந்நூலாசிரியர் வற்புறுத்திக் கூறியிருக்கின்றார்.

எத்துணையோ பக்தர்களும் புலவர்களும் இத்தல மகத்துவத்தைப்பற்றி பாடியும், உரைநடையில் எழுதியுமிருக்கின்றனராயினும், இம்மாதிரியான பனுவலொன்று சீரிய உரைநடையில் காலத்திற்கேற்றவாறு வெளிவரவில்லையென்பதை மனமாறக் கூறுவாம்,

இத்தல வரலாற்றைக் கண்டு கேட்டிராதவர்கட்கும் பிறர் துணையின்றிச் சென்றுவர இந்நூல் ஒரு வழிகாட்டி (A Guide) யாகும். இந்நூலாசிரியர் இறைவன் மாட்டன்பும், அடியார் பால் நீங்கா நேசமும் உடையதாயிருப்பதோடு, சிறந்த உரை நடை யெழுதுவதிலும் அறிவும் ஆற்றலும் வாய்ந்த வல்லுநராவர். கவிச்சக்கரவர்த்தி, ஒட்டக்கூத்தர், பொய்யாமொழிப்புலவர், இரட்டையர் முதலிய புலவர்களின் வரலாறுகளையும ஆராய்ச்சி முறையில் அன்பர் முதலியாரவர்கள் நன்கு தொகுத்துத் தமிழகத்துக்குமுன்னரே உதவியிருக்கின்றன ரென்பதை அன்பர் பலருமறிவர். காலத்தின் நிலைமை கருதி இந்நூலுக்குக் குறைந்த விலை மதிப்பிட்டிருத்தல் பாராட்டத்தக்கதே. இம்மாதிரியான நூல்கள் வெளியிடுவதில் தம் வாழ்நாள் முழுதும் சுயநலமின்றி உழைத்துவரும் அன்பர் திரு. சி. கு. நாராயணசாமி முதலியாரவர்களின் நீங்கா முயற்சியை யாம் போற்றுகின்றோம். நம் நாட்டுச் செல்வர்களும் அன்பரின் உழைப்புக்குத்தக்க உதவிபுரிதலே நலமென்று வேண்டுவம் யாண்டும் திருவருள் பாலித்தருள்க.

# பொருளடக்கம்.

*முகவுரை*
*சிறப்புப்பாயிரம்*
*அபிப்பிராயங்கள்*
*மதிப்புரை*
*பொருளடக்கம்*
*தோற்றுவாய்*


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | தண்டபாணியும்—திருவுருவப் பொலிவும் | 3 |
| 2. | போகசித்தரும்—தண்டபாணி விக்கிரகப் பிரதிஷ்டையும் | 5 |
| 3. | சேரவரசனும்—திருக்கோயில் திருப்பணியும் | 12 |
| 4. | புலிப்பாணியும்—அவரது பரம்பரையும் | 17 |
| 5. | பாளையகாரர்களும்—பற்பல திருப்பணிகளும் | 24 |
| 6. | பழநிக்கோயிலும்—பண்டாரங்களும் | 41 |
| 7. | இராமப்ப அய்யரவர்களும்—ஆதிசைவ அர்ச்சகர்களும் | 48 |
| 8. | இடும்பாசுரனும்—குழந்தை வேலப்பரும் | 55 |
| 9. | திருவாவினன்குடியும்—பெயர்க்காரணமும் | 62 |
| 10. | பழநித்தலமும்—பழமைப்பெயரும் | 72 |
| 11. | தலச்சிறப்பும்—பழமைப் பெயரும் | 76 |
| 12. | சரவணப் பொய்கையும்—சண்முகநதியும் | 87 |
| 13. | ஆலயமும்—அதிசயங்களும் | 93 |
| 14. | வணங்கியவர்களும்—பேறுபெற்றோர்களும் | 96 |
| 15. | கிரிவலமும்—தோன்றுங் காட்சிகளும் | ,, |
| 16. | மலைப்படிகளும்—மண்டப ஆலயங்களும் | 100 |
| 17. | மலைமேற்கோயில்களும்—அவற்றின் விவரமும் | 105 |
| 18 | கர்ப்பக்கிரகமும்—கல்வெட்டுகளும் | 110 |
| 19. | பட்டினமும்—அடிவாரமும் | 118 |
| 20. | திருமடங்களும்—தர்மசத்திரங்களும் | 120 |
| 21. | யாத்ரீகர்களும்—கவனித்தற்குரியவைகளும் | 126 |
| 22 | இறுவாய் | |

## இந்நூலுள் சேர்க்கப்பட்டுள்ள
## சித்திரப்படங்களின் ஜாபிதா.

---

1. ஸ்ரீ தண்டபாணியார்
2. ஸ்ரீமத் போகநாத புலிப்பாணி சுவாமிகள்
3. மலையும் அடிவாரப் பிரதான வீதியும்
4. சத்திகிரி சிவகிரிகள்
5. குராவடிக்குமரன்
6. திருவாவினன்குடி தென்பகுதி
7. ,, வடபகுதி
8. புலிப்பாணியார் திருமடம்
9. நவரங்கமண்டபம்
10. ஆரியர் மண்டபமும்-காவடிக்காட்சியும்
11. பழநிப்பட்டணத் திருக்குளம்
12. இடும்பன் கோயில்
13. திருக் கல்யாண மண்டபம்
14. சரவணப் பொய்கை
15. சண்முகநதி
16. இராயகோபுரம் முன்புறக்காட்சி
17. கர்ப்பக்கிரகமும் சுற்றுப்பிரகாரமும்
18. முத்துக்குமாரதேவர் சந்நிதி
19. ஆவுடையார் கோயில்
20. லட்சுமிநாராயணப் பெருமாள்
21. தைத்தேர்

---



(குராவடிக் குமரன்.)

உ

குகமயம்.

ஸ்ரீ தண்டபாணி துணை.

# பழநி ஸ்தல மகத்துவம்.

## விநாயகர் துதி.

"உம்பர்தரு தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதாவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தனக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே"
(திருப்புகழ்)

## தோற்றுவாய்.

சீரும் சிறப்புமிக்க நமது செந்தமிழ் நாட்டில் மிகப் பழைய கால முதலே குனறமெறிந்த குமரவேள் வழிபடு கடவுளாய் இலங்குகின்றனர். 'கல்தோன்றி மண் தோன்றுக் காலம்' என்று ஓர் பழந்தமிழாசிரியர் தமது நூலினுட் கூறியிருக்கின்றனர். அவ்வாறு குறிப்பிடுங் காலம் மிகத் தொன்மையான காலமாம். அதாவது:—'மக்கள் முதலில் மலைப் பக்கங்களில் வசித்தனர். அதற்குப் பிற்பட்ட காலத்திலேதான் நிலப்பரப்பில் வசிக்கலாயினர்' என்னும் கொள்கையைக் கூறியதாம்.

அக்காலத்திலேயே அம்மக்கள் அங்கு மலைகளில் தெய்வமாகக் கருதித் துதித்து வழிபட்டுவந்த கடவுள் முருகப்பிரானேயாம்.

அதனாலேயே அப்பிரானைக் "குறிஞ்சி நிலத் தெய்வம்" என உலகம் வழங்கிவருகின்றது. இன்றும் பெரும்பாகம் எல்லா மலைகளிலும் ஆறுமுகத்தெய்வத்தின் ஆலயங்களைக் காணலாம். ஆலயம் அறவேயில்லாத சிறுகுன்றுகளாயிருப்பினும், அவைகளும் குமரக் கடவுளுக்கு உரியனவென்றும், அங்கும் அவ்விறைவர் ஆலயங்கொண்டிருப்பதாக ஐதிகத்தினால் கொள்ளவேண்டுமெனவும் தெரிந்துகொள்ள வேண்டும்.

இதுபற்றியன்றோ! குன்றுதோறாடலும் ஒருபடைவீடாகத் திருமுருகாற்றுப்படையில் கூறப்பட்டிருக்கிறது. இது செவ்வேள் எல்லா மலைகளிலும் தமது படைவீடாகக் கருதி எழுந்தருளித் திருவிளையாடல் புரியும் தன்மையைக் குறிப்பதாம்.

"குன்றுதோறாடலும் நின்றதன்பண்பே" என்று ஆசிரியர் நக்கீரனார் தமது திருமுருகாற்றுப்படையில் கூறியிருப்பதும் இதனை உறுதிப்படுத்துகின்றது.

இவ்வுண்மையை உணராத ஒருசிலர் 'குன்றுதோறாடல்' என்பது குமரக்கடவுள் தலம் என்றே தர்க்கமிடுவர்.

அப்பெயரோடு ஒரு தலம் தமிழ்நாட்டில் இல்லாததினாலும், கச்சியப்ப சிவாசாரியார் தாம்பாடிய ஸ்ரீ கந்தபுராணத்தில் "குன்றுதோறாடிய குமரர் போற்றுவாம்" என்ற துதியில் 'ஆடிய' என்னும் பதத்தை வினைச்சொல்லாக்கியிருப்பதனாலும், ஆராய்ந்து பார்க்கில் வெளியாவதாலும் அது தவறு என்றே கருதுகின்றோம்.

இதுகாறுங் கூறியவாற்றால் மலையும், மலைசார்ந்த இடமும், குறிஞ்சி நிலத்திற்கு உரியதென்பதும், அந்நிலத்திற்குத் தெய்வம் முருகக்கடவுள் என்பதும் நூல் வழக்கிலும் உலக வழக்கிலும் உண்மையென உறுதிப்பட்டது.

இத்தகைய சுப்பிரமணிய ஸ்தலங்களுள் ஒன்று நாம் இங்குக் கூறத்தொடங்கும் 'பழநிமலை' என்னும் திருத்தலம்.

புராதனமான இத்திருத்தலம் "தென்கயிலாயம்" என்றும், 'மாயாத்ரி' என்றும், பெயர்பெற்று விளங்கும் "வராக கிரியின்" சார்பில் வடபாகத்தில் காரணார்த்தமாய் அமைந்த ஓர் குன்றில் அமைந்து கம்பீரத் தோற்றத்துடன் விளங்குகிறது.

---

## தண்டபாணியும்—திருவுருவப் பொலிவும்.

வைவாய்க் கணிச்சிப் படை யென்ன
  வதிவித் திடுங்கோ வணத்தண்டு
கைவாய் வலத்தி னமைத் தருளிக்
  கடியி லிடக்கை புதித்தருளி
மைவாய் வழங்கும் பொறி புலனை
  யவித்த வுறவ ரிமையவர்க
ளுய்வா னிறைஞ்ச வருள் வழங்குங்
  கந்தனுரு.................... (தணிகைப்புராணம்)

---

நமது தமிழ்நாட்டுச் சென்னை மாகாணத்தின் வடபாகத்தில் தமிழுக்கு எல்லையாக விளங்கும் 'திருவேங்கடம்' என்னும் பெயருடைய திருப்பதி மலை வைணவ தாஸர்களால் எங்ஙனம் சிறப்பாகக் கொண்டாடித்தொழுது வணங்கப்பட்டு வருகின்றதோ அதுபோலவே, தென்பாகத்தில் மதுரை ஜில்லாவில் திண்டுக்கல்லிலிருந்து சுமார் 36 மைல் தூரத்திலும்; கோயமுத்தூர் ஜில்லா தாராபுரத்திலிருந்து 20 மைல் தூரத்திலும்; பொள்ளாச்சி உடுமலைப்பேட்டை வழியில் புதிதாகப் போடப்பட்ட (S. I. R) தென்னிந்தியா இருப்புப்பாதை வழியில் 39 மைல் தூரத்திலும் திருவாவினன்குடியுடன்கூடிய பழநிமலை இருக்கிறது. இவையேயன்றி மேற்குறித்த ஊர்களினின்றும் மோட்டார் பஸ் மூலமாகவும் பழநிக்கு வரலாம்.

இந்த ஸ்தலம் முருகன் அடியார்களால் பேரன்பு கொண்டு பெரிதும் போற்றிப் பணிந்து கொண்டாடப்பட்டு வருகிறது. மாலடியார்கள் ஏழுமலை ஆண்டவனைத் தரிசிக்க நாடோறும் மிகுதியாகச் செல்வதுபோலவே, குமரனடியார்கள் பழநியாண்டவனைப் பார்த்து மகிழ்வதற்குப் பெருவாரியாகக் கூடுகின்றார்கள். கந்தனுக்குக் காவடியெடுப்பவர்களும், காணிக்கை செலுத்துபவர்களும், கிரிவலம் வருபவர்களும், அபிஷேகம் செய்விக்கின்றவர்களும், ஆபரணங்கள் பூட்டி அலங்காரஞ் செய்வித்துத் தரிசிப்பவர்களும், முடிவாங்கிப் பிரார்த்தனை நிறைவேற்றுகின்றவர்களும், மற்றும் பலவகையான கைங்கரியங்கள் செய்கின்றவர்களுமாக யாத்ரீகர்கள் தினந்தோறும் ஏராளமாக வந்தவண்ணமாகவேயிருக்கின்றார்கள். மற்றும், இத்திருத்தலத்தில் பங்குனி யுத்திரம் வைகாசி அக்கினி நக்ஷத்திரம், ஆடிக் கிருத்திகை, அற்பிசி ஷஷ்டி யுற்சவம், தைத்திருநாள் ஆகிய திருவிழாக்கள் சிறப்பாக ஆண்டவனுக்கு நடாத்தப்பட்டு முடிவுபெறுகின்றன. திருப்பதி வெங்கடேச்சுரர் எப்படித் திருமலைமீது கோயில் கொண்டருள்கின்றாரோ அவ்வாறே பழநியாண்டவர் பழநி மலைமீது ஆலயங்கொண்டருள்கின்றார், பக்தியைப் புகட்டும் புண்ணியப்பதிகளில் பழநிப்பதிக்கு நிகர் வேறு இல்லையென்றே கூறலாம். பழநிமலையும் அம்மலைமீது கோயில் கொண்டருளும் குமரப்பிரான் சந்நிதியும், தனியனாய், தண்டபாணியாய் நின்ற திருக்கோலத்தில் வெள்ளிய திருநீற்றுப் பூச்சும், உருத்திராக்க வடமும், காவியுடையும் கவினச் சேவை சாதிக்கும் திவ்யமங்கள மூர்த்தியும், அம்மூர்த்தியின் கருணை பொழியும் செந்தாமரை முகமும், வசீகரமான குளிர்ந்த பார்வையும், சந்நிதியில் நின்று ஆழ்ந்து நோக்கும் அன்பர்களை ஓர் கணத்தில் பரவசப்படுத்தும் மகத்தான கவளீகாரசக்தியும் வேறு எங்கும் காணுதல் அரிது.

## போகசித்தரும்—தண்டபாணி விக்கிரகப் பிரதிஷ்டையும்.

பண்டைக் காலத்தில் அதாவது சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நமது முன்னோர்களில் பல்லோர் வைத்தியம், வாகடம், இரசவாதம், யோகப்பயிற்சி, கடவுளைத் தனியேயிருந்து தியானித்தல் முதலியவற்றில் பற்றுதலும் முயற்சியுங் கொண்டு அது சம்பந்தமாகக் காடுகளிலும், மலைகளிலும், ஜன சந்தடியில்லாத தனி இடங்களில் தங்கியும், பெரியோரையடுத்து உபதேசங்கேட்டும், மூலிகைகளை ஆராய்ந்தும், வாகட நூலை ஓதியும், தியான சமாதிகூடியும், ஏகாந்தத்தினிதிருந்து இறைவனைத்தொழுதும், சித்து வித்தைகளை அப்பியசித்தும் வந்தார்கள். அவர்களில் அணிமா, கிரிமா முதலிய அஷ்ட வித்தைகளில் சித்தியடைந்தவர்களே 'சித்தர்கள்' என்று பெயர் சிறந்து உலகத்தில் பிரசித்திபெற்று விளங்கினர். இவர்களில் பதினெண் சித்தர்களே முதன்மையுடையவர்கள். இவர்கள் பெயர் கோங்கணர், குதம்பை, அகப்பேய், அழுகணி, பாம்பாட்டி, போகர், புலிப்பாணி முதலியனவாம். தத்துவமுணர்ந்த வித்தகர்களாகிய இவர்களின் பெயர்களை அறியாதார் நமது தமிழ் நாட்டில் இரரென்றே கூறலாம். இத்தகைய பிரசித்தர்களாகிய சித்தமூர்த்திகளில் போகரும், புலிப்பாணியும் அப்பொழுது ஜன நெருக்கம் அதிகமின்றிப் பெருங்காடாய் நெல்லிவனமாய் முட்புதராய்க் காட்டுமிருகங்கட்கு உறைவிடமாய் நிலவும் இதன் நடுவில் ஓங்கிவளர்ந்த சிவகிரியின் சார்பில் வசதியான ஓரிடத்தைத்தேர்ந்தெடுத்து அதில் தாங்கள் தங்கியிருப்பதற்கு ஆசிரமம் ஒன்று வகுத்துக் கொண்டு வசித்துவந்தனர். இங்ஙனம் வசித்துவந்த அவர்கள் தமது அரிய காலத்தை அவமாக்காது நாடோறும் ஆண்டவனை மானசீகமாய்த் தொழுவதும், வணங்குவதும்,

வாழ்த்துவதும், பிரார்த்திப்பதும், தியான சமாதி கூடுவதும், அங்குத் தம்மை அதிசயமாய் நாடிவரும் மக்களுக்குப் பக்தியைப் போதிப்பதும், பிணியால் வருந்துவோர்களுக்கு மருந்துகொடுத்துச் சுகப்படுத்துவதும், ஆத்மப் பயிற்சியையும், வாகட நூல்களையும் விரும்பியவர்கட்குக் கற்றுக்கொடுப்பதுமாயிருந்தார்கள். அவற்றால் நன்மையடைந்த மக்கள் பலர், தம்மைப்போல் குறையடைந்து அயலில் வசிக்கும் மக்களுக்கும் மலையில் புதிதாய் வந்தமர்ந்திருக்கும் சித்தர் தம் சீரிய பெருமைகளைத் தெளிவுபெறக் கூறி அவர்களையும் ஆங்குச்சென்று அவர்களைத் தரிசித்து வணங்கி நன்மைபெறுமாறு ஏவினர். இவ்வேவுதலினால் நாளடைவில் கூட்டம் அதிகரிக்கவே, சித்தர் தம் திறமையும் மகிமையும் அப்பிரதேசங்கள் முழுமையும் பரவிப் பலரும் அதிகமாக வரத்தொடங்கினார்கள். அன்பர்தம் கூட்டத்தின் மிகுதியைக்கண்ட போக சித்தர் தாம் ஆன்மார்த்தமாய் வணங்கிவரும் தமது ஆன்ம நாயகனாகிய குமரவேளை மிகச் சிற்றாலயம் ஒன்று எடுப்பித்து அதனுள் உருவகாரமாய்ப் பிரதிஷ்டைசெய்து கூடும் அடியார்களை ஆண்டவன் அடியிணைகளில் பணிந்து உய்யுமாறு செய்யவேண்டுமென்றும்;

நமது முன்னோர்கள் ஆலய வழிபாடே சிறந்த மார்க்கமென்றும், ஆங்கு இறைவனை வடிவுடையவனாகக்கொண்டு வழிபட்டுவருதல் முதன்மையானதென்றும்; இதுவே முத்தி வீட்டிற்கு முதற்படியென்றும்; இவைகளை ஆராய்ந்தே நமது முன்னோர்கள் மானிடர்சார்பு உய்யும்பொருட்டுத் திருக்கோயில்களைக் கட்டுவித்து, ஆங்குச்சென்று இறைவனை வழிபடும் முறையையும் வெளியிட்டுள்ளார் என்றும்; அறிவுடைய மக்களுக்கு அத்திருவாலயங்களே நன்மையைத்தரும் தன்மையனவாய்த்திகழ்கின்றன என்றும்; மற்

றும் பல நெறிகளை ஆராய்ந்தும் ஒரு முடிவுகண்டு, தமது சித்து வல்லமையாலும், திருவருள் பலத்தாலும், வாத முறையைக் கைக்கொண்டு நவபாஷாணக் கட்டில் தண்ட பாணி உருவம் ஒன்று அழகு சிறக்குமாறுசெய்து அத்திரு வுருவினை முன்னர்கூறிய குறுகிய சிறு கோவிலினுள் நன் ஞள் ஒன்றில் மந்திர விதிவழாது பிராணப்பிரதிஷ்டை செய்து அச்சிவச் சிலைக்குத் "**தண்டபாணி**" என்ற திருப் பெயர் சூட்டித் தாமும், தமது மாணவர்களும் வணங்கிப் பிறரையும் தரிசித்து வணங்கிஇஷ்ட சித்திகளை எய்தி இன் புறுமாறு உபதேசம் செய்தனர். அதுமுதலே மலைமீது புதுக்கிய கோயிலும், அதனுள் திருவீற்றிருந்தருளும் தண்டபாணிக் கடவுளும் பிரசித்திபெற்று அன்பர்கள் வணங்கி அகமிகமகிழ்ந்து இன்பப்பேற்றை எய்துவதற்கு ஏற்றபுண்ணியப்பதியாக இலங்குவதற்கு ஆயிற்று.

இஃதிவ்வாறாகச்சிலர், போகநாதர் போக விச்சையில் விருப்பமுற்று அதனால் சிறு தவறுசெய்ய, தவறுதலின் நிவர்த்திக்காக அவர் ஆங்குவந்து ஆங்கு முன்னமேயே ஆல யங்கொண்டு அன்பர்கட்குச் சேவை சாதிக்கும் தண்டபா ணியைப்பூசித்துப்பாவத்தை ஒழித்தாரேயன்றிமூர்த்தியை ஸ்தாபித்தாரில்லை என்றும்;

வேறுசிலர், தண்டபாணிக் கடவுள் மூன்று யுகங்களி லும், பழநிமலைமீது கோயில்கொண்டு அழியாது வீற்றி ருந்து நான்காம் யுகமாகிய இக்கலியுகத்திலும் கலியுகவரத ஞய்க் கண்கண்ட தெய்வமாய்ப் பிரபலம்பெற்றுத் தம்மை வணங்கித்தொழும் அடியார்கட்கு அவர்கள் அபீஷ்டங்களை நிறைவேற்றியருளுகின்ருர் என்றும்; தானே தோன்றிய சுயம்பு மூர்த்தி யென்றும், இவற்ருல் இக்கடவுள் சுமார் 400 அல்லது 500 ஆண்டுகட்கு முன்னர் தோன்றினவர் எனச்சிலர் கூறுதல் பொருந்தாப் புனைந்துரை யென்றும்;

மற்றும் சிலர், பழநி ஜமீன் கோசல சின்னோபை நாய்க்கன் அய்யன் அவர்கள் பழநி தண்டாயுதப் பெருமானுக்கு ஆலயம் எடுப்பித்துத் தண்டபாணியின் திருவுருவத்தைச் சிலையில் சிற்பியைக்கொண்டு செய்வித்துப் பழநிமலைமீது எடுப்புவித்த கோயிலில் பிரதிஷ்டை செய்வித்துச் சோமவார—சுக்கிர வாரங்களில் மலைமீது சென்று தரிசித்து வணங்கி வந்தார் என்றும் கூறுவர். இவர்கள் கூற்றிற்குப் போதிய ஆதாரங் கூறாமல் தமக்குத் தோன்றியவாறு பேசுவது நம்புதற்குரியனவாயில்லை. ஆனதால், இவற்றின் உண்மைத் தன்மையை அறிஞர்களேபே ஆராய்ந்துணர விடுகின்றோம். எமது கருத்துத்தான் யாதெனில்,

போகநாதர் தாம்பாடிய "ஏழாயிரம்" என்னும் பழைய வாகட நூலில், தாம் "காலாங்கிநாதர்" என்னும் பெரியார் ஒருவரால் சீனதேசத்தில் வைத்து உபதேசிக்கப்பட்டு சித்து வித்தைகளில் தேர்ந்து ஒப்பற்ற சித்தியடைந்தும், பூவுலகெங்குஞ் சஞ்சரித்தும், தல யாத்திரை செய்தும், ஆகாய விமானத்தில் பறந்தும், பற்பல அதிசயங்களைச் செய்தும், கைலாயமலை முதலியவற்றைச் சென்றடைந்தும், தரிசித்தும், சித்தமூர்த்திகளையும், முனிவர்களையும் கண்டுரையாடியும், வந்ததாகக் கூறுவதனாலும்; பின்னர் போகர், தலயாத்திரை செய்கையில் இறுதியாகத் தென்னாட்டுக் கொங்கு வைகாவூர்நாட்டு போககிரிக்கு வடசாரில் திருமடம் ஒன்று வகுத்துக்கொண்டு தமது முதன்மாணவர் புலிப்பாணியார் அருகிருக்கச் சமாதி கூடியிருந்து சுப்பிரமணியபிரதிஷ்டை செய்தாரென்றும், கன்னபரம்பரைச்செய்திபிரபலமாக வழங்கப்பட்டுவருவதனாலும் கன்னபரம்பரைச் செய்திகளிலும் சில உண்மையிருப்பது உறுதியென்று வரலாற்று ஆராய்ச்சியாளர் உரைப்பதனு

லும், கொங்கு நாட்டுப் பழைய வரலாறுகளை விளக்கும் கொங்கு மண்டல சதகமும்:-

"யோக வயித்தியஞ் சொல்ரஸ வாத மெலாக்கலையுந்
தேக நிலைபெறுங் காயகற் பங்களெண் சித்தியுஞ்சொல்
போக ருடனபுலிப் பாணிமுதலிய புண்ணியரெலா
மாக முறவமர் வைகாநகர் கொங்கு மண்டலமே"

பொருள்.

("யோகம், வைத்தியம், இரசவாதம், நீண்ட ஆயுளைப் பெறுங் காயகற்பம், அஷ்டமாசித்தி முதலியவைகளைக் கூறிய போகநாதர், புலிப்பாணி முதலிய பெரியோர்கள் வசித்துள்ள வைகாவூர் (பழநி) கொங்குமண்டலம் என்பதாம்")

எனக் கூறுவதனாலும் போகரும் புலிப்பாணியும் கொங்குநாட்டுப் பழநிமலையில் வசித்தார்களென்பது தெளிவாகின்றது.

மற்றும், போகரே தமது நூலில், "கோனான சுப்பிரமணியர் சரணஞ்சொன்னேன், கூறுன அவர்பாதம் தொழுது போற்றி" (960) என்றுகூறுவதனாலும்; அச்செய்யுட்கள் போகர் சுப்பிரமணியக் கடவுளிடத்து வைத்துள்ள அன்பின் பெருக்கை நன்றாக வெளியிடுவதனாலும்; போகர் தமது ஆன்ம நாயகனாகிய பழநியாண்டவனை அம்மலைமீது வைத்து பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்திருக்கவேண்டுமென்றே கருதுகின்றோம்.

மேலும், முன்னர் முருகப்பிரான் திருத்தலமாய்த் திகழ்ந்து, தற்போது முகுந்தன் திருத்தலமாய்ப் பிரசித்தியுடன் விளங்கும் திருவேங்கடம் என்னும் திருப்பதிமலையில் சித்தமூர்த்தியாகிய 'கொங்கணர்' சாந்நித்தியங்கொண்டிருப்பதனால் அக்கோயிலும், மலையும் மிகப்பிரபலம்பெற்று அடியார் அதிகரித்து மகிமை விளங்கி வருவதற்கு ஏதுவா

யிற்றென்றும், இது "பகுஜனவாக்யம் கர்த்வ்யம்" என்பதை உறுதிப்படுத்துவதனுலும், அதுபோலவே, இப் பழநிப்பதியின் திருமலையிலும், சித்தமூர்த்தியாகிய போகநாதர் சாந்நித்யமாய்ச் சமாதிகொண்டுள்ளதனுலும், அவரால் தண்டபாணியின் திருச்சிலையின்கீழ் ஸ்தாபிக்சப்பட்ட யந்திரத்தகட்டின் மந்திர சக்தியே மகிமைக்கு மூலகாரணமெனக் கூறுவதனுலும், அக்கருத்துப் பற்றியே இங்கும் அடியார் குழாம் அபரிமிதமாகக் கூடி ஆண்டவனை வழிபட்டு மகிமையை அதிகரிக்கச்செய்து வருவது பிரத்யக்ஷ அனுபவம் எனத் தெரிவதனுலும், போகநாதரே தண்டபாணிக்குக் குற்றாலயமும், பிம்பப் பிரதிஷ்டையும் செய்திருக்கவேண்டுமென்ற முடிவுக்கு வருகின்றோம.

இங்ஙனம் கொண்ட நமது முடிவை ஏற்காத சிலர் போகநாதர் தமது நூலில் தண்டபாணிக்குக் கோயில் எடுப்பித்து மூர்த்திப் பிரதிஷ்டை செய்த செய்தியை ஏன் ஓரிடத்திலேனும்கூறுது விட்டனர்; அவர் செய்திருப்பின் கூறியிருப்பாரன்றோ என வினுவுவர்? அவ்வினுவுக்கு நாம் கூறும்விடையாவது:—போகர் தற்பெருமை, புகழ் முதலிய உலகப்பயனைப் பெரிதாகக் கருதாமல் பேரன்பின் பெருக்கால் மெய்ப்பக்தியில் ஈடுபட்டுத் தமது திருப்பணிச் செய்தியைப் பிறர் அறிய வேண்டுமென்பதில் அவாக் கொள்ளாததனுல் கூறுமல் விட்டிருக்க வேண்டும என்பதே.

இப்பொழுதும் மலைமேலுள்ள தண்டபாணி கோயிலின் இரண்டாம் பிராகாரத்தில் தென்மதிற் சுவற்றின் மேற்குக் கோடியில் கிழக்குநோக்கிய சிற்றாலயத்துள் மேற்குப் பார்த்த சமாதி யொன்றிருக்கிறது. இதனையே போகருடைய சமாதியென்று பலரும் உரைப்பதோடு இன்றும்

அச்சமாதிக்கு நித்தியபூஜையும், அன்பர்கள் வழிபாடும் அஷ்டோத்திரம் சகஸ்திரநாமம் முதலிய உபசாரங்களும் செய்யப்பட்டு வருகின்றது. அல்லாமல், அவ்வாயைத்துள் நவசத்தி(துர்க்கை)முதலிய தேவதைகளைப்பூசித்த இடமும் தியான சமாதிகூடும் ஒடுக்க அறையும் உள்ளன. இவற்ருல் ஆங்கு போகர் வசித்திருந்ததும், ஆண்டவனை வழிபட்டு வந்ததும் உறுதிபெறுகின்றது.

இங்ஙனம் சித்தமூர்த்தி போகநாதர் ஆங்குப் பலகாலம் சமாதிகூடியும், மாணுக்கர்கட்கு உபதேசம புரிந்தும் வருகையில் தமக்கு அபன் விதித்த ஆயுட்காலம் அடுத்து வருவதை யுணர்ந்து அப்பொழுது தமது அன்பிற்குப் பாத்திரராய்ப் பரிபக்குவதசை யடைந்திருந்த புலிப்பாணியாரை அருகில் அழைத்து அவரிடம் தமது ஆன்மநாயகுகிய தண்டபாணியை நன்ருகப் பூசித்துப் பிரபலம் உண்டாம்படி செய்யுமாறு கட்டளையிட்டும்; கூறுவனவற்றைக் கூறியும், தாம் யோக சமாதியடைந்தாரென்ப.

இச்செய்திகளால் தண்டபாணியுருவமும் கோயிலும், மலைமீது ஸ்தாபிதமானதற்குப் போகநாதரே மூலகாரணரென்றும், அவர்கால முதற்கொண்டுதான் பழனித்தலத்தின்பெயரும், தண்டபாணியின் பெருமையும் சிறப்பாகப் பரவிப் பிரசித்திப்பெறத் தொடங்கியதென்றும் கூறுவது மிகையாகாது.

இப்போகர் சீனதேசத்துப் புத்தசமயி என்றும், அங்கிருந்து கயா முதலிய புத்ததலங்களைத் தரிசித்துக்கொண்டு தென்னுடு முற்றிலும் சஞ்சரித்துப் பல நாள் இங்கு தங்கியிருந்து பின் தனது ஜன்மதேயமாகிய சீனதேசஞ் சென்றனர் என்றும், புலிப்பாணியும் இவரோடு வந்து இங்கேயே தங்கிவிட்டா ரென்றும் அகராதிகளில் கூறப்பட்டுள்ளன.

## சேரவரசனும்—திருக்கோயில் திருப்பணியும்.

சேரர் என்பவற்கு 'வானவர்' என்றும் பெயர். இப்பெயர் இவர்கட்கு உயர்ந்த மலைநாடுகளில் வசித்ததனால் வந்தது. அல்லாமல், சேர-சோழ-பாண்டியர்கள் என்ற வழக்குரையில் சேரரையே முதன்மையாக வைத்து நூல்களிலும், உலகவழக்கதிலும் வழங்கப்பட்டுவருவதனாலும் சேரர் முதன்மையுடையார், உயர்ந்தார் என்று பெயர் பெற்றனராவர். இவ்வரசர்கள் போர்புரிவதிலும், ஈகையிலும், செல்வத்திலும், பிரபுத்வத்திலும், கல்வியிலும், கருணையிலும், சிவபக்தியிலும், ஒழுக்கத்திலும், மேன்மையுடையாராகவே விளங்கியிருந்தனர். இவற்றிற்குச் சங்க நூல்களாகிய 'அகநானூறு' 'புறநானூறு' முதலியவற்றில் சான்றுகள் உள்ளன. இவர்கள் வடதிருவாங்கூரிலும், கொச்சியிலும், மலையாளத்திலும், கன்னடத்தில் சில பாகங்களிலும்அரசுசெய்துவந்தனர் என்பது வரலாறுகளால்அறியப்படுகின்றது. கி. பி 2-ஆம் நூற்றாண்டிலிருந்து 12-ஆம் நூற்றாண்டுகளவரை இச்சேரவரசர்களது அதிகாரம் தமிழ் நாட்டில் நீடித்திருந்ததென்ப. பிற்காலத்தில் இச்சேரராஜ்யம் இருபத்திநான்கு பிரிவுகளாக ஆயிற்றென்றும்; அவற்றை அந்தணர்கள் சிலர் ஆண்டனர் என்றும; கன்னபரம்பரை வாயிலாகவும், ஆராய்ச்சியாளர் ஆய்வுரைகளாலும் உணரப்படுகின்றது. ஆயின், சிலர் இப்பிரிவுமுறை நேர்மையற்றதென உரைக்கின்றனர். இவ்வாறு அரசாட்சி செய்தும் பயன்படாதுபோகவே 'க்ஷத்திரியன்' ஒருவன் தோன்றி அவ்வரசுகைக்கொண்டு ஆட்சி புரிந்தானென்றும், அவர்களில் ஒருவனே "சேரமான் பெருமாள்" என்னும் பெயரினன் என்றும் ஒருசாரர் கூறுகின்றனர்.

இஃதுண்மையாயின், இச்சேரர்கோன் செந்தமிழ்ப் புலமையிலும், சீரியஒழுக்கத்திலும், சைவப்பற்றிலும்,

சந்திரஜடாதரன் சரணகமலத்தில் பதிந்த பேரன்பினும் சிறந்து, பெரியபுராணத்தில் சேக்கிழார் அடிகளால் அறுபத்துமூன்று அடியார்களில் "சேரமான் பெருமாணுயனர்" என்று சிறப்பித்து புகழ்ந்து பாராட்டப்பட்ட பெரியாருமாவர். இவரே 7, அல்லது 9-ஆம் நூண்டுகளில் சைவாசாரியாகிய விளங்கியவரும், தம்பிரான்றேழர், ஆரூரர் என்று பெயர்சிறந்துவருமான ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகட்குப் பேராதரவினராகவும், கெழுதகை நண்பராகவும் திகழ்ந்தனர். இது சைவஉலகும், தமிழுலகும் நன்கறிந்த செய்தி.

சிவநேசராகிய இச்சேரவரசன், சைவ குரவராகிய சுந்தரமூர்த்திகளிடத்துத் தோழமை கொள்ளுவதற்கு முன்னமேயே தமது சிவதலயாத்திரையில் இப்பழநிமலையைக்கண்டு அதன்மீது ஆலயங் கொண்டருளும் ஸ்ரீ தண்டபாணியைத் தரிசித்துச் சிற்றாலயத்தைப் பேராலயமாக்கியும், விமானம் எடுப்பித்தும், கர்ப்பங்கிரகங்கட்டுவித்தும், ஆறுகாலபூஜைக்கு வேண்டிய பூமிகளைத்தானமாக வழங்கியும் இருக்கவேண்டும். இவற்றை உறுதிப்படுத்துவதற்கு இப்பொழுது போதிய ஆதாரம் காணுமாறில்லை.

ஆயின், மலைமீதுள்ள தண்டபாணி ஆலயத்தின் கர்ப்பக் கிரகத்தின் வடபுறச்சுவற்றில் மேற்குக்கோடியில் சேரவசன் குதிரைமீது வீற்றிருக்கிறபடி சித்தரிக்கப்பட்டுள்ள சிற்பசின்னத்தைக் கொண்டும்; மலைப்படிகளின்மேல் ஆலயங்கொண்டருளும் விநாயக மூர்த்தங்களில் ஒன்றுக்குச் "சேர விநாயகர்" என்று திருப்பெயரிருப்பதனுலும்; அவ் விநாயகரும, அவ்வாலயமும் அவனுல் ஸ்தாபிக்கப் பட்டதென்றுபலரும் ஒருமுகமாகக் கூறுவதனுலும், தொன்றுதொட்டுமாறுது ஒரேபடித்தாய்ப் பழநிஆண்டவன் கோயில் முதன் முதலாகச் சேரவாசனுல் புதுப்பிக்கப்பட்டதெனப்

பிரபலமாய் வழங்கப்பட்டுவரும் கன்னபரம்பரைச் செய்தியாலும், அதற்கேற்பப்—

"பாரணதிபர் விபுதர் பரவுசிவ கிரிவரு
பச்சிமத்துவார
சேரர்கோ னாலயத்தி னின்றிலகு பரஞ்சுடரைச்
சிந்தை செய்வாம்"

என்றுவரும் 'பழநித்தலபுராணச்' செய்யுளாலும், "மிருது வாகிய மாலையைத்தரித்த பூமியிலுள்ள அரசர்களும்,தேவர்களும், துதிக்கும் பழநிமலைக்கண் நன்மைவந்த மேலைச்சாரவில் சேரமகாராசனால் புதுப்பிக்கப்பட்ட திருக்கோயிலின் கண் விளங்கும் பரஞ்சோதியாகிய தண்டபாணிச்சுவாமிகளை மனதில் தியானிப்பாம்" என்ற அதன் உரையாலும் சேரவரசன் திருப்பணிசெய்தது உண்மையெனக்கொள்ள விடமிருக்கிறது. அல்லாமல், ஒரு காலத்தில் இப்பழநிக் கோயிலும், 'வைகாபுரி நாடும்' சேரவரசனது ஆதிக்கத்தின் கீழ் அடங்கியிருந்ததென்பதற்குக் கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் சிவாநுப்பூதிச் செல்வராகவும், திருப்புகழ்ப் பரமசாரியராகவும் விளங்கிய **ஸ்ரீ அருணகிரிநாத அடிகள்** திருவாய்மலர்ந்த திருப்புகழ்ப் பாசுரங்களில்—

"ஆதி யந்தவுலா வாசு பாடிய
சேரர் கொங்கு வைகாவூர் நனாடதில்
ஆவினன்குடி வாழ்வானதேவர்—பெருமாளே"

"கோடுலாவிய முத்து நிரைத்த வை
காவூர் நாடதினிற் பழநிப் பதி"

என்று கூறுவனவற்றை வலியுறுத்தும் ஆதாரங்களாகவும் கொள்ளலாம்.

மேலும் இச்செய்தியை உறுதிப்படுத்துவதற்கு மலையாள மக்களுள் காணும் பழக்க வழக்கங்களும், அநு

பவங்களும் நமக்கு ஆதாரமாகக் கொள்ளற்குரியனவாம். அவை:—

சுமார் 30, 35 ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது பழநியில் கோர்ட்டு ஆப் வார்சு, தாசில்தாராயிருந்த 'ஜாகேத ராமநாயுடு' அவர்கள்காலத்தில் தண்டபாணிகோயிலின் கர்ப்பக்கிரகவிமான ஸ்தூபி புதுப்பிக்கப்பட்டபோது அத்தூபியின் அடிப்பாகத்தில் 'பூலராஜா' என்பவன் பெயர் வெட்டப்பட்டிருந்ததென்றும், அது திருவனந்தபுரத்து அரசர்களுடைய பெயர்களுள் ஒன்றென்றும், இதுபோலவே மலையாளம் "இராமராஜா" என்பவன் பழநியாண்டவனுக்கு தங்கமுலாம்பூசிய இரண்டு வாள்கள் உபயமாக அளித்தானென்றும் (அவ்வாள்கள் ஆண்டவன் சந்நிதியில் இப்பொழுது சாத்தப்பட்டிருக்கவில்லை) நம்பத்தகுந்த ஆதாரங்கள் இருப்பதும்; தண்டபாணியைக் கண்பெற்றபேறுக கண்டுகளிப்பதற்கு வந்துகூடும் அன்பர்களில் மிகுதியான மெய்யன்பர்கள் கேரளத்து மக்களேயென்பதும், அவர்களது எண்ணிக்கையும், பிரார்த்தனையும், காவடிசெலுத்துதலும் மிகுதியிலும் மிகுதியானவை என்பதும் எவராலும் மறுக்கமுடியாத உண்மை. இது மலைநாட்டுச்சேரர்கோன் பழநியாண்டவனுக்குச்செய்த திருப்பணியின் சம்பந்தம் பற்றிய பாந்தவ்யத்தொடர்பே மலையாளமக்களது உள்ளத்தில் உறுதியுடன் பதிந்து ஆழ்ந்து வேரூன்றி பக்தி வெள்ளம் பெருக்கெடுப்பதற்கு ஏதுவாயிற்றென்றும், அத்தொடர்பே பழக்கத்திற்கு மூலகாரணமாய் வழக்கத்திலும் நிலைகொண்டுவிட்டதும், சேரர்கோன் திருப்பணி செய்வித்த செய்திக்குப் போதிய ஆதாரமாகக்கொள்ளலாம்.

இங்ஙனம் வரலாறு கொண்ட சேரர்கோன் கண்ணிற்கினிய காட்சி, கருத்தினுக்கினிய மாண்பு, செப்புதற்கரிய பெருமை ஒப்புதற்கரிய சிறப்பு முதலியன ஒருங்கே

யமைந்த புனிதப்பதி புகழ்மிகுந்த பழநிப்பதியே யென்று கேள்வியானறிந்து அத்திருப்பதியை அடைந்து தண்டாயுதபாணியைத் தரிசித்து இன்பம் எய்தவேண்டுமென வெண்ணித் தனது பரிசனர்களுடன் பழநிமலைப்பதியைச் சேர்ந்தான். இங்ஙனம் சேர்ந்தசேரன் சண்முகநதியில் நீராடி நியமமுற்றிக் குமாரவேளைத் திருவாவினன்குடிக் கோயிலில் சென்று தரித்துப் பின்னர் மலையின்மீது ஏறத்தொடங்கினான். அப்பொழுது தனது தலைக்குமேல் வெள்ளியமேகம் பற்பல வுருவில் தவழ்ந்து செல்லும் இனியகாட்சியும், குரங்குகள் தங்கள் இளங்குட்டிகளுடன் உயர்ந்தபடிகளிலும் செங்குத்தான பாறைகளிலும், களிப்பின் மிகுதியால் தாவிக் குதித்தும், மலைப்பாங்கர் காய்த்துப் பழுத்துள்ள சிலவின் கனிகளைப் பறித்து அவற்றின் இனிய சுளைகளைப்பீறி யெடுத்துப் படிகளின்மீது வீசியெறியும் விளையாட்டும் தன்னை மகிழ்விக்க ஆயாசந் தோன்றுமலே மலையின் உச்சியை அடைந்து தண்டாயுதக்கடவுளின் சந்நிதானமடைந்து அன்பு மிகூரத் தனது இருகைகளையும் சிரசின் மீது குவித்து ஆண்டவனை உற்று நோக்கிவணங்கினன். அப்பொழுது தனது விழிகளுக்கு முருகப்பிரான் தன்னந்தனியனாய்த் தண்ணருட்கடலாய்த் தண்டமேந்திய கையனாய்ச் சைவக்கனியாய்க் கண்டவர் கனிந்துருகும் முகவிலாசத்துடன் அன்பின் வடிவில் நின்ற திருக்கோலமாக விளங்கினன். கண்விருந்தாய்ப் பொலியும் அவ்வினிய காட்சியை உள்ளமுருக உவந்த மனத்துடன் தரிசித்து இன்பவாரிதியில் ஆழ்ந்தனன். அப்பொழுது அவனது அகத்தில் சின்னஞ்சிறிய கோயிலில் சேவைசாதிக்கும் திருமுருகனைப் பெரியதொரு கற்றளியெடுப்பித்து அதில் எழுந்தருளுவிக்க வேண்டுமென்றும், ஆறுகால பூஜைகளுக்கும், திருவிழாக்களுக்கும் போதுமான பொன்னை



இராஜகோபுரம் முன்புறக் காட்சி.

யும், பூமிகளையும் தானஞ்செய்ய வேண்டுமென்றும் எண்ணம் எழ; அருகிருந்த தனது பரிசனர்களைக் கொண்டு பெரும் பொருட் செலவிட்டுக் கர்ப்பக்கிரக விமானம், அர்த்த மண்டபம் முதலான திருப்பணிகளைச் செய்விக்கக் கட்டளையிட்டும், ஆண்டவனது ஆறுகால பூஜைகளுக்கும், திருமஞ்சனங் கொட்டுவதற்கும், சந்தனஞ் சாத்துவதற்கும், அருச்சனைக்கு வேண்டிய வில்வதளம் பூமாலைகளுக்கும், பொருளாகவும், பூமியாகவும் தானமாக வழங்கி, அவை அழிவின்றி எக்காலமும் நிகழ்ந்து வருமாறு ஏற்பாடு செய்து விடை பெற்றுச் சென்றனர் என்ப.

இவ்வளவே, சேர வரசனது திருப்பணியைப்பற்றி நாமறிந்தவை.

## புலிப்பாணியும்—அவரது பரம்பரையும்.

புலிப்பாணி, போகநாதருடைய மாணவர்களில் முதன்மையுடையாரென்று அறியப்படுகிறது. இவ்வுண்மை போகர் தாம் பாடிய "ஏழாயிரம்" என்னும் நூலில், புலிப்பாணியை,

"தானுனை யின்னமொரு தன்மை சொல்வேன்
  தக்கான புலிப்பாணி தயை யுள்ளானே"
"கொள்ளவே யின்னமொரு மார்க்கஞ் சொல்வேன்
  கொற்றவனே புலிப்பாணி குண முள்ளானே
"பாரப்பா புலிப்பாணி பளிங் குள்ளானே"

எனவருஞ் செய்யுட்களில் போகர் புலிப்பாணியை மாணவர் முறையில் விளித்துக் கூறும் சொற் பிரயோகங்களால் உறுதிப் படுகின்றது. அல்லாமல்,


"புத்தியாய்க் கலியுகத்தில் சிலதுகாலம்
  புகழுடனே தானிருந்து சமாதி கொள்வாய்
சத்தியத்தைத் தவறாதே தம்பிரானே
  சதகோடி சூரியன்போல் ஞானங்கொள்ளு

வித்தகனே விற்பனனே விண்ணுள்ளேனே
விட்டகுறை தீருமட்டும் வையகத்தில்
புத்தியாய் நெடுங்காலம் தானிருந்து
புண்ணியனே சமாதிமுகம் புரிவீர்தானே" (968)

என்ற விருத்தப்பாவில் ஆசிரியர் மாணவர்க்கு ஆணையிடும் தன்மையினாலும், புலிப்பாணி போகநாதரது மாணவரென்று மேலும் வலியுறுவது காண்க.

"தானான புலிப்பாணி தகைமையோனே
தக்கான என்தேவர் சொன்ன நீதி
கோனான காலாங்கி வாக்குப் போலே
கொற்றவனே சமாதிமுகஞ் செல்வேனப்பா"

என்ற விருத்த அடிகளால் போகநாதர் ஆசிரியர் கட்டளைப்படி சமாதியடைந்தாரென்பது உறுதி பெறுகின்றது. இங்ஙனம் சதேக முத்தியடைந்த ஆசிரியர் போக நாதரது ஆணையின்படி புலிப்பாணி தண்டாயுதக் கடவுளை நியமந் தவறாது நித்தலும் பூசித்துவந்தார். அதனுடன் அருங்குரவர் போகநாதர் சமாதியையும் ஆராதித்து வந்தனர். அறுமுகனுக்குரிய ஷடாக்கிர மந்திரத்தை ஆசிரியர் உபதேசித்தபடி புலிப்பாணி விதிவழாது அநுஷ்டானங்கோணாது நியமமாகநின்று நித்தலுஞ் சபித்து உருவேற்றி வந்தனர். அதனால் மந்திரவசப்பட்ட திருமுருகன் தனது திருவருட்டன்மையைப் பிரகாசிக்கச் செய்தான். வேண்டுவார் வேண்டியதை விரைந்து பெற்றனர். அன்பர்கள் வரவு பன்மடங்கு அதிகரித்தன. ஆலயமுழுதும், படிகளின் மீதும், தீர்த்தக் கரைகளிலும், திருவீதிகளிலும், கந்தா! முருகா! சண்முகா! பழநியப்பா! தண்டபாணி! குமரா! குகா! கதிர்வேலா! கார்த்திகை மைந்தா! என்ற திருநாமங்கள் அன்பின் வயப்பட்டுக் குழைந்த மொழிகளில் பேராரவாரத்துடன் முழங்கின. பன்னீர், பால், இளநீர், பஞ்சாமிர்தம் முதலியவற்றால் அபிஷேகமும், சந்தன



ஸ்ரீபழநி தண்டபாணி தேவஸ்தானம் மடாதிபதி
ஸ்ரீமத் போகநாத புலிப்பாணி சுவாமிகள்.

விபூதிகளால் அலங்காரமும், விசேட தீபாராதனையும் முன்னிலும் பதின் மடங்கு மிகுதியாயின. உள்ளன்பும் உவகையும் பொங்க ஆண்டவனை ஆராக் காதலுடன் அடியார்கள் தரிசித்து அகமகிழ்ந்தார்கள். இங்ஙனம் பெருஞ் சம்பிரமத்துடன் ஆலய கைங்கரியம் நிகழ்ந்து வருகையில், புலிப்பாணியாருக்கும் ஆயுளின் எல்லை அடுக்கவே, அதனையுணர்ந்த அவர், தமது கருத்து வழிநின்று தமக்குத் தொண்டு புரிந்துவந்த "கன்னட உடையார்" என்னும் பெயரிய மாணவரின் பரிபக்குவத்தையறிந்து தமது ஆசிரியர் தம்மிடம் ஒப்புவித்த திருப்பணியை அவரிடம் ஒப்புவித்து ஆண்டவனுக்கு ஆறுகாலமும் தவறாது பூசைபுரியவும், ஆசிரியர் சமாதிக்குக் காலந்தோறும் வழிபாடியற்றவும் உத்தரவிட்டு ஆசிமொழிந்து, ஆசிரியர் ஆணையிட்டாங்கு தாமும் தமது யோகசாதன பலத்தால் யோக சமாதியில் அடங்கினர். இவரது சமாதி திருப்பழநிமலையின் மீதுள்ள போகர் சமாதிக்கு மேற்குத் திசையில் இருப்பதாகக் கூறுகின்றனர். புலிப்பாணிக்குப் பின் அவர் மாணவராக உபதேசம் பெற்று இறுதிக்காலத்தில் யோக சமாதியடைந்த கன்னட வுடையார் சமாதி காஞ்சு சுனைக்கருகிலும், அவருக்குப்பின் அம்மடத்தில் ஸ்தானம் வகித்து ஆதீனக்கர்த்தர்களாக விளங்கிச் சமாதியடைந்தவர்களின் சமாதிகள் இடும்பன்மலைக்கருகிலும், அடிவாரத்தில் அகாடியென்ற இடத்திலும் உள்ளன. புலிப்பாணியின் மாணவர் பரம்பரைக்குரிய திருமடம் மலையின் அடிவாரத்தில் பங்குனித் தேரடிக்கு எதிரில் இன்றைக்கும் நன்னிலைமையில் விளங்குகின்றது. இவ்வரலாற்றால், புலிப்பாணி போக நாதருக்குப் பின் பழநியாண்டவனுக்குப் பூசை புரிந்து மாணவருக்கு உபதேசம் செய்து ஆசிரியர் கட்டளைப்படி காலம் வருந்தனை

யுங் காத்திருந்து சமாதி நிலையடைந்தா ரென்பது விளக்க மாகின்றது.

புலிப்பாணியார் தமது ஜீவிய காலத்தில் தாம் கற்றுணர்ந்த வித்தைகளில் சித்துத் தன்மையில் பல அற்புதங்களை நிகழ்த்தினரென்று அறிந்தோர் பலர் உரைக்கின்றனர். அவைகளில் அவர் கொல்லுந்தன்மை யுடையதும், கொடிய குணம் வாய்ந்ததும், கோரைப் பல்லையும், கூரிய நகங்களைக்கொண்டதும் பதினாரடி இடத்தை ஒரே பாய்ச்சலில் பாயும் வல்லமை யுடையதுமான வேங்கைப் புலியை அதன் துடுக்கடக்கித் தம் சொற்படி நடக்கும் வாகனமாக்கி அதன்மீதுவீற்று, தமது திருக்கரத்தால் விஞ்சை மந்திரங்கொண்டு திரட்டிய திருமஞ்சனத் தீர்த்தத்தை பெடுத்து வந்து பழநியாண்டவனுக்கு அபிஷேகித்து ஆராதனை செய்தது விசேடமானது. இதுகாரணமே இவருக்குப் புலிப்பாணியெனப் பெயர் சிறந்ததெனக் கூறுவர். வேறுசிலர் புலிப்பாணி—புலிபோன்ற கையைஉடையவர்; அதுதான் அதற்குப் பொருத்தமான பொருள் என்று புகல்வதுடன் "பதஞ்சலி" "வியாக்கிரபாதர்" என்பவற்றிற்கு கூப்பியகையர், புலிக்காலர் என்பன பொருளாயிருப்பது போலவே புலிப்பாணி யென்னும் பதத்திற்கும் 'புலிக்கையர்' என்பதே போந்த பொருளென்றும் சான்றுங் கூறுவர்.

இதன் பின்னர், கன்னடவுடையார் ஆசிரியர் ஆணையிட்டாங்கு அன்புடன் ஆர்வம் பெருகச் சிலகாலம் சிவகுமாரனுக்கும், ஆசிரியர்கள் சமாதிகளுக்கும் அருந்தொண்டு புரிந்து தமது பேரன்பிற் குகந்த மாணவனுகவும், அணுக்கத்தொண்டனுகவுமிருந்து உதவிசெய்து வந்த "நயினுத்தை" என்னும் நாமகரணமுடைய தொண்டை மண்டலத்து "நற்குடி நாற்பதுனுயிரம்" கோத்திரத்து வேளாள குலத்து முதலியாரது சீரிய ஒழுக்கத்தையும், சிவபற்றை

யும், தேர்ந்த கல்வியையும், உண்மை அன்பையும், உறுதிப்பாட்டையும் செவ்வி தின் உணர்ந்து தாம் ஏற்று நடாத்தி வந்த சிவ திருத்தொண்டை அவர்வசம் அளித்து, இடையூறு நேராவண்ணம் இனிது நடாத்தி வருமாறு கட்டளையிட்டு, அவரது இளமைகண்டு, அவரைத்திருமணஞ் செய்துகொண்டு இல்லற வாழ்க்கையில் இருந்தபடியே அய்யனையும், ஆசிரியர்களது சமாதிகளையும் பூசித்துவருமாறு கூறி அவற்றிற்கு வேண்டிய மார்க்கங்களையும் முறைகளையும் போதித்துத் தாமும் தண்டபாணியின் திருவடிக் கமலத்தைச் சேர்ந்தார். இங்ஙனம் செவ்வேளின் திருவடி நீழலையடைந்த கன்னடவுடையார் தமது ஆசிரியரின் ஆசீர்வாத பலத்தால் தாமும் "புலிப்பாணி பாத்திர வுடையார்" என்று பெயர் சிறந்து விளங்கினரென்றும், அச்சிடாத ஓலைச் சுவடியிலுள்ள புலிப்பாணி மடத்துக் "கோடி வழி" என்னும் நூலில் கூறப்பட்டிருக்கிறது.

பரம்பரைச் சைவரும், சேக்கிழார் திருமரபில் தோன்றிய வருமான தொண்டைமண்டலத்து நயினாத்தை முதலியாரும், தமது ஆசிரியர் உத்தரவுப்படியே ஆண்டவனுக்குப் பூசைபுரிந்தும்; போகரது சிம்மாதனம், அஷ்டமாசித்தி நவதுர்க்கை, புவனேஸ்வரி, மரகதலிங்கம், வலம்புரிச் சங்கம் ஆகியவற்றை ஆராதித்தும், நிவேதனம் வைத்து வழிபட்டும் நித்தலும் தொழுது வந்தனர். இந்நயினாத்தை முதலியாருக்கு "லோககுரு நயினாத்தைப் புலிப்பாணிப் பாத்திர வுடையார்" என்ற காரணச்சிறப்புப் பெயர் அவரது குரு சுவாமிகளால் அவரது மேலான தகுதிகண்டு அளிக்கப்பட்டதென்று மேலே காட்டிய போகர் மடத்து ஓலைச் சுவடியில் குறிக்கப்பட்டுள்ளது. இவருக்குப் பின்னர் அம்மடத்து அதிகாரம்பெற்று பூசகர்களாக விளங்கிய ஆதீன கர்த்தர்கள் லோககுரு என்ற பட்டத்தை மட்டும் விடுத்து

வேலீஸ்வரப் புலிப்பாணி சுவாமிகள், காரணப் புலிப்பாணி சுவாமிகள், குமாரசாமி புலிப்பாணி சுவாமிகள், பாணீஸ்வர புலிப்பாணி சுவாமிகள், ஆறுமுகப் புலிப்பாணி சுவாமிகள், பழனியப்ப புலிப்பாணி சுவாமிகள், பாலகுருநாத புலிப்பாணி சுவாமிகள் என்ற பெயர்களை வைத்து வந்தார்கள்.

இப்பொழுது அப்பட்டத்திலுள்ள ஆதீன கர்த்தருக்குப் 'போகநாத புலிப்பாணி' சுவாமிகள் என்று பெயர்.

இங்ஙனம் வழக்கத்திற் கொண்ட பெயர்களால் இச்சந்ததியாரே புலிப்பாணியின் திருமடத்திற்குப் பூர்ண பாத்தியஸ்தர்களும், போக நாதர் சமாதியைப் பூசிக்கும் உரிமையுடையவர்களும் என்பது உறுதிபெறுகின்றது. போக நாதர் மடத்திற்கு பழநி, பாலசமுத்திரம், ஆய்க்குடி என்னும் ஜமீன்தாரர்களாலும், அவர்கட்குப் பின் விளங்கிய சிவநேசர்களாலும் திருமடத்துப்பூசை நிவேதன முதலியவைகட்குச் சர்வமானியமாகப் பல பூமிகளைத் தானம் கொடுத்ததாகத் திருமடத்துள்ள பழைய ஏட்டுச் சுவடியில் எழுதப்பட்டிருக்கிறது. மதுரை அரசர் திருமலைநாயக்கர் ஆட்சியில் அவரது அமைச்சர்களில் ஒருவரும் தளவாய் என்ற பட்டம் பெற்று விளங்கியவருமாகிய "இராமப்ப அய்யர்" அவர்கள் அதிகாரத்திற்குப் பின்னரேயே போகர் மடத்து மானியபூமிகள் பல்வேறு காரணங்களால் பராதியாகப் போயிற்றென்று கூறப்படுகிறது. இதனால், முன்னர் விசேடமாக நடைபெற்றுவந்த நித்ய பூஜை, நிவேதனம் முதலியன ஒடுங்கி இப்பொழுது சாமான்யத்திலும் சாமான்யமாக நடைபெற்று வருவதற்காயிற்று.

மேற்குறித்த திருமடத்தின் ஆதீனக் கர்த்தர்களுக்குப் பழநி தேவஸ்தானத்தில் பிரதான மானதோர் பாத்தியதையைத் தொன்றுதொட்டே அளித்து அது இன்றளவும் மாறாது நடந்துவரும்படி கவனிக்கப்பட்டு வருகிறது. அது

நவராத்திரிவிழாவில் பத்தாம்நாள் இரவு வன்னிமரத்திற்கு யானைமீதுள்ள அம்பாரியில் வீற்று அம்புபோடும் உரிமை. இவ்வுரிமை தென்னிந்தியாவிலுள்ள எந்த குகாலயத்திலும் வழக்கத்திலில்லை. இப்பழநி க்ஷேத்திரத்தின் முருகராலயத்தில் மட்டும் வேளாளர் தொல்குடியில் சைவம் வளர்க்கும் திருமரபில் தோன்றிய பரம்பரைப் பூசகர்க்குச் சிறப்பான இப்பாத்தியதைக் கொடுத்திருப்பது மிகவும் பாராட்டற் குரியது. புரட்டாசிமாதம் பிரதமை தொடங்கி நவமித்திதி வரையில்9-நாட்களும், திருமலைமீதுள்ள போகர் சந்நிதியில் வைக்கப்பட்டிருக்கும் நவதுர்க்கைகளில் ஒவ்வொன்றாய் ஒவ்வொருநாளும் அடிவாரத்திலுள்ள புலிப்பாணி மடாலயத்து பூசை வீட்டுக்குக்கொணர்ந்து பூசைகள் நடாத்திப் பத்தாம் நாளிரவு பழநியாண்டவன் சந்நிதியிலுள்ள பராசத்தி வேலைப் பல்லக்கில் எழுந்தருள்விப்பதற்கு முன்னமேயே புலிப்பாணி மடத்துப் பூசகரை ஆலயத்தின் பதிவுப்படி உபசரித்து வழக்கமாக அளிக்கப்படும் பரிவட்டம் மாலை, சந்தன முதலியவற்றால் அலங்கரித்துப்பின்னர் பராசத்தி வேலைப் பல்லக்கில் எழுந்தருள்வித்து அடிவாரம் இறக்கி வைடி மடத்து ஆதீனக் கர்த்தரை அலங்கரிக்கப்பட்டுள்ள யானைமீது அமைக்கப்பட்டிருக்கும் அம்பாரியில் அம்பும் வில்லுடன் இருத்திப் பல்லக்குப் பின்னும், யானை முன்னுமாக எடுபிடி சின்னங்கள் இலங்க, மத்தாப்பு தீவட்டி முதலியன பிரகாசிக்கப் பெரியமேளம் இனிமையாய் ஒலிக்க, மெதுவாக அடிவாரத்தினின்றும் ஊர்வலமாகச் செலுத்திப் பழநிப்பட்டணத்து முத்துக்குமாரர் ஆலயஞ் சேர்த்தி,பவனிகொண்டவர்கள் ஆலயத்தை யானை முதலியவைகளுடன் திருவலஞ்செய்து, தங்கக்குதிரை வாகனத்தில் விசேட அலங்காரத்துடன் எழுந்தருளச் செய்திருக்கும் முத்துக்குமார மூர்த்தியையும் உடன் கூட்டிப் புறப்பாடு

செய்வித்து ஆலய அதிகாரிகளும், அடியார்களும், மற்றும் பெரியாரும் உடன் தொடர்ந்துவரப் பழநிப்பதிக்கு நேர் வடக்கில் 3-மைலிலுள்ள 'கோதைமங்கலத்து'க்கு ஊர்வலச் சிறப்புடன் சென்று 'கோதை ஈஸ்வரன்' ஆலயத்தில் அவ் வூர்ச்செட்டி மக்களால் வழக்கமாகச் செய்துவரும் மண்டகப்படி கொண்டபின் புலிப்பாணியார் வன்னி மரத்திலும், வாழை மரத்திலும், அம்பெய்கின்றனர். இதன் பின்னர் உற்சவ மூர்த்திக்கு தீபாராதனை நடாத்தி ஆங்குனின்றும் ஊர்வலத்துடனேயே மீண்டும பழநிப்பதியை அடைந்து நான்கு வீதிகளிலும் பவனி வந்து பெரிய நாயகியம்மன் கோவில் நவரங்க மண்டபத்தில் ஊர்வலத்தை நிறுத்திச் செய்ய வேண்டிய சடங்குகள் செய்ததும் மாமூல் மிராசுப்படி முதலில் புலிப்பாணிப் பூசகர்க்குப் பரிவட்டங்கட்டி மாலை சந்தனங் கொடுத்து மரியாதை முடிந்தபின் மற்றையோர்க்கு முறைப்படி அவரவர் தகுதிக்கேற்ப உபசாரஞ் செய்வது ஆலயத்தின் பதிவாக விருக்கிறது. இதனுடன் தசரா விழாவும் பூர்த்தி பெறுகின்றது.

இவையே யன்றி போகர்—புலிப்பாணி மடத்து ஆதீனத்தார்க்கு வாழ்விலும், தாழ்விலும் ஆலயத்தினின்றும் விசேடமான உபசாரங்களுடன் பரிவட்டம் அளித்து ஆதரிப்பவைகளும் உண்டு.

இவ்வளவே போகர்—புலிப்பாணி மடத்து ஆதீன கர்த்தர்களைப்பற்றிய நாமறிந்த செய்தி.

## பாளையகாரர்களும்—அவர்கள் பழநி யாண்டவனுக்குச் செய்த பற்பல திருப்பணிகளும்.

ஓபளக் கொண்டம நாயக்கன் அய்யன், கோசல சின்னேப (சின்னேபள) நாயக்கன் அய்யன் என்னும் பெயரிய



ஸ்ரீ புலிப்பாணி சுவாமிகள் திருமடம்.

னர் "வால சமுத்திரம்" "ஆய்க்குடி" என்னும் ஊர்களை முதன் முதல் ஸ்தாபித்தவர்கள் ஆவர். இவர்கள் ஆதியில் "டில்லி பாட்சா" என்னும் முகம்மதிய சக்கரவர்த்தியின் சம்ஸ்தானத்தில் சிறுபடைக்கும், குதிரைப்பந்திக்கும் "சர்தாராக" அதிகாரம் வகித்திருந்தனர். இவ்வீரர்கள் தங்கள் ஒப்பற்ற திறமைகளினால் "பெரிய பந்து" "சின்ன பந்து" என்ற பெயர்களுடன் பராக்கிரமமுஞ் சிறந்த சிற்றரசர்களை வென்று, அவர்கள் செலுத்தாதிருந்த திறைப் பணத்தை அதாவது கப்பத் தொகையைச் செலுத்தும்படி செய்தார்கள். இவர்களது இணையற்ற வல்லமைக்கு வியந்த அரசர் பெருமான், இவ்வீரர்கட்குப் பல விருதுகளையும், பொருள்களையும், பொன் பட்டாடைகளையும் மிகுதியாகச் சன்மானித்தான். பெற்றுக் களித்த அவர்கள் சிறப்பாக வாழ்ந்து வந்தனர். சிறிது நாளில் பாட்சா அவர்கட்கு உண்டான நெறியற்ற எண்ணத்திற்கும், அநீதியான உத்தரவுக்கும் பொறாது, அங்கு ஒரு கணமும் இருக்கச் சம்மதியாது, அர்த்த ராத்திரியிலேயே குடும்ப சகிதமாய் யாருடனும் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டு வேற்றூருக்கு வழி கொண்டனர். இடையில் தங்களைக் குறுக்கிட்ட பெரு வெள்ளத்தைத் தங்கள் வழிபடு கடவுளின் திருவருள் சகாயத்தைக்கொண்டு கடந்து, தங்களைப் பின்தொடர்ந்து வந்த பாட்சாவின் சேவர்கள் கைக்கு அகப்படாமல் இக்கரை சேர்ந்து, ஆனைகுந்தி நகரடைந்து, விஜயநகரத்து சாம்ராஜ்யத்து விருப்பாட்சிராயர் அல்லது முகுந்தராயர் சமுகஞ்சார்ந்து தங்களை இன்னாரென்று தெளிவுபடக்கூறி, அரசரது அன்பைப்பெற்று, ஆஸ்தானத்தில் தகுதியான உத்தியோகத்தில் அமர்ந்து இனிது வாழ்ந்து வந்தார்கள். இங்ஙனம் வாழ்ந்து வருகையில், அரசன் இவர்கள் பராக்கிரமத்தைப் பரீட்சித்துச் சர்வ மானியமாக ஆண்டனுப

வித்துக் கொள்ளும்படி 'அஹோபலம்' என்ற கிராமத்தை இனமாகக் கொடுத்தனன். பெற்ற இவர்கள் அதில் விஷ்ணு கோவிலிருப்பதைக்கண்டு மகிழ்ந்து அதனை நன்றாகப் புதுப் பித்துப் பேராலயமாகக் கட்டிப் பிரபலப்படுத்தி ஓர் யாத் திரை ஸ்தலமாகச் செய்தார்கள். இவ்வாறு இவர்கள் இன்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கையில், ஓபளக்கோண்டமன்—கோசலசின்னேபன், 'இரட்டையம்பாடி தொப்பினன்'என் னும் மூவரும் ஓரிடத்தில் கூடி உறங்கினார்கள். இவர் களுள் தொப்பினனைத்தவிர மற்றிருவர் சொப்பனங்களில் எல்லாம் வல்ல இறைவனும், ஏறுமயில் வாகனனும், வடி வேற்கரத்தனும், வள்ளி காந்தனும், லோகபந்துவும், அடி யார்களை அவர்களது நல்வினைப் பயனுக்கேற்ப வலுவிற் சென்று ஆட்கொண்டருளும் அருட்கடலும், சிவகிரி யென் னும் திருமலைக்குத் தலைவனுமாகிய தண்டபாணிக் கடவுள் சைவம் பழுத்த கனியெனும்படி பண்டாரத் திருக்கோலம் பூண்டு இவர்கள் முன் தோன்றி, அன்பர்களே! நாம் உமது நலங்கருதி கட்டளையிடுவதாவது:—

"திருவாலவாய் என்னும் தென்மதுரைக்குத் தெற்கில் எண்காத தூரத்தில், "பழநிமாமலை" என்னும் பெயர் சிறந் ததும், அகத்தியராலும், அவரது அன்பிற்குரிய இடும்பா சூரனாலும் வழிபடப்பட்டதுமான சிவகிரி யென்னும் திரு மலையில் நாம் இனிது வீற்றிருக்கின்றோம். அத்திருமலை யைச் சுற்றிலும், அடர்ந்துள்ள காடுகளைத் திருத்தி நல்ல நாடுண்டாக்கியும், அன்பர்கள் மகிழ்ச்சியுடன் குடியேறுவ தற்குத் தகுதியான வாசஸ்தலமாகச் செய்தும், தேவர் கோட்டத்தைத் திருத்தியும், தேர்த் திருவிழா முதலி யன சிறப்புடன் நடைபெறுவதற்குத் தக்கன புரிந்தும் மறவாது நம்மை நோற்றும், இஷ்ட சித்திகளை இனித டைந்தும், இறுதியில் எம் பதம் சேருக" என்று கூறி,

மேலும் மொழிந்ததாவது:—"இச்சம்ஸ்தானத்து வீரர்க ளில் சமர்த்தரான கொட்டியத்து நாகம நாய்க்கர்" என்னும படைத்தலைவர், மதுரைமா நகருக்கு விரைவில் புறப்பட வேண்டிய அவசர காரியம் வருகிறது. அதனைக் காரண மாகக் கொண்டு உங்களையும் உடன் புறப்படுமாறு செய்கி றோம். அரசன் உங்களுக்கிடும் கட்டளையை நிறைவேற்றிய பின் நீவிர் நமது ஆணையின்படி நடந்து எமது அன்பிற் குரியராகுக" என்பதே.

அவ்விரவில் தங்களுக்குண்டான அதிசய சொப்பனத் திற்கு அகமிக மகிழ்ந்த இவர்கள் அதிகாலையில எழுந்த தும், அச்சொப்பன நிகழ்ச்சியைத் தங்களுக் குரித்தான வர்களிடத்து இனிமையுறமொழிந்து அடங்கா ஆர்வத்தால் தமது ஆண்டகையாகிய அரசரிடத்தும் சென்று கூறி அதிர்ஷ்ட வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். நாலைந்து நாட்களுக்குள் மதுரை நாய்க்க மன்னர்களுக்கும், ஹொய்சளர், அல்லது பல்லவர்கட்கும், நாடுபிடிக்கும் ஆசையால் யுத்தம்நேர்ந்ததாகவும், அதில் ஹொய்சளர் அல் லது பல்லவர்கள்படை நாய்க்க மன்னர் படையை வென்று விடக் கூடுமென்ற தோற்ற மிருப்பதாகவும், அங்ஙனம் நேராமல் வெற்றி நாய்க்க வரசர் பக்கலுண்டாவதற்குப் படையையும், அப்படையை நடாத்துதற்குத் தேர்ந்த யுத்த வீரர்களையும், அவ்வீரர்கட்குத் தலைவரையும் தாமதி யாது உடனே அனுப்புமாறு நாய்க்க மன்னர் பிரதானி யிடத்திருந்து விஜயநகரத்து இராயர் சம்ஸ்தானத்துக்கு ஓலை வந்தது. அதுகண்ட அரசர் பெருமான் தமது படைத் தலைவர்களில் தலைசிறந்த "கொட்டியத்து நாகம நாய்க்கரை" யும், அவருக்கு உறுதுணையாக யுத்தத்திறமை யுள்ளவர் களும், ஆங்குச் சமீபத்தில் டில்லி பாட்சாவினிடத்திலிருந்து வந்து தங்கியுள்ளவர்களுமான ஒபளக்கொண்டம நாய்க்கர்,

சின்னோப நாய்க்கர் இரட்டையம்பாடி பொட்டித் தொப்பினர் என்னும் மூவரையுங் கூட்டி நாகம நாய்க்கருக்கு உதவி வீரர்களாக விருந்து போர்வென்று வெற்றியுடன் வருமாறு உத்திரவிட்டனன். அவர்கள் அரசன் ஆணையிட்டாங்கு படைகூட்டிப் பிரயாணப்பட்டு விரைந்து பாண்டிய நாட்டு மதுரைமா நகரடைந்து நாய்க்கவரசர் படைக்கு ஏற்ற சமய மறிந்து உறுதுணை புரிந்து பகைவரைத் தோற்கடித்து தமரசனுக்கு வெற்றி விளைவித்தார்கள். வெற்றியுண்டான தற்காக அவ்வரசன் அவ்வீரர்களுக்குத் தகுதியான சன்மானஞ் செய்து மிகப் பாராட்டினன்.

ஒரு வாரங் கழிந்தபின் ஐயளக் கொண்டம நாய்க்கர் முதலியோர் தமது படைத்தலைவர் கொட்டியத்து நாகம நாய்க்கரைக் கண்டு தங்கள் செல்வதற்கு விடைதரக் கேட்ட போது அவர், 'நாம் இங்குச் சிலகாலம் தங்கியிருந்து வருகிறோம்; நீவிர் சென்று நமது அரசருக்கு வெற்றிச் செய்தியை விவரப்பட விளம்புங்கள்' என்று கூறினர். அதன்படியே அவர்கள் திரும்பி விஜயநகரஞ் சேர்ந்து விஷயத்தை விவரித்தனர். அரசன் கேட்டு மகிழ்ச்சி யுற்றான்.

பின்னர் இவர்கள் தங்களுக்கு முன்னர் உண்டாகிய சொப்பன நிகழ்ச்சியை அரசனுக்கு நினைவூட்டி ஆண்டவன் ஆணைப்படி நடந்து கொள்வதற்கும், கொங்கு நாட்டு வைகாவூர் பழநிமா மலைக்குச் செல்வதற்கும், அங்குள்ள பிரதேசங்களைக் காடு திருத்தி நாடாக்குவதற்கும், அவற்றைப் பரிபாலித்து வருவதற்கும் உரிமையும், உத்தரவும் தர வேண்டுமென்று விநயமாக வேண்டிக் கொண்டனர். அப்பொழுது அரசருள்ளத்திலும், தமிழுக்குத் தெய்வமும், குறிஞ்சி நிலக்கடவுளுமாகிய குமரவேள், இவர்கள் மீது தண்ணருள் கொண்டு, இவர்களைக்கொண்டே பழநிப்பதியைப் புதுப்பிக்கவும், சிவகைங்கர்யம் சீர்பெற நடை

பெறவும், அப்புண்ணியத்தின் பயனாக இவர்களைத் தமது மெய்யடியார்களாக ஆட்கொள்ளவும் கருதியிருப்பது தெற்றெனப்பட்டது. படவே அரசனும் அதிசய சிந்தையனாகி, அகமகிழ்ந்து இவர்கட்கு உபசார மொழிகள் கூறி இவர்கள் விரும்பியவாறே கொங்குப் பிரதேசங்களைக் கைக்கொள்ளவும், அவற்றைப் பிரபலப்படுத்தவும் உத்தரவுதந்து மேலும் வேண்டிய வண்டி, வாகனம், வஸ்துக்கள், பொன், பட்டாடை முதலியவற்றையும், மற்றும் பல விருது வரிசைகளையும் ஏராளமாகப் பூரித்த மனதுடன் சிறக்க ஈந்து விடை கொடுத்தான். இவர்கள் அரசன் அளித்த அரிய விடையுடனும், தமது பெண்டு பிள்ளைகளுடனும், பந்து பரிஜனர்களுடனும் பிரயாணப்பட்டுப் பல நாடுகளையும், காடுகளையும் வனாந்திரங்களையும் நதிகளையுங் கடந்து திருவருட்டுணையால் சுகமே தமிழகுத்து. கொங்கு வைகாவூர் நாட்டினைச் சேர்ந்து வராக கிரிச் சார்பின் ஓர்பால் சவுகரியமான ஓரிடத்தைத் தேர்ந்து அங்குத் தங்கினர். இங்ஙனம் இவர்கள் முதன் முதல் தமிழ் நாட்டிற்கு விஜயஞ் செய்த காலம் கலியுக சகாப்தம், 4500 ஸ்ரீமுக வருடம் சித்திரை மாதத்திற்குச் சாலிவாகன சகாப்தம் 1321 ஆகின்றது. அது முதல் இன்றுவரை கணக்கிட்டால் மொத்த ஆண்டுகள் 532 ஆகின்றது.

இவ்வாறு இவர்கள் தங்கிய இரவிலேயே திருமுருகன் இவ்விருவர்களுடைய சொப்பனங்களிலுந் தோன்றி அன்பர்களே! எமது சிவகிரியின் மீது சமாதிகொண்டுள்ள போகநாதர் சமாதியையும், எம்மையும் பூசிக்கின்ற பூசகர் "புலிப்பாணிப் பாத்திரவுடையார்" என்னும் பெரியார் இருக்கிறார். அவரை நீவிர் சென்று காணுங்கள். அவர் உங்களுக்காவன வற்றிற்கு உறுதுணையாயிருந்து உதவி புரிவார் என்று உத்திரவிட்டு மறைந்தனர்.

விடிந்ததும் அவர்கள் மலர்ந்த முகத்துடன் எழுந்து நீராடி நியமமுற்றி வெண்ணிய திருநீற்றை விளங்கவணிந்து உருத்திராக்க மாலைபூண்டு, தூயவுடையுடன் தமது பரிசனர்கள் புடைசூழ மலைமீது வழிகண்டு சென்று முதலில் தண்ணருட் கடலாகிய தண்டாயுதக்கடவுளைத் தெரிசித்து வணங்கித் தொழுதபின், புலிப்பாணிபாத்திரவுடையாரைத் துர்க்கையம்மன் சந்நிதியில் (இதனை இப்பொழுது போகர் சமாதி நிலயமென்று கூறுகின்றனர்) சென்றுகண்டு வணங்கினர். அவர் இவர்கள் வருகைக்கு வியந்து மகிழ்ந்து தமக்கும் இரவில் தங்களைப்பற்றிச் சொப்பனம் உண்டாயிற்றென்றும், அச்சொப்பனச் செய்தி:—வடக்கிருந்து கண்ணப்பர் வமிசத்துதித்து வால்மீகி முனிவர் கோத்திரமுடைய அன்பர்கள் வராககிரியில் வந்து தங்கியுள்ளார்கள். அவர்களில் 'கோசல சின்னோப்பன்' 'ஒபளக்கொண்டமன்' 'இரட்டையம் பாடித் தொப்பினன்' என்பவர்கள் பிரதான புருஷர்கள். அம்மூவரும் உம்மைக்காண வருவார்கள் அவர்கட்கு ஆதரணை கூறியும், வேண்டுவனவற்றிற்கும், அவர்கள் ஆற்றவிருக்கும் அரும்பணிகட்கும், நகர நிர்மாணங்கட்கும் வழிதுறைகளும், ஆலோசனை முதலியவைகளும் கூறவேண்டுமென்பதுமாம்' என்று கூறி, பின்னும் கூறியதாவது:—'உமது நல்வினைப்பயனே உங்களை இங்குவரக் கூட்டிவைத்ததென்றும், ஆண்டவன் உங்களிடத்து அன்பு செலுத்தியிருக்கிறுனென்றும், உங்களைக்கொண்டே ஆலயத் திருப்பணிகள் நிறைவேற்றத் திருவுளங்கொண்டுள்ளதென்றும், அவனது திருவுளச்சித்தப்படி நடந்து பேரன்பிற்குப் பாத்திரமாக வேண்டுமென்றும் எடுத்து மொழிந்து திருநீறளித்து ஆசிர்வதித்தனர்' என்பதே. இவைகேட்டு மகிழ்ந்த அம்மூவரும், மீண்டும் ஒருமுறை அன்பு பெருக ஆண்டவனை ஆராக் காதலுடன் தரிசித்து அட்டாங்க நிலந்தோயப்

பன்முறை வீழ்ந்து பணிந்தெழுந்து விடைகொண்டனர்.

பின்னர், நன்னாள் ஒன்றில் சின்னேப நாயக்கர் அவர்களும் ஒபளக்கொண்டம நாய்க்கர் அவர்களும் பாணி பாத்திரவுடையாரை உடன் வைத்துக் கொண்டு முதலில் சின்னேபன் அவர்கள், சிவகிரிக்குத் தென்மேற்கு மூலையில் 'பாலிமா நதி'க்குக் கீழ்ப்புறத்திலும், இரண்டாவது ஒபளக்கொண்டமன் அவர்கள் சிவகிரிக்குக் கிழக்கிலும் சத்திகிரிக்கு அடுத்ததுமான நல்லதோரிடத்திலும் ஊர்கள் உண்டாக்குவதற்குப் "பாலேக்கால்" நடச்செய்வது நன்மையானதென்று தீர்மானித்து அவ்வாறே பாலேக்கால் நாட்டுவித்தார்கள். முன்னவர் தமது இஷ்டதெய்வமாகிய "வாலாம்பிகை"யின் பெயரைத் தாம் எடுப்பிக்கும் ஊருக்குப் பெயராக வைப்பதெனக் கருதி அதன்படியே அவ்வூருக்கு "வாலசமுத்திரம்" என்ற பெயரையும், பின்னவர் தாம் நவீனமாக எடுப்பிக்கும் பதிக்கு "ஆய்க்குடி" என்ற பெயரையும் இடுவதென்று சங்கற்பித்தபடி அப்பெயரையே அவைகட்டு வைத்தனர். பின்னர் அவ்விரண்டூர்களையும், நிர்மாணிப்பதற்குக் காடுகளைத் திருத்தி, நாடுகளாக்கியும், அவைகளில் தங்கள் தலைமைத் தகுதிகளுக்கேற்ப அரண்மனைகளைப் புதுக்கியும், அப்புதிய ஊர்களில் அயலிலுள்ள மக்களைக் குடியேற்றுவித்தும், தாங்கள் தனிவிடத்திருந்து சிறிது சிறிதாக ஊர்களை விர்த்திசெய்தும ஆனபின் தமது ஆண்டகைகளாகிய விஜயநகரம். மதுரை சம்ஸ்தான அரசர்கட்குத் தாங்கள் புதுக்கிய ஊர்களைப் பற்றியும், அரண்மனைகளைப்பற்றியும் அறிவித்து அவர்கள் அன்புகூர்ந்து சம்மதியளிக்கப்பெற்றபின் அவ்வரண்மனைகளில் குடிப்புகுந்து அதிகாரத்தைக் கைக்கொண்டு அப்பிரதேசங்களை ஆட்சிபுரியத் தொடங்கினார்கள். இங்ஙனம் ஆட்சிபுரியத் தொடங்கியவர்களுள், சின்னேப நாய்க்கன் அவர்

களுக்கு ஓபளக்கொண்டம நாய்க்கன் அவர்கள் மைத்துனக் கேண்மையுடையவராவர். இச்சமீன்தாரர்கள் வால்மீகி முனிவர் கோத்திரரும், காளத்தியப் பருக்குச் செலுத்து தற்கரிய பேரன்பைப் பெருக்கச் செலுத்தி, நாளாறில் கண்ணிடந்தப்பி இறைவனால் முத்திவீடு பெற்ற சிவச் செல்வர் கண்ணப்பர் திருமரபில் தோன்றியவரும் ஆவர். இக்காரணத்தினால் இவர்களை வேடுவகுலத்தினர் என்று கூறுகின்றனர்.

இவர்களும், இவர்களுக்குப் பின்னர் தோன்றியவர்களும், சிவமணங்கமழும் தமது திருமரபின் செயலுக்கேற்பவே, தமிழ்த்தெய்வமும், தங்களுக்குத் 'திருமருகனு' மாகிய செவ்வேளினிடத்துப் பேரன்புகொண்டு அவனது திருப்பணியாற்றுவதே சிறந்த சிவ தருமமெனக் கருதி அவைகளை மனோ வாக்குக் காயங்களால், அதாவது திரிகரண சுத்தியாய்க் கணித்தற்கரிய பல்வேறு இன்றியமையாத கைங்கரியங்களைச் சிறக்கச்செய்து திருமுருகன் திருவடி நிழலைச் சேர்ந்தார்கள். மற்றும் அம்மரபில்தோன்றி அதிகாரம் நடாத்திய சிலரும், முன்னோர் சென்ற அடிச்சுவட்டைப் பின்பற்றியே அவர்கள் ஆக்ஞைபிட்டுச்சென்ற அரும்பணியை நிறைவேற்றி ஆண்டவன் அடிக்கமலத்தில் அடங்கினர்.

இங்ஙனம் திருவடி நீழலடைந்தவர்கள் திருப்பணிகள் இன்னின்னவை யென்பதை அன்பர்கள் அறியுமாறு விவரப்பட இதன் கீழ்த் தருகிறோம்.

## திருப்பணிகளின் விவரம்.

இத்திருப்பணிகளைப் பற்றிச் சிலர், கன்னபரம்பரைச் செய்தியைத் தவிர வேறு ஆதாரங்களைக் கொள்ளாமலே தோன்றிய விதமெல்லாம் திரித்துக் கூறுகின்றனர். ஆனதால், அவைகள் நம்பத்தக்கனவாயில்லை. நாம் இது சம

பந்தமான ஆதாரங்களைத் தேடியபோது நமக்கு இரண்டு கையேட்டுச் சுவடிகள் கிடைத்தன. அவைகளில் ஒன்று **பழநி புலிப்பாணி மடத்தது.** மற்றொன்று **கர்னல் கானல் மக்கன்ஸி துரை** அவர்களது **"சர்வியர் ஜர்னல்"** இவை களின் துணைகளைக் கொண்டே நாம் ஜமீன் அவர்களது திருப்பணிகளை விவரமாக வெளியிடத் துணிகின்றோம்.

இத்திருப்பணிகள் செய்தவர்களில் முதன்மையாக யுடையவர் **"வாலசமுத்திரம் ஜமீன்தாரும்"** அவருக்குப்பின் தோன்றிய சந்ததியார்களுமே யாவர். இவர்கள் தண்டா யுதக் கடவுளிடத்துக் கொண்ட மெய்யன்பும், உண்மைப் பக்தியும் உரைத்தற்கரியது. முன்னோரும், அவர் மொழி தவறாத பின்னோர்களும் திருமுருகன் திருவாலயத் திருப் பணிகளைச் சிறக்கச் செய்திருக்கின்றனர். இவர்கள் சீரிய இம்முயற்சியில் செல்லாதிருப்பின், இத் தென்பழநித் தலத்தின் திருவாலயம் இவ்வளவு சீரும், சிறப்பும் அடைந் திருக்க மாட்டா. ஜமீன் மூலபுருஷர் சின்னோப நாயக்கன் அய்யன் அவர்கள் திருப்பெயரை அவர்கட்குப்பின் தோன் றியவர்களெல்லாம் ஞாபகார்த்தமாக வைத்திருப்பது, தங் கள் முன்னோர்களிடத்து அவர்களுக்குள்ள அன்பையும் மதிப்பையும் வெளியிடுகின்றது. திருப்பணிப் பட்டியில் **வேலாயுத சின்னோபன், வடிவேல் சின்னோபன், விஜயகிரி சின்னோபன், விஜயகிரி வேலாயுத சின்னோபன், கோடை வேலசின்னோபன், குமார சின்னோபன்** என வரும் பெயர் கள் காணப்படுவது இவற்றிற்குச் சான்றாம். இனி, இவர் கள் திருப்பணிகளைக் கூறுவாம்.

தலைமைச் சமீன்தார் **கோசல சின்னோபன்** அவர்கள், **சிவகிரியின்** அடிவாரத்தைச் சீர்படுத்தியும், மலைமீது சேரர் கோனால் தண்டபாணிக்குக் கட்டுவிக்கப்பட்ட கர்ப்பக்கிர

கத்தையடுத்ததும், முன் மண்டபத்தைச் சார்ந்துள்ளதுமான துவாரபாலகர் மண்டபத்தையும், அதற்கு நேர் எதிரில் இருப்பதுமான நவரங்க மண்டபத்தையும் சின்னக்குமாரர் சிற்றாலயத்தையும், ஆறுமுகக் கடவுள் ஆலயத்தையும், அவரது வாகனமாகிய மயில் மண்டபத்தையும், (இது இரண்டாம் பிரகாரம் தெற்குப்பக்கத்தில் நடுமையத்திலுள்ளது) நவதுர்க்கைகள், நவவீரர்கள் எழுந்தருளியுள்ள சிற்றிடத்தையும், திருப்பள்ளியறையையும், இராய கோபுரத்தை யடுத்துள்ள நாச்சிமார் கோயிலையும் பழநிப் பட்டினத்தில் பெரிய நாயகியம்மன் கோவில் தெற்கு வாசலுக்கு நேரிலுள்ள கோசலர் விநாயகர் கோயிலையும் (இப்பொழுது இக்கணபதியிருக்கும் இடத்திற்குக் கோசல விநாயகர் தெரு என்று பெயரிடப்பட்டிருக்கிறது) ஆண்டவன் காரியங்களுக்கு உபயோகமாக விருக்கும் பொருட்டு கட்டுவித்தார். வேறுசிலர், இத்திருப்பணிகளைச்சமீன் சுடுமபத்து "மாதக்காள்" என்னும் பெயரிய அம்மையார் கட்டுவித்தார் என்று கூறுகின்றனர்.

## 3-ஆம் பட்டம்.

---

காகிலவடவாட சின்னோபன் அவர்கள்: இவருக்குக் கடுப்பில் சின்னோபன் என்பது மற்றொரு பெயர். இவர் இடும்பன் கோவில் குராவடி குழந்தை வேலவருக்கும், (இவரைக் கும்பினி வேலாயுதன் என்றும் கூறுவர்) ஷை ஆலயத்தின் கீழ்பாலுள்ள விநாயகருக்கும் சிற்றாலயங்களும், பழநிப் பட்டினத்து முத்துக்குமாரருக்குக் கோயிலும், சுற்றுத்திருமதில்களும். மடப்பள்ளியும், கோபுர முதல் நிலயும், யாக சாலை மண்டபமும், தெற்கு மாடவீதியில் அங்காளம்மனுக்கு ஆலயமும் உபயமாகக் கட்டுவித்தார்.



அடிவாரம் திருக்கல்யாண மண்டபம்.

4-ஆம் பட்டம்.

பெரியவடவாட சின்னோபன் அவர்கள். இவர், அழகு நாச்சியாரம்மனுக்கு ஆலயமும், மலைமீது விநாயகர்க்குக் கோயிலும், அடிவாரத்தில் கண்ணப்பர் மண்டபம் அல்லது திருக்கல்யாண மண்டபம் என்கின்ற மண்டபத்தையும், (இப்பொழுது இதனைப் பூக்கட்டு மண்டபம் என்கின்றனர்.) தேவ காரியார்த்தமாகக் கட்டுவித்தனர்.

5-ஆம் பட்டம்.

சின்ன வேலாயுதன் அவர்கள். இவருக்கு நிருபமணி என்பது மற்றொரு பெயர். இவர் பழநிப் பட்டினத்து முத்துக்குமாரருக்குப் பெரிய மயில்வாகன மண்டபம் கட்டுவித்தனர்.

6-ஆம் பட்டம்.

குமார சின்னோபன் அவர்கள்: இவர் பழநி நகரத்தை விஸ்தரித்தும், வைகாசி மாதத்தில் திருமுருகனுக்குரிய திருநட்சத்திரமாகிய விசாகத்தில் "விசாகத் திருநாள்" என்ற திருவிழாவைப் புதிதாக ஏற்பாடு செய்தும், அது சிறப்பாக நடைபெறுதற்கு வேண்டிய வற்றிற்குப் பொருளுதவியும் தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெறுதற்கு வேண்டியன செய்தும், "சேங்கணபதி" "உத்தர விநாயகர்" என்ற கணபதி விக்கிரகங்களுக்குச் சிற்றாலயங்களை எடுப்பித்தும், 18-ஆம் படி கன்னிமாருக் கோவிலும் கட்டுவித்துப் பழநிப் பெருமாள் பேரன்புக்குப் பாத்திரமானார்.

7-ஆம் பட்டம்.

வேலாயுத சின்னோபன் அவர்கள். இவர், கர்ப்பக் கிரகத்தையொட்டி நீராழி மண்டபமும், துர்க்கையம்மன் சந்நிதி

யும், (இது இப்போது போகர் சமாதி கொண்டுள்ள நல் லிடமென்பர்) மடப்பள்ளியின் முன் மண்டபமும், சுற்றுத் திருமதில்களும், இராய கோபுரமும் தர்மம் விளங்கச் செய் வித்தனர்.

புலிப்பாணி மடத்து ஓலைச் சுவடியில் விரூபாட்சி ராயர் நீராழி மண்டபம் கட்டுவித்தாரென்றும், துர்க்கை யம்மன் கோவில் சேரன் கட்டுவித்தா னென்றும், நான்கு புறத் திருமதில்களும், வேட்டுச் சுனையும், தெப்பக்குளமும், தேர்ச்சங்கிலியும், மடப்பள்ளியும், சிவசூரியபிள்ளை என் னும் சீமானுக்காக குமார பக்தர் 'பழநிச் செட்டி' என்பவர் கட்டுவித்தாரென்றும் எழுதப்பட்டிருக்கிறது.

## 8-ஆம் பட்டம்.

கோடை வேலாயுத சின்னேபன் அவர்கள், இவர், பாணீஸ்வர புலிப்பாணியாருக்கும்; புலிப்பாணிப்பாத்திர சுவாமியாருக்கும்; வேலீஸ்வரப்புலிப்பாணியாருக்கும், சிற்று லயங்களைக் கட்டுவித்தார்.

## 9-ஆம் பட்டம்.

வடிவேல் சின்னேபன் அவர்கள். இவர் அடிவாரத் தில் பாதவிநாயகருக்கு எதிரிலுள்ள பெரிய மயில்வாகன மண்டபத்திற்கு மேற்கில் மீனாட்சியம்மன் என்னும் பெய ரிய மண்டபமும், அதில் சொக்கலிங்கருக்கும், மீனாட்சியம்ம னுக்கும் தனித்தனி சிற்றாலயங்களும் கட்டுவித்து, அவற்றில் வாலசமுத்திரம் ஜமீன்தார்களுடையவும், அவர்கள் தேவி மார்களுடையவும் திருவுருவங்களைக் கற்சிலையில்சித்தரித்து (வடபாகத்தில்) அழகிய மேடைமீது பிரதிஷ்டையும் செய் வித்தார்.

## 10-ஆம் பட்டம்.

சின்னோபன் அவர்கள். இவருக்குச் 'சங்கரபணிபாதர்' என்பது மற்றொரு பெயர். இவர் தண்டாயுதக்கடவுளுக்கு ஆறுகால பூஜைகள் தவறாது நடைபெறுவதற்கு வேண்டிய மான்ய பூமிகளைத் தேவதானமாக வழங்கினர்.

## 11-ஆம் பட்டம்.

குமார சின்னோபன் அவர்கள். இவர் பழநிப்பட்டினத்திலுள்ள ஊர்க்கோவில் அல்லது பெரியநாயகி அம்மன் கோவிலில் அமர்ந்தருளும் முத்துக்குமார மூர்த்திக்குத் தைப்பூசத் திருவிழாவும், பழநிமலை அடிவாரத்திலுள்ள திருவாவினன்குடித் திருமுருகனுக்குப் பங்குனிப்பிரமோற்சவமும், சிறப்பாக நடைபெற்று வருவதற்குச் சிறந்த ஏற்பாடு செய்தும், திருமலையைச் சுற்றியுள்ள காடுகளைத் திருத்தி நல்ல வழியுண்டாக்கிக் கிரிவீதி யெனப் பெயர் நிலவுமாறு செய்தும், சிவகிரியைச்சுற்றி திருநந்தவனம் எடுப்பித்தும், 'குமார சமுத்திரம்' என்கிற ஏரியை (இப்பொழுது பிரசித்தியாயுள்ள வையாவிபுரிக்குளத்திற்கு குமார சமுத்திரம் என்பது மறுபெயர்) செப்பனிட்டும், சண்முக நதிக்குப் பாலங்கட்டுவித்தும், பல திருப்பணிகளைச் செய்வித்தும், மைசூர் அரசர் "தளவாய்" அவர்களாலும், மதுரை நாய்க்கவரசர் "தளவாய்" அவர்களாலும் நன்கு மதிக்கப்பட்டும், புகழ்சிறக்க விளங்கினர்.

## 12-ஆம் பட்டம்.

விஜயகிரி வேலாயுத சின்னோபன் அவர்கள். இவர் பட்டத் துரைகளில் நீண்டகாலம் உயிர்வாழ்ந்து பிரஜைகளுக்கு உண்மை யுடையவராய் விளங்கினர். 55-ஆண்டுகள் ஜீவித்திருந்தனர். இவருக்கு "மண்டலாதிபதி" என்பது

சிறப்புப் பெயராக வழங்கப் பட்டது. இவர், தமிழை முறையாய்க் கற்றுத்தேர்ந்து கவி பாடும் சக்திவாய்ந்து பிரபந்தம் இசைக்கும் சமர்த்தையும் பெற்றிருந்தார். இப் பெருந்தகையார் பூக்கட்டு மண்டபத்திற்கு மேற்கில் காசி விஸ்வநாதருக்கும், விசாலாட்சியம்மைக்கும் திருக்கோயில் கள் கட்டுவித்தும், (இப்பொழுது இக்கோயிலில் விக்கிரகங் கள் மறைபட்டு அவற்றிற்குப் பதிலாக விக்கினேஸ்வரர் வைக்கப்பட்டிருக்கிறது. பழமையான இக்கோயிலைக் 'கட் டைய கவுண்டர் மண்டபம்' என்று ஊரார் பெயர் கூறுகின் றனர்.) மலைமீது வேறு சில திருப்பணிகளும், அடிவாரத்தில் தேரடி மண்டபத்தையும் செய்வித்தார். இவையேயன்றி, மைசூர் அரசரைக்கொண்டு திருமஞ்சன பொற்குடமும், அதனைச் சுமந்து வருவதற்கு யானையையும், ஆண்டொன் றுக்குப் பன்னீராயிரம் ரூபாய்களையும் ஆண்டவன் பூஜா கைங்கரிய விசேடங்கட்கு அளிக்கச் செய்தார்.

## 14-ஆம் பட்டம்.

விஜயகிரி சின்னோபன் அவர்கள். இவர் அடிவாரத்தில் இரண்டாம் மயில்வாகன மண்டபத்திற்குக் கிழக்கில் அகாடி என்ற இடத்தில் வரிசையாக மரத்தியம்மன், கட்டளைத் தோட்டியம்மன், கன்னடியத் தஞ்சாவூரம்மை யென்னும் பெயரிய சிறு தெய்வங்களுக்குச் சிற்றாலயங்களைக் கட்டு வித்தார்.

இத்திருப்பணியைச் செய்தவர், சமீனைச் சேர்ந்த "கிருஷ்ணம்மாள்" என்னும் பெயரினர் எனவும் சிலர் கூறு கின்றனர்.

இவர்களுக்குப்பின் பட்டமேற்பட்டு அதிகாரம் நடாத் திய சமீன்தார்கள் செய்த திருப்பணிகள் இன்னவை யென் றுணரக் கூடாதிருப்பதனால், இங்கு கூறாது விடப்பட்டன.

இவர்கள் மொத்தம் பதினெழுவர் பட்டம்பெற்று அதிகாரம் நடாத்தியதாக "கர்னல் காலன் மக்கன்ஸி துரை" அவர்களது "சர்விபர் ஜர்னலில்" கூறப்பட்டுள்ளது. ஆய்க்குடிச் சமீன்தாரர்களது வமிச விருக்ஷத்தில் பட்டத்தின் தொடக்கம், முடிவு, ஜீவியகாலம் முதலியன தெளிவாகக் காட்டப்பட்டிருப்பதுபோல் வாலசமுத்திர சமீன் வமிச விருக்ஷத்தில் காட்டப்படவில்லை. ஆனால், ஆய்க்குடி ஓபளக்கோண்டமன் அவர்களும், கோசல சின்னோபளன் அவர்களும் சமகாலத்தவர்களாக விளங்கியது தெளிவாயிருப்பதுகொண்டு வால சமுத்திரம் சமீன்களது பட்ட ஆண்டுகளும், முடிவும் ஏகதேசம் ஒத்திருக்கலாமென்றே கருதுகின்றோம். ஆயுட்காலம் முன் பின்னாக விருக்கலாம். அது இயல்பு. பொதுவாக ஆராயுமிடத்து, இருவர் வமிசங்களது கொடி வழிகளும் 17 அல்லது 18 என்ற இலக்கங்களுடனே முடிவுபெறுகிறது கவனித்தற்குரியது. அக்கணக்கின்படிக் கவனித்தால் இவர்களது ஆட்சிக்காலத்தின் மொத்த ஆண்டுகள் 411-ஆகின்றது.

ஆரம்பகாலம், சாலிவாகனம் சகாப்தம் 1321 என்றும், அந்தியகாலம் சாலிவாகன சகாப்தம் 1732 என்றும் தெளிவாகக் கணக்கிடப்பட்டுள்ளன. இவற்றையே வாலசமுத்திரத்துச் சமீன் கொடிவழிக்கும் வழங்குவதில் தவறாகாது.

(நிகழ்கின்ற சாலிவாகன சகாப்தம் 1854 ஆண்டிற்கு) மேலேகாட்டிய 411 ஆண்டுகளுடன் 122 எண்களையும் கூட்டினால் இற்றைக்கு 533 ஆண்டுகள் ஆவதைக் காணலாம்.

இப்பொழுது பட்டமில்லாது அக்கொடி வழியில் தோன்றி ஜீவியதசையிலிருக்கின்ற மைனர் அவர்கள் பெயர் 'குமார விஜய வையாபுரி மயில் வேலாயுத சுவாமி அய்யன்' என்பது.

வைகாவூர் நாடு மலைகளை யொட்டிய கிராமங்களைக் கொண்டது. இந்நாட்டிற்குரிய ஜமீன் கிராமம் *32. இவற்றின் எல்லைகள் கிழக்கிலும், மேற்கிலும் இரண்டு காதமும், தெற்கிலும், வடக்கிலும் மூன்று காதமும் ஆக ஐந்துகாத தூரம். அதாவது ஐம்பது மைல் விஸ்தீரணமுடையது.

மேலேகாட்டிய சமீன்களது விருதுக்களின் விவரமும், சீர், சிறப்பு, புகழ் முதலியவைகளும், "வேடுவர் பழி" என்ற நூலில் விவரிக்கப்பட்டுள்ளன.

இச்சமீன் குடும்பங்களில் ஆண்மக்களேயன்றிப் பெண் மக்களும், தெய்வபக்தியும், தர்மசிந்தையும், கல்வி அறிவும், உலகியல் ஞானமும் பெற்றிருந்ததாக அறியப்படுகின்றது. அவர்களில் நால்வர்களே பிரதானமானவர்களாகவும், அறச் செல்விகளாகவும் காணப்படுகின்றனர். அவர்கள் பெயர்கள்: சின்ன ஓபளம்மாள் 1. நடம்மாள் 2. கிருஷ்ணம்மாள் 3. மாதக்காள் 4. என்பன.

இவர்களில் ஸ்ரீமதி "ஓபளம்மாள்" அவர்கள் பழநி தேவஸ்தானத்தின் தர்மகர்த்தாப் பதவிவகித்துச்சிறப்பாக விளங்கினர். இவ்வம்மையார் பழநி அடிவாரத்தில் தமக்குத் தனியாக அரண்மனையும், மயில் வாகன மண்டபத்திற்குக் கிழக்கில் துவஸ்தம்பமும், மீனாட்சியம்மன் மண்டபத்திற்கு மேற்கில் மடப்பள்ளியும், கிழக்கில் சைவப்பொன்னம்மாளுக்குத் திருமடமும் தமது கைங்கர்யமாகத் திகழும் பொருட்டுத் தர்மமாகக் கட்டுவித்தார்.

ஸ்ரீமதி 'நடம்மாள்' அவர்கள். இவரைப் பெரியதுரை மனைவியார் என்று கூறுகின்றனர். இவர் மலைமீது சுந்தரேச்சுரருக்கும், சுந்தரவல்லியாருக்கும், தில்லைநாயகருக்கும்—தேனூர் குழலிக்கும், சேவந்தீச்சுரருக்கும்—சிவகாமி அம்மைக்கும் திருக்கோயில்களும், திருமடப்பள்ளியும், கோபுரத்திருப்பணிகளில் சில நிலைகளும் உபயமாக விளங்கும் பொருட்டுக் கட்டுவித்தனர்.



பழனிமலை ராயகோபுரம்.

ஸ்ரீமதி கிருஷ்ணம்மாள் அவர்கள். இவர் அடிவாரத்திலுள்ள காசி விஸ்வநாதர் கோவிலுக்குச் சில திருப்பணிகளைச் செய்வித்தனர்.

ஸ்ரீமதி மாதக்காள் அவர்கள். இவர் கஜானன மூர்த்திக்குச் சிற்றாலயமும், மீனாட்சி மண்டபத்திற்குச் சமீபத்தில் தமக்கொரு அரண்மனையும் கட்டுவித்தார்.

இவ்வளவே ஜமீன் குடும்பத்துத் திருப்பணிகள்.

---

## பழநிக்கோயிலும்—பண்டாரங்களும்.

பண்டாரம், பண்டாரத்தார், பண்டாரி, ஜங்கமர்கள், ஆண்டிகள் என்ற பெயர்கள், இவர்களுக்குத தமிழகத்தில் இயற்பெயராகவும், காரணப் பெயராகவும், சிறப்புப் பெயராகவும் வழங்கி வருவதற்கு உலக வழக்கிலும், நூல்வழக்கிலும் போதிய ஆதாரங்களிருக்கின்றன. பண்டாரம்—என்பதற்கு மடாதீனத்தான், பொக்கசம், பொக்கிஷசாலை, பலபண்டம் என்பன பொருளாமென்று தமிழ் அகராதிகளிற் கூறப்பட்டுள்ளன. பண்டாரத்தார்—என்பதற்கு சிவ சந்நிதானத்திற்குரிய அரும் பொருள்களைப் பாதுகாக்கும் உரிமையுடையார் என்றும், (இப்பொழுது இவர்கட்குப் பழநி மலைக் கோயிலில் அறைகாக்கும் தொழில் இருப்பது இவ்வுண்மையை உறுதிப் படுத்துகின்றது.) பண்டாரி—என்பதற்கும் இதுவே பொருள். ஜங்கமர்கள் சிவச்சின்னங்களணிந்த சைவத் துறவிகள் என்றும், ஆண்டி—என்பதற்கு சிவனடியான் என்றும் பொருள்களாகின்றன. இம்மரபினர் பரம்பரைச் சைவர்களாகவும், சிவபூஜா துரந்தரர்களாகவும், தேவாரம், திருவாசகம் முதலியவற்றை இசையுடன் ஓதுவதில் வல்லவர்களாகவும், புராணப் பிரசங்கஞ் செய்வதிலும், தமிழ்க்கவி பாடுவதிலும் சிறந்தவர்களாகவும், சிவா

லயங்களில் சிவத்தொண்டிற்குரிய திருப்பணிகளைச் சித்த சுத்தியாய்ச்செய்துவரும் சிவநேசர்களாகவும் தென்னாட்டிற் பற்பல பகுதிகளில் விளங்கிவந்தார்கள்—வருகின்றார்கள் என்பது யாவரும் அறிந்ததே. இத்தகையவர்கள் இப்பழநி யாண்டவன் கோயிலில் பண்டாரப் பெயரில் தொன்று தொட்டே பழநிப் பெருமானுக்குத் திருமஞ்சன தீர்த்தஞ் சுமந்து கொணர்ந்து கொடுத்தல், பூமாலை புனைந்து தருதல், சந்தனம் இழைத்து ஈதல், அறை காவல் காத்தல், பரிவட்டம் துவைத்து உலர்த்துதல், தூபக்கால்—சட்டக்கால் என்னும் திருப்பணிகளை ஏற்றுச் செய்தல் ஆகிய சிவாலயத் திருத்தொண்டுகளில் ஈடுபட்டுப் புண்ணியப் பயனைப்பெற்று வந்தார்கள். இவ்வுண்மையிருக்க, இவர்களில் சில மேதைகள், தங்கள் முன்னோர் சிவ தீக்ஷைபெற்றுச் சுத்த சைவர்களாய், ஆசாரியப் பதவிக்கேற்ற கல்விகளையும், ஒழுக்கங்களையும், ஆசாரங்களையும் கற்றுணர்ந்து திருமுருகன் திருமேனி தீண்டிப் பூசிக்கும் அர்ச்சகப் பதவியை யேற்று நடாத்தி வந்தார்களென்றும், அவ்வழக்கம் ஏதோ சில காரணத்தால் நின்றுவிட்டதென்றும் கூறுகின்றனர். இங்ஙனம் இவர்கள் கூறுவதற்குக் கன்னபரம்பரைச் செய்தியேயன்றி, வரலாற்று மூலமாகவும், பழைய நூற்களின் வாயிலாகவும், செப்பேடு சிலா சாஸனங்கள் வழியாகவும் ஆதாரங்களில்லை.

தற்பொழுது பண்டார மரபில் கல்வியிலும், உலகானுபவத்திலும், வயது முதிர்ச்சியிலும் தேர்ந்த இரண்டொருவர், தங்கள்வசம் பண்டாரங்கள் பழநிக் கோவிலில் அர்ச்சகப் பதவி வகித்து நடாத்தி வந்ததற்கும், ஆலயம் மூர்த்திகள் ஸ்தாபித முதலியவற்றிற்கும், பழமை பெருமை முதலியவற்றிற்கும், திருப்பணிகள் செய்வித்த சிவச்செல்வர்களின் விவரங்கட்கும் நிரம்பிய ஆதாரங்கள் தெளிவாகவும்

காலக்கணக்கோடும் இருப்பதாகக் கூறுகின்றனர். அவற்றை அளிக்குமாறு அவர்களை நாம் பன்முறை கேட்டும் கொடுக்க மனமில்லாது இன்று, நாளையென்று பற்பல தவணைகள் சொல்லி எம்மைக் கால் சலிக்க அலக்கழித்து இறுதியாக இல்லையென்றே கூறிவிட்டனர். அந்தோ! இவர்கள் செய்கைக்கு வருந்துகின்றோம். உண்மையாய் அவைகள் தங்களிடத்து இருந்திருப்பின், பொது ஜன நன்மைபற்றி வெளிவரும் இந்நூலில் இடம் பெறுவதற்கு அன்புகூர்ந்து உதவி அதனால் வரும் புகழையும், புண்ணியத்தையும் பெற்றிருப்பர். அறிஞர்களாகிய அவர்கள் அவற்றைப் புறக்கணித்ததைக்கொண்டு அத்தகைய ஆதாரங்களைவையும் அவர்களிடத்தில் இருப்பதாக நம்புவதற்கில்லை. அவர்கள் சிலரை மருட்டுவதற்காகத் தங்களிடத்தில் போதிய ஆதாரங்கள் இருப்பதாக நம்பும்படி செய்வதற்கு இவற்றைச் சூழ்ச்சியாகக்கொண்டிருக்கலாம் என்றே நாம் கருதுகின்றோம். நிற்க.

பண்டார மரபினருக்கு முன்னரேயே "பண்டாரக் கவுண்டர்கள்" என்ற சிறுகூட்டத்தார் பழநிப்பதியில் மிகப் பழைமையான காலத்தில் அதாவது போகர்—புலிப்பாணியார் வாழ் நாளில் அவர்களின் கீழ் பண்டாரத்தொழில் புரிவதற்கு அமர்ந்து தொண்டு செய்து வந்தார்களென்றும், எக்காரணங் கொண்டோ அவர்கள் அத்தொழிலை விட்டுவிட்டார்களென்றும், அவர்கள் விட்டபின்னரேயே இப்பண்டார மரபினர் பண்டாரத்தொழிலை அங்கு கைக்கொண்டார்களென்றும் அனுபவமிக்க ஆன்றோர் பலர் கூறுகின்றனர்.

ஆதியில், போகர்—புலிப்பாணியார்களிடத்தில் நால்வர் பண்டாரங்களே பண்டாரத்தொழில் செய்வதற்கமர்ந்து இருந்தார்களென்றும், அவர்களே அயன் பாத்தியதை (பூர்ண உரிமை) உடையவர்களென்றும், அதற்குப்பின்னர்

காலமாறுதலுக்கேற்ப நாலாறு இருபத்திநான்கு தொகையுடைய பண்டாரங்கள் பெருகினர்களென்றும், நீண்ட காலத்திற்குப் பின், பக்தகோடிகள் மிகுதியான வரவிற்கேற்பப் பண்டாரங்கள் நான்கு பதினாறு, அதாவது (64) அறுபத்தி நால்வராக மிகுதிப்பட்டாரென்றும், இவர்கள் 'உபய பண்டாரங்கள்'என்று பெயர் பெற்றாரென்றும், அறியப்படுகின்றது. இப்பொழுது விபூதியும், சந்தனப்பூச்சும், குங்குமப் பொட்டும் அணிந்தவர்கள் யாவருமே ஓர் வரையறையின்றிப் பண்டாரத் தொழில் ஈடுபட்டு ஆலய முழுதும் பண்டாரமயமாக விளங்குகின்றனர்.

இவர்களது தொழில்கள், ஒவ்வொருவரும் பட்டினம் படிக்கு ஐந்துபடி அளவுடைய குடத்தில் அடிவாரத்தின் தெற்கு பாகத்திலுள்ள, வர்த்தமா நதியிலிந்து திருமஞ்சனங் கொணர்ந்து ஆண்டவன் அபிஷேகத்திற்கு உதவுவதும், மாலை தொடுத்துக் கொடுத்தலும், சந்தனம், இழைத்துத்தருதலும், பரிவட்டம் துவைத்து உலர்த்துதலும், அபிஷேக திரவியங்களைச் சேகரித்து அவற்றை அருகிருந்து அர்ச்சகருக்கு உதவியாய் ஆண்டவனுக்கு அபிஷேகஞ் செய் வித்தலும், யாத்திரை வாசிகளை அன்புடன் வரவேற்று அவர்கட்குப் போதிய சவுகரியஞ்செய்து திருமுருகனைத் தரிசனஞ் செய்விப்பதும், அவர்களை வழியனுப்புவதும் ஆம். இவை இங்ஙனமாக, போகர் புலிப்பாணிமடத்துப் பழைய வட்டுச்சுவடியில் முதன் முதலில் போகரும், பின்னர் புலிப்பாணியும், அதன்பின் முறையே கன்னடவுடையாரும், நயினுத்தை முதலியாரும், அவர்களைத்தொடர்ந்து அம்மடத்து ஆதினக் கர்த்தர்களும், பழநிப்பெருமான் திருமேனி தீண்டிப்பூசிக்கும் உரிமை பெற்றிருந்தார்களென்றும், அவர்கள் தாங்கள் ஆண்டவனுக்கு ஆற்றிவரும் திருத்தொண்டுகளுக்கு உதவித்தொழில்புரிவதற்கு



பெரிய நாயகி அம்மன் நவரங்க மண்டபம்.

உற்ற தோழராகவும், மெய்யன்புடையவராகவும், இருப்பதற்குத் தகுதிவாய்ந்த சில பண்டாரங்களைச் சேர்த்துக் கொண்டிருந்தார்களென்றும், அவர்கள் அவ்வான்றோர் விருப்பத்தின்படி இசைந்திருந்தார்களென்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஆலய வழிபாடும், விக்கிரக ஆராதனையும், மக்கள் மனத்தில் மிகுதியாகப் பதியாமலும், நாட்டில் பரவாமலும் இருந்த அக்காலத்தில் சிவத்தொண்டுபுரியும் பெரியோர்களிடத்துப் பண்டார மக்கள் அன்பும், மரியாதையும் வைத்து அடக்கத்துடனிருந்து அவர்கள் இடும் ஆணை எதுவாயிருப்பினும், அதனை அன்புடன் ஏற்றுச்செய்துவந்திருக்க வேண்டும். அதுகாரணமாகவே புலிப்பாணி மடத்துப் பரம்பரையார் சிவத்தொண்டர்களாகிய அப்பண்டாரங்களைத் தமது அன்பின் ஊழியர்கள் என்று கருதி அவர்களைத் தங்கள் விருப்பப்படி நடாத்திவந்தனர். அது நீண்ட நாள் பழக்கம்பெற்று வழக்கத்திலும் நிலைபெற்று விட்டதால் திருமடத்து ஓலைச்சுவடியிலும் ஆதாரமாகப் பதிவுபெறுவதற்குமாயிற்று. ஆகவே, இப்பொழுதும் அப்பதிவு கருதியே அவ்வாதீனக் கர்த்தர்கள், பண்டாரங்கள் எங்கள் அணுக்கத் தொண்டர்கள் என்று பாத்யதை கொண்டாடுகின்றனர். இதுவே புலிப்பாணி ஆதீனத்தார் கூற்றிற்கு ஆதாரம்.

இதனிடையில் மற்றொரு சம்பவம் நிகழ்ந்ததாகக் கன்னபரம்பரையும், அநுபவமும், செப்பேடும் சான்று கூறுகின்றன. அது 'கி. பி. 1623-ஆண்டு தொடங்கி 1659-ஆண்டு வரை மதுரைமாநகரை அரசுபுரிந்துவந்த அரசர் "திருமலை நாயக்கர்" சமஸ்தானத்தில் அவரது அமைச்சர்களில் சிரேஷ்டரும் வீரருமாய் விளங்கித் தளவாய்ப் பட்டமும்பெற்ற "இராமப்ஸ்பயர்" அவர்கள் பழநிமலைக்குத் தரிசனார்த்தம்

விஜயஞ்செய்தனர். அப்பொழுது ஆயைத்தில் பிராமணர் அல்லாத சைவர் புலிப்பாணிப் பூசகர் திருமுருகன் திருமேனி தீண்டிப் பூசித்திருந்தனர். அதுகண்டு அவர் அழுக்காறடைந்து அது தகாச்செய்கை யென்றும், வேதாசம சம்மதம் ஆகாதென்றும், அதனைப் பரிகரித்தலே தமது மறவாக் கடமை யென்றுங்கருதி, தமக்குள்ள பூர்ண அதிகாரத்தை மேற்கொண்டு அப்பொழுது வாலசமுத்திரத்தில் ஜமீன் பதவி வகித்திருந்த 11—ஆம் பட்டத்து 'குமார சின்னோபன் நாய்க்கன் அய்யன் அவர்களை உடன் கலந்து அவரைத் தமது சொற்கேட்கச் செய்து மிகப் பழைமையான காலந்தொட்டே பிராமணரல்லாத சைவர் சுவாதீனத்திலும், அநுபவ பாத்தியத்திலும் இருந்து வந்த அர்ச்சகப் பதவியை அக்கால சந்தர்ப்பத்திற்கு ஏற்ற காரணங்காட்டிப் பறித்துத் தமது மரபினர்களாகிய அந்தணக் குருக்களுக்கு அளித்துப் பதிவிலுள்ள எஞ்சிய உரிமைகளையெல்லாம் பண்டுபோலவே பார்ப்பன ரல்லாதாருடைய பழக்க வழக்கத்திலிருக்க விடுத்து, விடைபெற்றுச் சென்றனர்' என்பது.

அது தொடங்கியே புலிப்பாணி மடத்துப் பூசகரும் அப்பதவியினின்றும் விலகுவதற்காயினர். ஆயின், புலிப்பாணியின் திருமடத்து ஆதீனக்கர்த்தர்கள் அன்றுதொட்டு இன்றுவரை தமக்குரிய அநுபவ பாத்தியப்படி திருப்பழநிமீதுள்ள போகர் சமாதிக்குப் பூசைபுரிவதைச் செய் கடமையாகச் செய்துவருகின்றனர். இப்பழக்கத்தால், இம்மலைமீது ஆலயம் ஏற்பட்டது முதல் திருமுருகனுக்கும், பின்னர் அவனது மெய்த் தொண்டராகிய போகருக்கும் பூசைபுரியும்உரிமை இருந்து வந்ததென்பது புலனாகின்றது.

பண்டாரங்கள் தங்களுக்குப் பழைமையாகவுடையதும், பாவனமானதுமான திருத்தொண்டுகளுள் திருமஞ்சன

நீர் கொணர்தல் முதல் திருமுருகனைத் தெய்வபக்தர்களுக்கு தரிசனை செய்வித்து வழிவிடுதல் வரையுள்ள உபசாரங்கள் செய்துவருவதை இன்றும் வழக்கத்தில் கொண்டுள்ளார்கள்.

இவ்விருவகைப் பழக்க வழக்கங்களையும் நடுநின்று, ஆராய்கின்றவர்கள், புலிப்பாணி மடத்துப் பூசகர்கட்குத் திருமுருகன் திருமேனி தீண்டிப் பூசிக்கும் உரிமையுண்டென்பதையும், பண்டாரங்களுக்குப் புறத்திருந்து உதவித் தொழில்புரிவது பழக்கமென்பதையும் அறிவர்.

திருமலை மீதுள்ள திருப்பழநியாண்டவனுக்கு அர்ச்சகத்தொழில் செய்கின்றவர்கள் அத்தொழிலால் ஏற்றமுடையவர்கள் என்றும், அவர்கட்கு உதவித்தொழில் ஆற்றுகின்றவர்கள் தாழ்மையானவர்கள் என்றும் கருதுவது அறியாமையின் பாற்படுமென்பதே எமது அபிப்பிராயம்.

எல்லாம் வல்ல இறைவன், அவரவர் பரிபாகத்தின் செயலுக்கேற்ப ஈடுபடுத்தி அவர்களின் தகுதிக்கேற்ற தொழில்களைக் கொடுத்து நடாத்திப் பிழைக்கும்படி செய்கின்றாரென்பது ஆன்றோர் கருத்தும், நூற்களின் துணிபுமாம்.

சான்றோர் நிறைந்த தண்டமிழ் நாட்டில் நிலைபெற்று விளங்கும் தேவாலயங்களில், பெரும்பாகத்தினும் பெரும்பாகம் ஆதிசைவர்களாகிய அந்தணர்களும், வைணவப் பிராமணர்களுமே சிவாலய—விஷ்ணுவாலய—குகாலயங்களில் மூர்த்திகரித்திருக்கும் விக்கிரகங்கட்குப் பூசை நிவேதனம் புரியும் அர்ச்சகர்களாக அமர்ந்துள்ளார்கள். இவர்கள் அந்தணரல்லாதாரை அர்த்த மண்டபத்திலும் அடியெடுத்து வைப்பதற்கு அனுமதிப்பதில்லை. இது தமிழர்கள் செய்த பாவம்போலும்!

ஆனால், தென்னாட்டிலுள்ள கொங்குநாட்டு 'வைகாவூர்' என்னும் பழநிமலையின் ஆலயத்தில் மட்டும், ஆன்மாக்கள்

உய்யும்பொருட்டு எழுந்தருளியுள்ள திருமுருகன், தமிழர் செய் தவப்பயனுகப் பிராமணரல்லாத யாவரும் தூய்மையுடன் சுமந்துவரும் திருமஞ்சனத் தீர்த்தத்தையும், காசி இராமேச்சுரம் முதலிய புண்ணிய நதிகளினின்றும் கொணரும் புனல்களையும், பசும்பால்களையும் தமது திருமுடியில் அபிஷேகிப்பதற்குத் திருவருள் சாதித்துள்ளனர். இதனல், அந்தண அர்ச்சகர்கள் அவைகளைத் 'தீண்டல்' என்னும் குற்றமாகிய கொடுமொழியைக் கூருமலும், அகத்தில் அருவெறுப்பைக் கொள்ளாமலும், இரு கைகளினும் அன்புடனேற்று அபிஷேகிக்கின்றனர்.

அர்த்த மண்டபத்திலிருந்து ஆண்டவனைத் தரிசிப்பதற்குப் பண்டிருந்தே பார்ப்பனர் அல்லாதார் பாத்தியதையும், பழக்கம் பெற்றிருக்கின்றனர். இச்சுதந்தரம் இங்கு நம்மவர்கட்கு வாய்த்திருப்பது மகிழ்தற்குரியது.

இம்மகிழ்ச்சி நம்மவர்கட்குத் தமிழ்நாடெங்கணுமுள்ள சிவாலயங்களிலெல்லாம் வாய்க்குமாறு எல்லாம் வல்ல இறைவனை நாம் அனைவரும் பிரார்த்திப்போமாக.

பண்டாரங்களில் திருமஞ்சனப் பண்டாரம், திருமடப் பண்டாரம், அயன் பண்டாரம, உபயபண்டாரம, கொட்டுப் பண்டாரம் என்னும் ஐவகைப் பிரிவினர் இருக்கின்றனர்.

---

## இராமப்ப அய்யரவர்களும்—ஆதி சைவ அர்ச்சகர்களும்.

கி. பி. 1623-ஆம் ஆண்டுமுதல் 1659 ஆம் ஆண்டுவரை பாண்டிய நாட்டு மதுரைமா நகரை நன்னீதியும் திறமையும் விளங்க அரசுசெய்தவர் "திருமலைநாய்க்கர்" என்னும் பெயரினர். இவரது படைத்தலைவர்களில் நுண்ணுர்விலும், நூலறிவிலும், அரசியல் ஞானத்திலும், போர் புரி

வதிலும். தலைசிறந்து திகழ்ந்தவர் "இராமப்பஅய்யர் அவர்களே." இவ்ரது பிறப்பு, இளமை, வளர்ச்சி, ஜனனவிடம் முதலியன விவரமாக அறியக்கூடவில்லை. இவர் தமது அரசரிடம் "தளவாய்" அதாவது படைத்தலைவர் என்ற உயரிய பட்டம்பெற்றுப் பெருமையுடன் விளங்கிய காலத்து இவருக்குப் பழநிமாமலைக்குச் சென்று தண்டாயுதக் கடவுளைத் தரிசிக்க வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. எழவே, தமது அரசரிடம் விடைபெற்றுத் தமக்குள்ள கௌரவச் சின்னங்களுடன் பழநிக்கு விஜயமாயினர். அக்காலத்தில் அப்பிரதேசத்திற்கு அதிகாரியாய் ஆட்சிசெய்து வந்தவர், வாலசமுத்திரம சமீன் 11 ஆம் பட்டம் "குமார சின்னோபள நாயக்கன்" அவர்கள். இவர் மதுரை அரசர் படைததலைவரை எதிர்கொண்டு நல்வரவேற்று, அன்பு பெருக உபசரித்து, இருக்கை நல்கி, வேண்டுவனவற்றிற்கு உதவியாயிருந்தனர். அய்யரவர்கள் ஆண்டவன் தரிசனைக்காகச் சிலநாள் பழநிப்பதியில் தங்கினர். அப்பொழுது பழநி ஆண்டவன் சந்நிதி சில சீர்திருத்தம் பெறவும், அஷ்டபந்தன கும்பாபிஷேகம் ஆகவும் வேண்டிய நிலைமையிலிருந்தது. அவற்றை ஆண்டவன்பால் அன்புமிக்க வுடையவரும், சிவாலயத் திருப்பணிகளை நிறைவேற்றுவதில் விருப்பங்கொண்டவருமான சிலர், ஆலவாய்த் தளகர்த்தரிடம் எடுத்துக் கூறினர். செவி சாய்த்துக் கேட்ட அய்யரவர்கள், 'தெய்வ சம்மதமும், அன்பர்கள் விருப்பமும் அதுவாயின், அப்படியே செய்து முடிக்கின்றோம்' என்றனர். அதன்பின் இராமப்பையரவர்கள் பழநிமலையேறி ஆண்டவனைத் தரிசிப்பதற்குத் தம்மைத் தொடர்ந்த அன்பர்கள் உடன்வரச் சென்றனர். சென்ற சேனைபதி திருமுருகன் ஆலயத்தைத் திருவலம் வந்து அன்பர்க்கெளியனாய் விளங்கும் பழநிப் பெருமானைப் பக்தியுடன் தரிசித்துப் பணிந்து

தொழுதனர். அப்பொழுது திருமுருகனைத் திருமேனி தீண்டிப்பூசிக்கும் அர்ச்சக ஸ்தானத்தில் புலிப்பாணி பாத்திரவுடையார் அமர்ந்திருந்தனர். அவர் தமது பண்டைய வழக்கப்படி ஆண்டவன் தரிசனார்த்தம் வரும் அன்பர்கட்குத் தீபாராதனை நடாத்தித் திருமுருகனைத் தரிசனம் செய்வித்தபின், உண்மாசு அகற்றும் ஒள்ளிய விபூதியை தளகர்த்தருக்கு அளிக்கக் கையை நீட்டினர். தளகர்த்தர், அருச்சகர் அந்தண ரல்லாதா ராயிருந்த காரணத்தால் அவர் கைப்படத் திருநீறு பெறுதல் அந்தணராகிய தமக்குத் தகுதியற்றதாகத் தோன்றவே பெறமறுத்தனர். மறுக்கவே, அங்கிருந்தார் பலரும் பலவாறு பேசவும், நினைக்கவும் தொடங்கினர். சிலர் அந்தோ! பாண்டியன் வெப்பநோய் தீர்த்துச் சமணர் ஆணவத்தைக் கருவழித்துச் சைவத்தை நிலைநாட்டிய ஞானசம்பந்தப் பெருந்தகையார் தமது திருவாயால் வியந்தோதிய திருநீறு, புலிப்பாணி மடத்துப் பூசகர் கைப்பட்டதும் எங்ஙனம் பதிதமடைந்தது? என்றனர். வேறுசிலர், புனுகு, ஜவ்வாது, கஸ்தூரி முதலிய உயர்ந்த வாசனை வஸ்துக்கள் அவற்றின் ஏற்றங்கருதி மக்களால் உயர்வாக மதிக்கப்பட்டுத் தேவர்கட்கும் அணிவிக்கும் வாசனைப்பொருள்களில் சேர்த்திருக்கின்றனவே யன்றி அவைகள் தோன்றிய இடத்தின் இழிவு கருதி ஒதுக்கப்படவில்லை. வெண்சாமரை, கவரி என்பன மிருகங்களின் ரோமங்களாயிருப்பினும், அவை தாழ்வானவை எனக்கருதாமல் தேவர் திருவுலாக்களிலும், அரசர் ஆன்றோர்கள் பவனிகளிலும் மங்கலப்பொருள்களில் ஒன்முக உபசரிக்கப்படுகின்றன. அகில், கள்ளிக்கடையினின்றும் தோன்றுகின்ற தெனினும், இடவேற்றுமை கருதித் தாழ்வாகக் கருதாமல் உயர்வாகக் கொள்ளப்படுகிறது என்றனர்.



பழநிப் பட்டினத் திருக்குளம்.

மற்றுஞ்சிலர், மேற்கூறிவைகள், அறிவுடைய மக்களால் உயர்வான வஸ்துக்கள் என்று ஏற்கப்பட்டு வருகையில் தீக்கடவுள் வசப்பட்டுத் தூயதன்மை அடைந்த வெண்ணீறு மட்டும் பூசகர் கைப்பட்டதும் புன்மைபெறக் காரணமில்லை யென்றும்; சாதாரண மக்களினும், பன்மடங்கு அறிவினும், கல்வி கேள்விகளினும், உலகியலினும் உயர்ந்த தளகர்த்தருக்கு இவ்விஷயங்கள் விளங்காமலில்லை யென்றும், ஆயின், தமக்குள்ள தனி அதிகாரத்தாலும், தளகர்த்தப் பதவியாலும், பழநிக்கோயிலில் அர்ச்சக ஸ்தானத்தில் தமது மரபினராகிய அந்தணர்களை எவ்விதத்திலும் அமர்த்தி நிலைபெறச்செய்துவிட வேண்டுமென்ற சுயநல சூழ்ச்சியை மனதினுட் கொண்டு, பிராமண ரல்லாதாரிடத்து அந்தணர் திருநீறு பெறுவது விதிரோதம் என்று எண்ணி ஏற்க மறுத்திருக்க வேண்டும் என்றனர்.

பண்டுதொட்டே புலிப்பாணிப் பூசகர்க்குப் பழக்கத்திலும், சுவாதீன அநுபவத்திலும் இருந்து வந்த, பழநியாண்டவன் திருமேனியைத் தீண்டிப்பூசிக்கும் உரிமையையும், திருநீறு அளிக்கும் பாத்தியதையும் இவ்வகையில் தமது இனத்தார்க்கு தமது உன்னதப்பதவியில் மேலான ஆட்சிக் காலத்தில் எளிய காரணங்காட்டிப் பறித்து அளித்துவிட எண்ணிய தமது எண்ணத்தை எதிர்நின்று தடுப்பதற்கு ஏற்ற ஆற்றல் வாய்ந்தவர்கள் அப்பொழுது அங்கு யாருமே யில்லாதிருந்தனர்.

அக்காலத்தில பாண்டி நாட்டைப் பரிபாலித்து வந்த அரசர் திருமலை நாய்க்கரது தளகர்த்தர்களில் இராமப்ப அய்யர் அவர்கள் தலைமைத் தளகர்த்தராய் ''யுத்த சிரேஷ்டர்'' என்ற உயரியபட்டத்தை உடையவராய், அரசரது பேரன்பைப் பெற்றவராய் யாவரும் வணங்கத்

தக்கவராய்த் திகழும் ஒருவரது கருத்துக்கு யார்தான் எதிர்மாற்றம் கூற முன்வருவார்? வாரார். வாரார்.

இதுவன்றி, தளவாய் அந்தணர் அவர்கள், அந்தண அர்ச்சகரைப் பழநியாண்டவர் பூசகராக நியமிப்பதற்கு மற்றுஞ்சில காரணங்களைக் கொண்டிருக்கலா மென்றே கருதுகின்றோம். அவை:—

பார்ப்பன இராமப்பையரவர்கள் பழநிப்பதியில் தங்கியிருந்த நாட்களில் அப்பதியிலுள்ள அர்ச்சகர்களில் பலர் ஒன்றுகூடி. அவர் தனித்திருக்கும் சமயமறிந்து, அநந்தரங்கமாகச் சென்று பேட்டிகண்டு தங்களில் தகுதியுளளார் பலர் அர்ச்சகப்பதவி வகிப்பதற்கு உரியராயிருப்பதாயும், அவர்களில் சிலரை ஆண்டவன் சந்நிதியில் அப்பதவிக்கு அமர்த்தத் திருவுளங்கொள்ள வேண்டுமென்றும், மிக வணங்கி முறையிட்டு வேண்ட, அவர் தம் விநயவேண்டுதல்களுக்கு மனமுருகிய தளபதி, அவ்வாறே அமர்த்துவதாக வாக்களித்திருக்க வேண்டுமென்பது ஒன்று;

அந்தணர்கள் வேதமோதுதல்; ஆகமத்தையும், அதன் பிராமணத்தையும் உணர்ந்து உபதேசம்—தந்திர—மந்திரம் ஆகிய கலைகளில் வல்லவராயிருத்தல்; செபம், தவம், பூசை சீலம முதலியவற்றில் மிக்குயர்ந்து யாவரும் வணங்கும் முறையில் தகுதிவாய்ந்து மேன்மை பெற்றிருத்தல் முதலியவைகளில் சிறந்திருப்பது கண்டு, அத்தகைய உத்தமர்களையே ஆலயக் குருக்களாகப் பழநியாண்டவன் திருத்தொண்டுக்கு அமர்த்துவது மேலானதென்று தளவாய் கருதியிருக்கக் கூடுமென்பது மற்றொன்று;

தற்பொழுதுள்ள பூசகர், பண்டைய ஒழுக்க நிலைகளினின்றும் தவறி, ஆசாரங்குன்றி, அர்ச்சகர்க்குரிய அதீத கல்வி கேள்வி ஆகமப்பயிற்சி முதலியவற்றில் தெளிவின்றி

சைவநெறி நீங்கி, அர்ச்சகத் தொழிலை அன்பும் ஆர்வமு மின்றி நடாத்தி வருகின்றனர் என்று பொதுமக்களும், கல்வியறிவுடைய பக்தகோடிகளும் குறைகூற, அவை தமது கவனத்திற்கறிவிக்க, அக்குறையுள்ளாரை அகற்றித் தக்காரை அப்பதவியில் அமர்த்துதல் அக்கால சந்தர்ப்பத்திற்கு ஏற்றதாய்த்தோன்ற, அதன்படி செய்வது தமது மறவாக்கடமை எனக்கருதி அக்காரியத்தில் பிரவேசிக்க முயன்றிருக்க வேண்டுமென்பது பின்னொன்று;

மேற்கூறிய மூன்று காரணங்களுடன், ஆரியர்களது ஆசார அநுஷ்டானங்கள் தெய்வ வணக்கம், மந்திர—தந்ரங்கள், நியம நிஷ்டைகள் முதலியன அப்பொழுது இந்திய நாடெங்கணும் தீவிரமாய் விரைந்த கதியில் பரவிக்கொண்டிருந்ததனாலும், அந்தணர்கள் ஆலயங்களில் பூசை புரிவதையே ஆண்டவன் ஏற்கின்றான் என்று அந்தணரல்லாதாரும் ஒரு முகமாய்க் கூறுவதில் முனைந்திருந்ததனாலும், பிராமண விஸ்வாஸம் மேலோங்கி நின்றதனாலும் தளகர்த்தர் பிறதேவாலயங்களிலுள்ளபடி பிராமணரையே இங்கும் அர்ச்சகராக நியமித்திருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வருகின்றோம்.

இங்ஙனம் தளவாய் அவர்கள் ஒரு முடிவுகொண்டு அக்காலத்தில் அங்கு ஸ்தல அதிகாரியாக விளங்கிய ஜமீன் சின்னேபள அய்யன் அவர்களையும், புலிப்பாணி பாத்திர வுடையாரையும், மற்றும் சிலரையும் அழைத்து, ஆலோசித்து அவர்கள் சமமதமும் பெற்று, அத்தருணம் அங்கு அர்ச்சகத் தொழிலுக்கு யாரும் அருகரல்லாதாராய் இருப்பதுகண்டு, கொங்கேழ் சிவஸ்தலங்களில் ஒரெண்ணையுடையதும், சமயகுரவரால் தேவாரப்பாடல் பெற்றதும், "திருப்பாண்டிக் கோடுமுடி" என்ற பெயர் சிறந்ததுமான 'கோடு

முடியினின்றும் (1) சரஸ்வதி அய்யர் என்பவரையும், (2) மருதூர் தம்பன் அய்யர் என்பவரையும், (3) நாட்டாரப்பன் கோயில் சுப்பையர் என்பவரையும், (4) ஆநிலைக் கருவூர் முத்தையர் என்பவரையும், (5) கடம்பர் கோயில் அகிலாண்டம் அய்யர் என்பவரையும் ஓலை விடுத்து வரவழைத்துக் கொடுமுடி சரஸ்வதி அய்யரவர்களைத் தலைமைக் குருக்களாக அதாவது கலசஸ்தாபன முதலான தேவாலயத்திருவிழாத் திருச்சடங்குகளைக் கிரமமாக, ஆகமவிதி முறைவழாது நடாத்துதற்குரிய "ஸ்தவராஜபண்டிதர்" என்ற திருப்பட்டப் பெயரையும், காணியுடைமையையும், பஞ்சகொத்துத் தாவடத்தையும் அளித்தும், ஆலயத்தில் மரியாதையாகப் பெறுதற்குள்ள எல்லா வுரிமைகளிலும் பாத்தியமிருக்க அதிகாரம்கொடுத்தும், எஞ்சிய நால்வரைப் பூசை, பரிசாரகம், நம்பி முதலிய தொழில்களைச்செய்துவர அமர்த்தியும், அங்ஙனம் அமர்ந்த அவர்களுக்குப் பழநி க்ஷேத்திரம் காரணஸ்தலமானபடியால் முறையே வால (இளமை) நம்பி இருமை(பெருமை—மகிமை)நம்பி, விசயநம்பி, கோசலநம்பி என்ற பட்டப்பெயர்களை வழங்கியும், (நம்பி என்பதற்கு—ஆணிற்சிறந்தவன் என்பது பொருள்) அப்பெயர்களேற்ற அவர்கள் பழைமையிலும் பழைமையாகப் பழநியாண்டவனுக்குப் பூசைபுரிந்து வந்த புலிப்பாணிப் பூசகர்க்கு, தண்டாயுதக் கடவுளுக்கு அபிஷேகம் தீபாராதனைகளினால் அடையப்பெறும் நிர்மால்யம் (பூசித்துக் கழித்தப்பொருள்) சொர்ன புஷ்பம் (வெள்ளி தங்க நாணயம்) ஆகியவற்றில் நான்கில் ஒரு பாகம் கொடுக்கவும் ஏற்பாடு செய்து, அவைகள் நிலையாக நிகழ்ந்து வருவதற்குச் செப்பேடும் செதுக்குவித்தார். அது முதற் கொண்டு தான், தண்டபாணியை ஆதிசைவ அர்ச்சகர் ஆராதிக்கத் தொடங்கினர். இன்றும் அவர்களே ஆராதித்தும் வருகின்றனர்.



இடும்பன் கோயில்,

இச்சமயத்திலேயே தான், பழநியாண்டவன் கோயில் ஜீர்ணோத்தார திருப்பணிகளும், அஷ்டபந்தன கும்பாபிஷேகமும் தளவாய் அவர்கள் திரு முயற்சியால் சிறப்பாக நடந்தேறின. இவை நிகழ்ந்த காலம் இன்றைக்கு 273-ஆண்டுகளாகின்றன. சிலர் 300 ஆண்டுகள் என்று கூறுவர்.

அந்தண அர்ச்சகர்கள், ஆரம்பத்தில் நால்வராய், சிறிது காலங்களுக்குப்பின் பதினறுவர்களாய், அதற்குப் பின்னர் முப்பத்திருவராய்ப் பெருகி, இன்று அதே அளவில் நின்று, பூஜை முறையைத் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட கிரமப்படி நடாத்தி வருகின்றனர். ஸ்தவராஜ பண்டிதர் வகையில் மாற்றமில்லை.

---

## இடும்பாசூரனும்—குழந்தை வேலப்பரும்.

ஸ்ரீ தண்டபாணிக் கடவுள் திருவிற்றிருந்தருளும் "சிவகிரி" என்னும் திருப்பழநிமலையும், இம்மலைக்கு வட கிழக்கில் விளங்குகின்ற "சத்திகிரி" என்னும் இடும்பன் மலையும் திருவாவினன் குடியில் அணிபெற விளங்குகின்ற வகையும், காரணமும் "பழநித் தலபுராணம்" "மலைகள் பழநியடைந்த சருக்கத்திலும், "சுப்பிரமணிய பராக்கிரமம்" முப்பத்தைந்தாவது அத்தியாயத்திலும் விவரிக்கப் பட்டுள்ளன. அவற்றை வாசகர் உணருமபொருட்டு அவைகளின்னும் வேண்டுவனவற்றை யெடுத்தும், குறைத்தும், கூட்டியும், வரலாற்றிற்கேற்ப முறைப்படுத்தியும் இதன் கீழ்த் தருகின்றோம்.

அவ்வரலாறு வருமாறு:—

பொதிகை முனிவராகிய அகத்தியர் கந்தமலையின் சிகரங்களுள் சிறந்த 'சத்திசிகரம்' 'சிவசிருங்கம்' என்னும் இரண்டு மலைகளையும் சத்தியும் சிவமுமாகப் பாவித்துப்


பூசித்துச் சிவாக்கினையின்படி அவற்றைத் தெற்கின் கண்ணுள்ள பொதிகை மலையின் பாங்கர் கொணர்ந்து பூசிக்க நினைத்துத் தமக்குள்ள தபோ பலத்தால் பெயர்த்துக் கொண்டுவந்தார். திருக்கேதார மலையைச்சார்ந்த "பூர்ச்சவனம்" என்னும் அரண்யம் அடுத்ததும், திடீரென ஒரு மனமாற்றம் தோன்ற, அச்சிகரங்கள் இரண்டினையும் அங்கேயே வைத்துவிட்டுப் பொதிகையை அடைந்தனர்.

சூரபன்மன், சிங்கமுகன் தாரகன் என்னும் தானவர் படைகளுக்கும், அக்குலத்தாருக்கும் வில்வித்தை முதலிய அத்திர சத்திரத் தொழில்களைப்பயிற்றிய இடும்பாசூரன் என்பவன், குமாரக்கடவுளின் வேற்படையாலே அவர்கள் யாவரும் அழிந்தமையால், தன்மனைவி இடும்பியுடன் வீரமா மகேந்திரபுரியை விடுத்து *வனத்திற் செல்வானாயினன். அவ்வழிச் செல்லும்போது திருக்குற்றாலத்தின் அருகே அகத்தியரைக்கண்டு அடிபணிந்து தன் வரலாறு கூறி அடியேனை ஆட்கொண்டருள வேண்டும் என்று பிரார்த்தித்தான். முத்தமிழ்களை முழுதுணர்ந்த முனிவர், முகமும் இருதயமும் மலர்ந்து, 'அவ்வாறேயாகுக' என்று மொழிந்து மேலும் கூறியதாவது:—

'அன்பனே! நீ திருக்கேதாரத்தலத்திற்குப் பக்கத்திலேயுள்ள பூர்ச்சவனத்திலே இரு சிகரங்கள் இருக்கின்றன. அவற்றையெடுத்து நம் பொதிகைக்குக் கொண்டு வருவை

* இவன் வனசஞ்சாரம் செய்யுங் காலத்தில் சிவபெருமானைப் பூசித்துத் தேவ சேனாதிபதியாகிய குமாரக் கடவுளின் திருவருளுடன் அவர்க்கு அடிமையாக வேண்டுமென்றே பூசித்தான் என்றும் சிவபெருமான் தோன்றி 'நினைக்கு அவை கூடும்' என்று அருள் பாலித்தார் என்றும், அத்தலம் இடும்பவனம் என்னும் இடம் என்றும் கூறுவர்.' அது கோயிலூருக்குத் தென்கிழக்கில் 10 மைல் தூரத்தில் உள்ளது. இவ்வசுரன் திருக்கன்றாப் பூரிலும் பூசித்து வரம் பெற்றான் என்றும் வரலாறு உளது.

சத்திகிரி. (இடும்பன் மலை.) சிவகிரி. (பழனி மலை.)



யேல், அதனால் பெறுதற்கரிய பேற்றை அடைவாய்; அவ் விரு மலைகளின் மகிமை விளம்புதற்கு அரியது'

என்று சொல்லி ஆங்குச்செல்லும் வழிகளையும் உணர்த்தி மூல மந்திரமும், வழிபாடும் உபதேசித்து அனுப்பினார். இடும்பன் தன் மனையாள் தன்னருகிருந்து ஏவல் செய்யவும், காய்கனி கிழங்கு முதலியன உதவி உபசரித்து வரவும், அகத்தியனார் அறிவித்த வழிச்சென்று ஆங்காங்குள்ள சிவதலங்களை யெல்லாம் அன்புடன் சென்று தரிசித்து, இறுதியாகப் பூர்ச்சவனம் என்னும் பெயரிய வனத்தையடைந்து இரு சிகரங்களையுங் கண்டு களிப்படைந்தான். அக்களிப்பின் மிகுதியால், தான் செய்த தவம் தனக்குச் சித்தியானமைக்கு மிக்க மகிழ்ந்து தன்னையே அளவு கடந்துபுகழ்ந்து கொண்டான். பின்னர், இடும்பி ஏவல் செய்ய அவ்விருமலைகளையும் பூசித்தான். அகத்திய முனிவர் உபதேசித்த மூலமந்திரத்தை விதிப்படி ஜபித்துத் தியானத்திருந்தான். அப்போது அம்மந்திர சக்தியால் பிரமதண்டம்—புயதண்டமாகவும், (புயதண்டமாவது சுமை சுமைப்போர் தோளில் வைக்கும் தண்டு. அதனைக் 'காவுதடி' என்றுங் கூறுவர்) அஷ்டதிக்கு நாகங்களும் கயிறுகவும், தன் பக்கத்தில் வந்தமர்ந்தமை கண்டு வியந்து, உற்சாகமடைந்து மேகம்போல் எழுந்து கைகுவித்து இருமலைகளையும் பாம்புகளால் உறிபோலச் செய்து அகப்படுத்திப் பிரமதண்டுடன் பிணித்து மூல மந்திரத்தை யுச்சரித்தவண்ணம் புயதண்டத்தைத் தோளில் வைத்து மண்ணில் முழங்காலையூன்றி யெழுந்தான். திருக்கைவேல் நாயகன் திருவருளாலே மலைகள் இரண்டும் எழுந்தன. இடும்பாசூரன் அவைகளைத் தோழிற் சுமந்துகொண்டு காவடி யெடுப்பார் போல் நடந்து சென்றான். திருமுருகன் திருவிளையாட்டினாலே அவனுக்கு நெறிமயங்கி விந்தமலை வழியாகச் சென்று

8

மல்லிகார்ச்சுனம், திருக்காளத்தி, திருவண்ணாமலை, விருத்தாசலம், புட்பகிரி என்னும் திருத்தலங்களை அடைந்து தரிசித்துக்கொண்டு மேற்செல்லத் தோன்றாது திகைத்து நின்றான். அப்போது அயில்வேல் அண்ணல், அரசகுமார வடிவுகொண்டு இடும்பன் எதிரேசென்று, மலைகளைச்சுமந்து கொண்டு நிற்கும் நீ இராக்கதன் போலும், வழிதெரியாது மயக்கம் அடைந்துள்ளதாக நினைக்கின்றேம். அவ்வாறாயின், யாம் அறிவிக்கும் மார்க்கஞ் சென்றால், வராகமலையில் தங்கி இளைப்பாறவும், அங்குநின்றும் பொதிகைக்குப் புறப்படவும் வசதியுண்டாகும்; உனது அபீஷ்டமும் நிறைவேறும்' என்று கூறி, செல்லும் நெறிகளையும், திசைகளையும் விவரப்பட யுணர்த்தினர். அதுகேட்ட இடும்பன் மகிழ்ந்து, இவ் வரச குமாரன் கிருபைக் குணமுடைய வள்ளல் போலும் என்று வாஞ்சைபெறக் கூறி, அங்குநின்றும் நீங்கி அவர் உரைத்த வழியாகவே பல மார்க்கங்களையுங் கடந்து வானுற வோங்கி வளர்ந்த வராகமலையின் வடபாலுள்ள திருவாவினன்குடி என்னும் திருத்தலத்தை அடைந்தான்.

திருவாவின்குடியை அடைந்ததும், ஆறுமுகத்திறைவர் அதிசய நினைவால், அசுரனுக்கு அசலங்கள் அதிபாரமாகத் தோன்ற கால்களும், தேகமும் தளர்ச்சியடைந்து, தாகமும் பசியும் வருத்த, புயவலிமை குறைந்தவன் நிகர்த்த துன்பத்தை அடைந்து, நீண்ட இருமலைகளினது சுமையை நிலத்திடைத்து வைத்தனன். பின்னர் பக்கத்துள்ள வனத்தை யடைந்து வாமதேவர் ஆசிரமத்தில் இடும்பியுதவிய கனிகளையும், கந்த மூலாதிகளையும் உண்டு பசியாறி வழியிளைப்பைத் தீர்த்துக் கொண்டு, மீண்டும் மலைகளைத்தூக்க ஆரம்பித்தான். புயங்கள் முறிந்தன. பிடரின் பக்கம் நெரிந்தன, முழந்தாளும் கால்களும் ஒடிந்தன. நீண்ட விழிகள் பிதுங்கின. பெருமைகெட்டு நமது

வலிமையுங்கெட நேர்ந்த காரணம் தோன்றாது துன்பமுற்று மனநடுக்கங் கொண்டு பலவாறு ஆலோசித்தான். திருமாலை மனைவியாக வுடைய சிவபெருமானுக்குத் தொண்டரான தவமிக்குடைய அகத்திய முனிவரது அடிமைக்கு உரிய வனாகிய நானும் எனது வலிமையும், தொழிலும், அற்றை நாளில் உபதேசித்த மந்திரமும், இன்று பயன்படாதவாறு தாழ்வடைந்தமைக்கு இங்கு ஏதோ! ஒரு சூழ்ச்சி நடந்திருப்பதாகத் தோன்றுகின்றது. அச்சூழ்ச்சி செய்தானைக் கண்டு தண்டித்தல் வேண்டுமெனக் கறுவுகொண்டு, சிவகிரிச் சிகரத்தின் மீது சென்று அகன்று விரிந்த தனது பெரிய கண்களினால் பரக்கப் பார்த்தான். அங்கோர் பால் குராமரத்தின் நீழலில் மழலைமுதிர்ந்த கனிவாய்ச் சிறுவன் தனியே நிற்பதைக் கண்டான். இவனுக்கு அப்பொழுது முனிவொழிந்து மகிழ்ச்சிமேலோங்கியது. வியந்த சிந்தையனாகி இக்கட்டழகுடைய பாலன் இயக்கனோ! தேவர்களுள் ஒருவனோ! மந்திரம் மாயை என்னும் இவற்றைப் பயின்றவனோ! மற்றியாவனோ! அறியேன் என்று அருகே சென்றான். பிடரியில் அலையும் அழகிய குஞ்சியும், கருணை ததும்பும் கவினுடைய கண்களும், அழகு பொலியும் திருவதனமும் உபவீதமும், பதக்கமும் அணிந்தமார்பும், கையினிடத்து வனப்புமிக்க தண்டாயுதமும் விளங்க, நீண்ட கோவணவுடையுடன் நிற்கும் அவனது நிலையைப்பார்த்து, 'குமாரனே! நீ இங்கு தனியே நிற்பதென்? வழிதவறி வந்தனையோ என்று வினவினன்?' குமரவேள், அவன்பால் அன்பு சுரந்து அவன் வலிமையை அடக்கிப் பின்னர் நன்மை பொருந்திய தமது பேரருளைச் செய்யத் தம்முள் நினைந்து, அவன் வினவுக்கு விடைகூறாது புன்னகைபுரிந்தனர். அது பொறாத அசுரன் கோபித்து அக்குமாரனைநோக்கி 'நீ இக்குன்றினைவிட்டு அப்பால் செல்லுதி; நான் கொலைத்

தொழில் புரியும் கொடிய அசுரன் என்பதை அறிதி' என்றான். குழந்தை வேலப்பர் அவ்வசுரனைப் பார்த்து, 'இராக்கதா! நீ கொண்டுவந்த இம்மலைகள் எமது இனிய வாசத்திற்கு ஏற்றதாயிருப்பதால் இங்கு விட்டுச்செல்லுதல் நன்று. இல்லையேல், உனக்கு வலிமையிருந்தால் எடுத்துச் செல்' என்று இயம்பினர். இடும்பன் சீறிச்சினந்து, 'சிறுவனே நீ குற்றமில்லாதவனும், பொய்யென்பதைப்புகலாத புனிதனும் என்பதை நான் உணர்கின்றேன். ஆயின், நீ வஞ்சனையில் வல்லானாயிருக்கின்றனை. எனினும், நான் அதற்கு அஞ்சுகில்லேன். இலக்குமியை யுடைய விண்டுவை, திருக்குற்றாலத்தை யடுத்த திருச்சத்தி முத்தத் திருத்தலத்தில் சிவபெருமானாகச் செய்த வித்தையில் வல்ல அகத்தியரின் அடியானாகும். கொடியவனாகிய என் முன்னர் நீ நிற்க மாட்டுவையோ! என்று கடுமொழி கூறித்தனது இருகைகளைப் பிசைந்து கொண்டும், பற்களைக் கடித்துக் கொண்டும், தலையை அசைத்துக்கொண்டும், கண்களில் தீப்பொறி சிந்தவுமாகக் குராமர நீழலிலே நின்ற குமாரன் மீது பாய்ந்தான். பாய்ந்தபோது ஐயனது வேலோ! தண்டாயுதமோ! யாவையோ! அவனைக்கொன்றது. பர்வதாகாரமாய்ப் பாரித்த இடும்பாசூரன், வெட்டி முறித்த விருட்சம் போல் பூமியில் வீழ்ந்து உயிர் நீத்தான்.

முன்னர், அகத்தியர் மந்திரோபதேசத்தின் சக்தியினால் தோன்றிய பாம்பின் கயிறுகளும், நீண்ட காவுதடியும் மின்னென மறைந்து தம்மை ஏவிய அகத்திய முனிவர்க்கு அறிவித்துத் தத்தம் இருக்கை சேர்ந்தன. அசுரன் சடலம் வீழ்ந்த பேரரவங்கேட்ட இடும்பி, திடுக்கிட்டு மனம் பதைத்து ஓடிவந்து புலம்பியழுது கண்ணீர் வடித்து நின்றாள். கந்தபிரான் உளம் இரங்கி மயில்வாகனரூடராய், கணங்கள் புடைசூழ, வாத்தியங்கள் ஒலிப்ப,' அவள் கண்

ணெதிரே தோன்றிக் காட்சியளித்தார். இடும்பி அவரது செக்கர் வர்னம் போன்ற திருமேனியையும், வேலாயுதந் தரித்த சிவந்த கைகளையும், அழகு பொலியும் அதிசய திருக்கோலத்தையும், கண் பெற்ற பேருகக் கண்டு, அக மகிழ்ந்து அவரது அடியிணைகளில் வீழ்ந்து வணங்கி, இரங்கிய குரலில், ஐயனே! ஆதரவற்றவர்களுக்கு அருந் துணையே! தேவர் இன்று எனது நாயகனைத் தடுத்தாட்கொண்டதற்கு மகிழ்கின்றனேன். என்றாலும், அகன்ற பூமியிலும் உயர்ந்த வானத்திலும் வாழ்கின்ற தேவரது அடிக்குடிலாருள், தனித்தவளாகிய யானும் அடியவளன்றே! ஆனதால், அறுமுகத் தெந்தையே! எளியளாகிய எனக்குத் திரு விளங்கும் திருமாங்கலியப் பிச்சை தந்தருளவேண்டுமென்று இறைஞ்சி நின்றாள். எஃகுடையண்ணல் அவளது வேண்டுதலுக்கு அருள் சுரந்து, 'நீ விரும்பியவாறே தந்தோம்' என்று கூறி இடும்பனைக் கடைக்கணித்தார். அக்கணமே அவன் துயில் நீத்து எழுந்தான் போல் எழுந்து, அண்ணலை நோக்கி, அடியேன் அறியாமையாற் செய்த பெரும்பிழையைத் தேவர் பொறுத்துத் திருவருள் பாலிப்பதோடு, எளியன் இத்திருமலையிலிருந்து தேவரீருக்குத் திருத்தொண்டு புரிந்து கொண்டிருக்கவும் கருணைசுரத்தல் வேண்டும் என்று திருவடிதொழுது நின்றான். ஐயனும் அவ்வாறே அருளி அந்தர்க்கதம் ஆயினர்.*

மேற்குறித்த புராண வரலாற்றிற் குரிய சம்பவம் நிகழ்ந்த இடமும், சம்பவத்திற்குச் சம்பந்த முடையவர்களின் உருவங்களும், இன்றும் காட்சிப் பிரமாணமாகப் பழநிமலையின் மத்திய பாகத்தில் இடும்பன் கோயில் என்னும் இடத்தில் சிலாரூபங்களில் சித்தரிக்கப் பட்டிருக்கின்றன. இங்ஙனம் பிரதிஷ்டிக்கப் பட்டுள்ளவைகளில் கிழக்கு

நோக்கியுள்ள சிறப்புச் சிறப்புள்ள அழகிய கற்றளியில் குழந்தை வேலப்பரும், (இவரை இப்பொழுது குராவடிக் குமாரன் என்று சிலர் கூறுகின்றனர்) வடக்கு நோக்கியுள்ள சிற்றாலயத்தில் இடும்பா சூரனும், அவனது ஆசிரியர் அகத்தியரும், அசுரனை ஆட்கொண்டருளிய அயில் வேலண்ணனும், தெற்கு நோக்கியுள்ள சிற்றாலயத்தில் இடும்பிக்கும் இடும்பனுக்கும் இறுதியாகக் காட்சி தந்தருளிய ஆறுமுகத் திறைவரும் கோயில் கொண்டருள்கின்றனர். இவர்களை யாத்ரீகர்கள் முதலில் தரிசனஞ்செய்து தீபாராதனை செய்வித்துத் திருநீறுபெற்ற பின்னரேயே மலைமேற்செல்வதை வழக்கத்திற் கொண்டுள்ளனர். இதுபற்றியே 'இடும்பனைத் தரிசிக்கின்றவர் கடம்பனைத் தரிசிக்கின்றனர்' என்ற பழமொழியும் மக்களுள் வழங்கப்படுகிறது.

இடும்பன் கோயிலில் காட்சிப் பிரமாணமாக விளங்குகின்ற சிலாவிக்கிரகங்கள், பண்டுநிகழ்ந்த சம்பவம் உண்மையென்பதை உறுதிப்படுத்தும் ஆதாரங்களென்று சில ஆன்றோர்கள் கூறுகின்றனர்.

---

## திருவாவினன்குடியும்—பெயர்க் காரணமும்.

வெண்பா.

ஒருவாவி ஞான வுயர் பொருளாய் மேவும்
திருவாவி னன்குடி வாழ்செய்ய—முருகன்
திருக்கழலைச் சிந்தித்தே தீமையெல்லாம் தேய்த்தே
இருக்கலாம் நல்ல சுகத்தே.

கடையெழுவள்ளல்களில் ஒருவனாகவும், ஈகைக்கு ஒரு எல்லையாகவும் புகழ் மிகுந்து, யாவராலும் போற்றும் மேவருஞ் சிறப்புடன் திகழ்ந்து, பாம்பு கொடுத்த அரிய நீல நிறப் போர்வையை ஆலின் கீழிருந்த இறைவர்க்குச்



திருவாவினன்குடி. (தென்பாகம்)

சாத்தி, அந்தமில் இன்பவீடு புகுந்து, இன்றும் வள்ளன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகவுள்ள 'ஆய்' என்னும் பெயரிய வள்ளல் இருந்த ஊர் 'ஆய்குடி' என்றும்; குமரவேள் குன்றினையே குடியாகக் கொண்டுள்ளமையால் 'குன்றக்குடி' என்றும, வேலன் இருப்பிடமாக வுள்ள இடத்திற்கு 'வேலன்குடி' என்றும் பெயர் வழங்கப்பட்ட வாறுபோல 'ஆவி' என்னும் பெயரினன் வாழ்ந்து சிறந்த காரணத்தால் 'ஆவினன்குடி' என்று இதற்குப் பெயர் வழங்கப்பட்டது. ஆவி என்னும் வேளிர் தலைவன் இங்கு வெகு பிரபலமாகவும், சிறப்பாகவும், வாழ்ந்திருந்தான் என்றும், அவன் பெயரானே இத்தலத்திற்கு இப்பெயர் இடப்பட்டதென்றும், பழந்தமிழ் நூல்களில் வரலாறு காணப்படுகின்றது.

ஆவிநன்குடி—ஆவினன்குடி

வேளிர் என்பவர் தொன்று தொட்டுள்ள தமிழரேயாவர். இவர் புறநாட்டிலிருந்து வந்து குடியேறின அன்னியர் அல்லவென்று தோன்றுகிறது. என்னெனின், வேளிர் தமிழரையும், தமிழ்க் கவிகளையும், தமிழ் முறைகளையும் போற்றினரேயன்றிப் பிற செல்வர்களைப்போல் வடமொழியையும், வடகலையையும் பரப்ப முயன்றாரில்லை. வேளிர் பெரும் புகழ் பெற்றதோடு வீரர்களுமாக விளங்கினர்.

இனி, பழநித்தலபுராண ஆசிரியர் 'பாலசுப்பிரமணியக் கவிராயர்' அவர்கள், தமது புராணத்தில், இத்தலத்திற்குத் திருவாவினன்குடி என்பது பெயர் என்றும், இப்பெயர்க் காரணம் திரு—இலக்குமியும்; ஆ—பசுவும்; இனன்-சூரியனும்; பூசித்த தலம் ஆதல்பற்றி இப்பெயர் பெற்றதென்றும்; குடி என்பதற்கு தலம் என்பது பொருளானதால், இவையாவுஞ் சேர்ந்து திருவாவினன்குடி என்று பெயருண்டா

யிற்று என்றும் கூறியிருக்கின்றனர். சிலர், கு-பூமியும் டி-அக்கினியும், பூசித்தது என்றுங் கூறுவர்.

திருப்புகழ் பரமாசாரியாரும், முருகவேள் மெய்யடியார்களில் ஒருவருமான ஸ்ரீ அருணகிரிநாத அடிகள், திருவாவினன்குடிக்குரிய பெயரை, மேற்காட்டிய இரண்டு பெயர்களுக்கும் வேறாக, நன்கு ஆராய்ந்து மிக்கப்பொருத்தமாக அழகுபெறத் தமது திருப்புகழில்,'இத்தாரணிக்குள்' என்ற தொடக்கத்துப் பாசுரத்தில், ...............'திருப்பழநி' வாழ்வுக் குகந்தடிய ராவிக்குள் நின்றுலவி வருபெருமாளே, (55) என்று கூறியிருக்கின்றனர். இதன் பொருளாவது:— "திருவாவினன் குடி என்னும் திருத்தலத்தில் அமர்ந்திருக்கும் நிலையில் விருப்பமுள்ளவனும், மெய்யடியார்களது உயிருக்குள் கலந்துநின்று களித்துலவும் பெருமாளே" என்பதாம்.

அல்லது 'பரம்பொருளின் அன்பைப்பெற்ற அடியவர்களின் உயிராகிய "நல்ல வாசஸ்தலம்" என்று பொருள் கொள்ளினும் பொருந்தும். 'குஹன்' என்பதங்கு—'அடியார்களின் இருதய குகையில் விளங்கும் ஆகாசத்தை இருப்பிடமாகக்கொண்ட பரமாத்மா' என்பது பொருளாம் என்று பெரியோர் கூறியிருத்தலின், இப்பொருள் மேற்காட்டிய கருத்திற்குப் பொருந்தியிருப்பது பாராட்டற் குரியதே. சிலர், குஹன் என்பது அதிரகசியமாய் குகையில் வளர்க்கப்பட்டதால் வந்த பெயர் என்பர்.

இங்ஙனம் பெயர் சிறந்த இத்திருவாவினன்குடி, குமாரக்கடவுளுடைய படைவீடு ஆறனுள் மூன்றுவது எண்ணேயுடையது. உச்சிமேற்கொள்ளும் நச்சினார்க்கினியரால் நன்கு பாடப்பட்டது. குமாரஸ்தலங்களுள் மிகப்பிரசித்தி பெற்றது. மலைக்கோவிலின் கர்ப்பக்கிரகத்தின் இருபக்கத்தி

லும் கல்வெட்டுகள் அதாவது சிலாசாஸனங்கள் காணப்படு கின்றன. பழநியாண்டவன் ஆலயத்திலும் பழைமை யான இத் திருவாவினன்குடிக் கோயிலில் கல்வெட்டு ஒன் றேனும் காணப்படவில்லை. காரணம்—பழைய கோயிலை இடித்துப் புதிய கோயிலாகக் கட்டியவர்கள் முன்னிருந்த கர்ப்பக்கிரகத்தில் பொறிக்கப்பட்டிருந்த சிலாசாஸனங்களை விழிப்பாயிருந்து கவனித்துச் சேமித்து வைத்திருந்து மீண்டும் முன்னிருந்தபடியே அவைகளைச் சேர்த்துக்கட்ட மறந்ததேயாம். இதனால், சாஸன மறைவும் அக்கோவி லின் பழைமை வரலாறும் நாம் அறிய இயலாமற்போயின. பூர்விகச் செய்திகளையும், பழைய கல்வெட்டுகளையும் காப் பாற்றி வைப்பதில் கவனமுடைய சில முதியோர், புதிய ஆலயங்களைக் கட்டத்தொடங்கும் போது அதிலிருந்த சாஸனங்களை அப்படியே பிரதிசெய்து வைத்திருந்து திருப் பணி முடிந்ததும் பண்டுபோலவே, அதிலுள்ளவாறுவெட்டி வைத்து விடுவார்கள். இக்காலத்திய திருப்பணிச் செல் வர்கள் கோயிலைப்பிரிக்கு முன்னர், பழைய கல்வெட்டுக் களைக் கவனியாமல எறிந்து விடுகிறார்கள். இதனால் சரித் திர ஆராய்ச்சிக்கு உண்டாகும் நஷ்டம் அளவிடமுடியாது. இவ்வாறு கல்வெட்டுகள் நஷ்டமான கோயில்கள் பலவுள. அவைகளில் இத் திருவாவினன்குடிக் கோவிலும் ஒன்று.

கல்வெட்டுகளால் அடையும் பயன் மிகுதியானவை. அக்காலத்து அரசியல் முறை, தரும முறை, பூஜை முறை முதலியவற்றை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணரலாம். பழநித் தண்டபாணி கோவிலைப் பிரதட்சிணம் செய்கின்ற பல்லோர்களில் ஒருவராவது ஆண்டவன் கர்ப்பக்கிரகத்தில் பொறிக்கப்பட்டுள்ள சிலாசாஸனங்களைப் படிக்க முயல் கின்றாரா? இல்லை. முயலினும் முழுதும் தெளிவாக அறிய முடியாது. நமது நாட்டு வரலாற்றையும், பழைய காலத்

துப் பெருமையையும் கற்றறிய முயலாமல், கல்வி கற்றவர் என்ற பெருமையைக் கொள்கின்றவர் கல்வி, அறிஞர்களால் அங்கீகரிக்கக் கூடாதனவாம்.

பூர்வம், திருவாவினன்குடி குமரவேளுக்கு, அவனது அடியார்கள், பல்வேறு திருப்பணிகள் செய்திருப்பதாக சுமார் 100 அல்லது 150 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதி வைத்துள்ள ஓலைச்சுவடிகளிலும், அதற்குப் பின்னர் தோன்றிய அச்சுப்பிரதிகளிலும் காணப்படுகின்றன. அவை:—

திருவாவின்குடி குழந்தை வேலாயுதப் பெருமானுக்குச் சேரர்கோன், ஆலயஞ் சமைத்து மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்வித்தானென்பதும்; கி. பி. 16 ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் விஜயநகரத்து அரசனுகிய 'கிருஷ்ணதேவ ராயன் பழநியாண்டவனுக்குச் சில திருப்பணிகள் செய்தானென்பதும்; அதன் காலம் சாலிவாகன சகாப்தம் 1413–ஆண்டு என்றும், (பவிஜவாரு புராணம் 107-ஆம் பக்கம்) வேறு குறிப்பில், சாலிவாகன சகாப்தம் 1432—ஆம் ஆண்டு முதல் 1453-ஆம் ஆண்டுவரை 39 சிவாலய-விஷ்ணுவாலயங்களுக்குத் தர்மங்கள் செய்தான் என்பதும், மதுரை நாய்க்க மன்னர்களில் மிக்கக் கீர்த்திவாய்ந்த 'திருமலை நாய்க்கர்' அவர்கள், கி. பி. 1641—ஆம் ஆண்டுக்குத் தமிழ் சித்திரபானு ஆண்டில் பூஜை நிவேதனங்களுக்குத் தேவதானமாகச் சில பூமிகளைத் தானஞ் செய்தானென்பதும் ஆம்.

இத்தருமங்கள், திருவாவினன்குடிக் கல்வெட்டுகளில் மறைந்து போனவற்றுடன் சேர்ந்திருக்கலாம் போலும்.

இங்ஙனம் பழைமை, பெருமை, மூர்த்தி, தலம், தீர்த்த முதலியவற்றால் மிக்குயர்ந்த இத்தலமும், மூர்த்தியும், தனது பண்டைய மகிமை குன்றி, பெருமையொழிந்து பக்தகோடிகள் வருகையும், தொழுகையும் குறைந்து இப்

பொழுது சாமான்ய நிலைமையில் உள்ளன. இதற்குக் காரணம் இல்லாமலில்லை. ஒவ்வொரு தெய்வத்தின் உபாசனைக்கும், ஆரம்பம், மகிமை, ஓய்வு என்ற காலங்களுண்டு. புண்ணியப்பதிகளும், புனிததீர்த்தங்களும் இவ்வாறே. இவைகளில் சில எப்பொழுதும் தரிசித்தும், மூழ்கியும் வரப்படுகின்றன. சில ஒருகாலத்தில் எல்லோராலும் ஆதரிக்கப்பட்டுப் பின்னர் மறைந்து போகின்றன. சில இதுவரையில் மறைந்திருந்து இப்பொழுது பிரபலமடைகின்றன. ஸ்ரீகாசி, காஞ்சீபுரம், மதுரை, ஸ்ரீரங்கம், இராமேச்சுரம், சிதம்பரம் முதலியன என்நாளும் மகிமை குறையாமல் இருக்கின்றன. முன்னர், இப்பக்கங்களில் பிரபலமாயிருந்த பெரிய ஆவுடையார் கோவில், பழநிப் பெரிய நாயகியம்மன் ஆலயம், திருவாவினன்குடி, கோழமம், கீரனூர், குண்டடம் முதலிய க்ஷேத்திரங்கள் மறைந்தவைகளிற் சார்ந்தன. ஆகவே, மனிதர்களுக்கு ஏற்படுவது போலவே, தெய்வம், தலம், தீர்த்தங்களுக்கும் ஆரம்பம்—மகிமை—ஓய்வு உள்ளன என்பது இவற்றால் அறியப்படுகின்றது.

பழநி மலையும், அம்மலைக்குரிய தெய்வமும், இவையெல்லாவற்றிலும் மிகப்பிரசித்தியுடையன. பழநியை குமாரஸ் தலங்களில் முதன்மையுடையதென்றும், இமய முதல் கன்னியா குமரிவரை கீர்த்தி நிறைந்ததென்றும், அதன் தலைவனை பாரதநாட்டின் பிரத்யக்ஷதெய்வமென்றும், கலியுக வரதன் என்றும், பக்தகோடிகள் மனதாரக் கூறி வாயார வாழ்த்துவதால் அறியலாம்.


சென்னிமலை, சிவன்மலை, தேன்சேரிமலை, முதலியவைகளில் கோயில் கொண்டருளும் தெய்வங்களுக்குப் பழநி மலைமேல் ஆலயங்கொண்ட தண்டபாணிக்குள்ள பெருமையும் பிரசித்தியும் உண்டா? அங்ஙனமே சிதம்பர நடராஜா

வின் சந்நிதிக்கு எதிரிலுள்ள ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாள் சூர்யனுக்கு முன் மினிபோல் விளங்குகிறார். சிதம்பரம் என்றவுடன் நடராஜாவின் பெயர் நினைவிற்கு வருவதல்லாது கோவிந்தராஜரை யாராவது நினைக்கின்றனரா? அதுபோல் பழநி என்ற பெயரைக் கேட்டதும், தண்டாயுதபாணியின் நினைவே முனைப்பாகத் தோன்றுகின்றது. இதனால், அவ்வாலயங்களும், அம்மூர்த்தங்களும் அப்பிரசித்தியாய் ஏதோ பேருக்கு அறிகுறியாய் விளங்குகின்றதென்பதை அறியலாம். அன்றியும், பண்டிதர், பாமரர், நாட்டுப்படிப்பு, சீமைப்படிப்பு, பழைய மாதிரி, புதுமாதிரி, நவீன நாகரிகர், சுகவாசிகள், உத்தியோகஸ்தர்கள், பிராமணர், பிராமணரல்லாதார், சைவர், வைணவர் என்ற பேதமின்றிச் சக்தி சகிதமாய்ப் பண்டார வடிவினராய், நித்யப் பிரமசாரியாய் விளங்கும் பழநியாண்டவனைத் தரிசிக்கின்றவர்கள் தொகை வர வர அதிகமாகி வருவதும் இவற்றை நன்கு வலியுறுத்தும்.

இவற்றால், பழநி மலையும் ஆண்டவனும் இப்பொழுது பிரசித்தியாய் விளங்குவதும், திருவாவினன்குடியும், திருமுருகனும் அப்பிரசித்தியா யிருப்பதும் தெளிவாவது காணலாம்.

இனி, நீண்டகாலம் திருவாவினன் குடி, தன் பெயரையேகொண்டிருந்தது. பின்னர், திருமுருகன் திருவிளையாடல் காரணமாக உமையம்மையும், சிவனும் குமரவேளை 'ஞானம் என்னும் பேற்றினையுடைய பழம் நீ' எனத் தமது திருவாய் மலர்ந்து அழைத்ததனால், அன்றுமுதல் திருவாவினன் குடிக்குப் பெருமை மிக்கப் 'பழநித்தலம்' எனப் பெயர் வழங்குவதற்காயிற்று.

பழம் + நீ = பழநி. பழம் நீ என்னும் சொற்றொடர் 'அல்வழி யெல்லாம் மேல்லெழுத்தாகும்' என்ற தொல்காப்



திருவாவினன்குடி (வடபகுதி.)

பியப் புள்ளி மயங்கியற் சூத்திர விதியால் மகரங் கெட்டு பழநீ எனப் புணர்ந்து, 'நீயெனொரு பெயர் நெடுமுதல் குறுகும்' என்ற உருபியல் சூத்திரப்படி பழநி யெனமுடிந்தது.

இதற்கு,

"கூறுடை யாளுங் குன்றுக் குணப்பெருங்குன்று ஞானப்
பேறுடைப் பழநீ யென்னப் பெயரது மருவியெங்கள்
ஆறுமா முகவன் வைகும் நகரமும் அன்று தொட்டு
வீறுதொல் பழநீ யென்றே விளம்பின வுலக மூன்றும்"

எனவரும் பழநித்தல புராணம் திருவாவினன்குடிச் சருக்கம் 73 ஆம் கவி ஏற்ற சான்றாகக் கொள்ளற் குரியது.

ஒரு மாதுளம் பழம் நிமித்தம் பிணக்கங்கொண்ட முருகப்பிரானை 'பழம் நீ' என்று பரமசிவம் திருவாய் மலர்ந்து விளித்து மகிழ்வித்தனர் என்பது புராணகதை. அக்கதை:—

"படைப்புக் கடவுளாகிய பிரமதேவன் திருமுன்னர், யாழ்வல்லராகிய நாரதமுனிவர் சென்று ஒரு காலத்தில் யாழ் (வீணை) வாசித்தனர். இசையின்பத்திற்கு இதயம் மகிழ்ந்த வேதா, சுவைமிக்க மாதுளங்கனி* ஒன்றைப் பரிசாகக் கொடுத்தனன். பெற்ற முனிவர் அந்நறுங்கனி எல்லாம் வல்ல இறைவருக்கே ஏற்றதெனக் கருதி அக்கனியை கைக்கொண்டு கயிலையை அடைந்து கண்ணுதலோன் திருமுன்னர் வைத்து வணங்கினர். அருகிருந்த கணபதியும், கந்தனும், அக்கனியைப் பெற விரும்பினர்.

அஃதுணர்ந்த பரமன், திருவிளையாடல் ஒன்று நிகழ்த்தக் கருதி அவர்களை நோக்கி உங்களில் யாவர் 'உலகை வலமாக விரைந்து சுற்றி எம் எதிரில் முன்னர் வருகின்றார்களோ அவரே இக்கனியைப் பெறுதற்கு உரியர்' என்று

* சிலர், மாங்கனி என்றும் கூறுகின்றனர்.

உரைத்தனர். யானை முகன், தொந்தி வயிற்றினன் ஆன தால், துணிபாது ஆலோசனையில் ஆழ்ந்தான். கந்தன் காளைக் குமரன் ஆனதால், ஓமெனச் சம்மதித்துக் காற்றி னும் கடிய வேகமாய்ச் செல்லும் தனது மயில்வாகனத்தின் மீது வீற்று உலகை வலம்வர முந்தினன். அத்தருணம், கரிமுகன் நுண்ணறிவு படைத்து, 'ஈசன்வேறு, உலகம் வேறு அல்ல' என்ற உண்மையைக் கருத்தாகக் கொண் டமைந்த,

"உலகமும் பல்லுயிரும் ஒன்றி நிறைந்தோங்கி
இலகும் பரஞ்சுடர் எம்மிறை"

என்ற ஆப்த மொழியை ஆதாரமாகக் கருதிச் சிவபெரு மானை வலம் வந்து, ஐயனைப்பார்த்து, 'தங்களை வலம் வந்தது உலகத்தை வலம் வந்ததனோடு ஒக்கும்; ஆதலால், கனி யைத் தந்தருள்க' என்று கரத்தை ஏந்தினன். புத்திக்கு இறைவனாகிய விநாயகனுக்கு ஞானத்தை அளிக்க வேண்டு வது நியாயமானதால், இறைவன் ஞானமாகிய அக்கனியை யானை முகப்பிள்ளைக் களித்தார்.

கந்தன் சர்வலோகங்களையும், வெகு விரைவாகச் சுற்றி வந்து திருக்கைலையை அடைந்தான். அப்பொழுது கண பதி கையில் கனியிருப்பக்கண்டு பிணக்குற்றுத் திருக்கயிலை நீங்கித் தென்றிசை நோக்கிச் சென்று தேவகிரியைச் சேர்ந் தான். அங்கே தன்னை நோக்கித் தவஞ் செய்து கொண்டி ருந்த தேவர், முனிவர்கட்கு வரங்களைக் கொடுத்து, வைகா வூரிலுள்ள திருவாவினன் குடி அடைந்து ஆங்கமர்ந்து இலக்குமி, சூரியன், காமதேனு முதலியோர்க்கு இஷ்ட சித்திகளை அளித்து இருந்தனன்.

கயிலையில் உமாதேவியார் தமது செல்வக் குமாரன் உலகைவலம் வந்ததும், கணபதி கனி பெற்றதும், அதனால்

தான் பிணக்குற்று கயிலை நீங்கியதும் அறிந்து ஆற்றாய் இறைவருடன் திருவாவினன் குடிக்கு எழுந்தருளினர். அங்ஙனம் வந்த அவ்விருவரையும், கந்தவேள் அடிவணங்கினன். எல்லாம் வல்ல இறைவர் உளங்கனிந்து இன்னுரை பல புகன்று எடுத்தணைத்து முதுகுதைவந்து உச்சிமோந்து அருகிருந்த அம்பிகையாரைக் கடைக்கணித்தார். தேவியார், திருக்குறிப்புணர்ந்து புன்னகை புரிந்து குமரனை வாங்கித் தோண்மேல் அணைத்து இன்சொல் வழங்கி மீட்டும் எமபிரானிடத்து ஈந்தார். அவர் வாங்கி தமது மடிமீது வைத்துச் செல்வக் கண்மணியே! நீ என்றும் இளமையுடையாய், எல்லா அறிவும் உள்ளாய், நீ சிறுவனோ? இல்லை இல்லை. பெரியோனன்றோ? மாதுளங்கனியும் ஒரு கனியோ? நீயே என்றுந் தெவிட்டாப் பேரின்பச் சுவையை இடைவிடாது கொடுக்கும் சிவஞானப்பழம் ஆவை. அங்ஙனமுள்ள பழம் நீயாகவும், உனக்கு வேறு பழமும் வேண்டுமோ? என்று இதமொழி கூறி ஞானகுருவைச் சமாதானஞ் செய்தார். ஞான நிலயமாகிய முருகன் பிணக்கொழிந்து மனமகிழ்ச்சி கொண்டான்'' என்பது.

மேற்குறித்த புராணக்கதை, அருணகிரி நாதரது திருவாவினன்குடித் திருப்புகழிலும் காணப்படுகிறது.

அப்பாடல்:—

> ''படியிற் பெருமித தகவுயர் செம் பொற்
> கிரியைத் தனிவலம் வரஅர னந்தப்
> பலனைக கரிமுகன் வசமரு ளும்பொற்—பதனாலே
> பரன்வெட் கிடவுள மிகவும் வெகுண்டக்
> கனியைத் தரவிலை யெனா அருள் செந்திற்
> பழநிச் சிவகிரி தனிலுறை கந்தப்—பெருமாளே'' (3)

என்பது. பொருள் வெளிப்படை.

திருப்புகழ் முந்தியா? புராணம் முந்தியா? என்பது ஆராயற் பாலது.

## பழநித் தலமும்—பழமைப் பெயரும்.

"ஆசை யொடு கேட்பினுங் கண்டாலுந் துதித்திடினும்
பாசவினை தீர்க்கும் பழநி" (பழநி வெண்பா)

பழநிப்பதிக்கும், அப்பதிக்குரிய மலைத்தெய்வமாகிய முருகபிரானுக்கும் பெயர் வந்த வரலாறு இதுவாக, மற்றும் இத்திருத்தலத்திற்கு மிகப்பழைய காலத்தில் 'போதினி' என்ற பெயர் வழங்கியதாகச் சங்கமருவிய நூல்களுள் ஒன்ருகிய "அகநானூறு" என்னும் பெயரிய தொன்னூலில் இரண்டு செய்யுட்கள் காணப்படுகின்றன. அவை ஏற்ற சான்ருகக் கொள்ளதற்கு உரியனவாதலால், அவற்றை இதன்கீழ் தருகின்ரும். அவை:—

"வண்டுபடத் ததைந்த கண்ணி யொண் கழ
லுருவக் குதிரை மழவ ரோட்டிய
முருகனற்போர் நெடுவே ளாவி
யறுகோட் டியானைப் 'போதினி' யாங்கண்"

II

"முழவுறழ் திணிதோ ணெடுவே ளாவி
பொன்னுடை நெடுநகர்ப் போதினி"

எனவருவன.

இச்செய்யுட்களால், 'ஆவி' என்னும் பெயரினன் வேளிர் தலைவனும், சிறந்த வீரனும், பொதினி என்னும் நகர்க்கு உரியவனும் ஆவன் என்பது அறியப்படுகிறது. இவ் அகநானூற்றுச் செய்யுட்களுக்கு அரும்பதவுரை எழுதிய ஆசிரியர், 'நெடுவேளாவி—குறுநில மன்னன்; போதினி—ஆவிமலை என்று எழுதியதோடு; அவன் இருந்து அரசு செய்த பொதினி என்னும் பெயரியநகர், அப்பெயர் வாய்ந்த மலையின்பாற் பட்டதென்றும் விவரித்துள்ளனர்.

இவற்றை ஓர்ந்துணர்ந்த அறிஞர்களில், மதுரை 'செந்தமிழ்' மாஜிப் பத்திராசிரியர் ரா. இராகவையங்கார் அவர்கள், பொதினி என்பது-இப்போது பழநி என வழங்கும் மலையும், ஊரும் ஆமெனவும், பழநிக்கு 'ஆவினன்குடி' என்பதே பழமையாக வழக்கத்தில் இருந்ததாகத் தெரிவதால், அது வேள் ஆவிக்குரிய ஊர் என்பதை நன்கு விளக்குவதெனவும், பழநி என்ற வழக்குப் பழைய நூல்களில் காணப்படாமையின், பொதினி என்பதே பழநி எனப் பிற்காலத்தில் மருவி வழங்கப்பட்டதெனவும், வேள் ஆவியின் வழியினனாகிய 'பேகன்' என்ற கடையெழு வள்ளலை 'வையாவிக்கோ' எனப் பழைய தமிழ்நூல்களில் வழங்குதற்கேற்ப, பழநிப்பதியிலுள்ள ஏரி ஒன்றிற்கு 'வையாபுரி' (வையாவிபுரி) என்ற பெயர் இப்பொழுதும் வழக்கத்தில் வழங்கப்பட்டு வருவதெனவும், தமது செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியிட்டுள்ளார். சேது சம்ஸ்தான வித்வானும் தமிழ்ப் பேரறிஞருமாகிய இப்பெரியாரது ஆராய்ச்சி, யாவராலும் ஏற்றுக்கொள்ளற் குரியதே.

மேலே காட்டிய அகநானூற்றுப் பாடல்களில், முருகன், நெடுவேள், நெடியோன் என்று குறிக்கப்பட்டுள்ள பெயர்கள், அப்பொதினி மலைக்கண் முருகக்கடவுள் கோயில் கொண்டருள்கின்றமை அறிவுறுத்துவனவாம். முருகன் என்பதற்கு இளையோன், குமரன் என்றும், நெடுவேள் என்பதற்கு மேலான அழகுடையவன் என்றும், நெடியோன் என்பதற்கு—பொதுவாக உயர்ந்தோன் என்றும் பொருள்களாகின்றன. மற்றும் இப்பெயர், பிற தெய்வங்கட்கும், அரசர்கட்கும் வழங்கும்;

நெடியோன் என்ற பெயர், குமாரக்கடவுளுக்கே உரியதென்பதற்கு, 'பரிபாடலி'லும் ஆதாரங்க ளிருக்கின்றன. அவை:—

"மஞ்ஞை வெல் கொடியுயரிய.......நெடியோன்"
"சேவலங் கொடிய னெடியன்"

என்பன.

நெடியோன் என்பதற்கு, (தான்வேண்டிய வடிவு கொள்ளுதலில் பிள்ளையாயிராது) நெடுக வளர்ந்தவன் என நச்சினார்க்கினியர் உரை கூறியிருக்கின்றனர்.

இனி ஒரு சாரார், 'நெடியோன்' அடையடாமல் தனி மொழியாயிருப்பின், மாயோனையே உணர்த்தும் என்பர். அப்படிப்பட்ட மொழியும் குமரக்கடவுளையே உணர்த்தா நிற்கும். "திருமுருகாற்றுப்படை" 211—ஆம் அடியில் "கோடியன் நெடியன் தொடியணிதோளன்" என்பதனால், அத்தனி மொழியும் குமரக் கடவுளைக் குறித்தமை யறிக.

குமரக் கடவுளுக்கு மயிற் கொடியும் உண்டென்பது, பல்பொறி மஞ்ஞை வேல் கோடியகவ" என்ற திருமுருகாற்றுப்படை 122 அடியால் போதரும்.

பொதினி என்பது, பிற்காலத்துப் பழநி யெனச் சிதைந்து வழங்கப் படுவதற்குப் புராண கதை ஆதாரம் போலும்.

பின்னும், இப்பதிக்கு வேறொரு பெயர் இருப்பதாக அருந்தமிழ் மூதாட்டி அவ்வையார் பாடிய தனிநிலைக் கவியால் அறியப்படுகிறது. அது 'சித்தன் வாழ்வு' என்பது. அப்பாடலும், அப்பாடல் பாடுவதற்கேற்ற சந்தர்ப்பமும், வரலாறும் அடியில் வருமாறு:—

"அவ்வையார் ஒரு காலத்தில், தமது தமிழ் நாட்டுத் தலயாத்திரையில் கொங்குநாட்டில் 'சித்தன் வாழ்வு' என்ற திருவாவினன்குடியில் சிலநாள் தங்கிப் பின்னர், பாண்டிப் பதிப் புகுந்து அங்கு அப்பொழுது அரசு செய்துகொண்டிருந்த 'உக்கிரப் பெருவழுதி' என்னும் பெயரிய பாண்டிய

வேந்தன் அவைக்களம் புகுந்து, அவனது அருஞ்செயலைக் கவனித்தபோது அம்மாறன், செந்தமிழைத் திறம்பெற வளர்த்து வருவது கண்டு, மிக வியந்து, அச்செயலினைத் தமது திருவாக்கால் பாராட்ட நினைந்து,

நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன்வாழ்
வில்லந் தொறுமூன் றெரியுடைத்து—நல்லரவப்
பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியநின்
னாட்டுடைத்து நல்ல தமிழ். (வெண்பா)

என்று தமிழ் புனைந்து பாடினர். பாண்டியன் அப்பாட்டுக்கு மகிழ்ந்து அவ்வையாருக்குப் பரிசு நல்கினான்.

(அச்செய்யுளின் பொருள்)

சோழநாட்டு அம்பர் என்னும் ஊர் வளமையும், வண்மையும் மிக்க குடிகள் பலவுடையது, திருவாவினன்குடி முத் தீயோம்பும் நான்மறை அந்தணர் நிறைந்தது. இவற்றையெல்லாம்விட நான் கண்ட அதிசயம் இனிய சொற்பொருளமைந்த வளப்பமிகும் நல்ல தமிழ், சந்திர குலத்தோன்றலாகிய நினது பாண்டிய நாட்டின்கண் மிகுதியாகப் பயிலப்பட்டு வருவது" என்பது.

சித்தன் வாழ்வு என்பது முருகக் கடவுள் கோயில் கொண்டமைபற்றி வந்த பெயர். சித்தன்—பிள்ளையாருக்குத் திருநாமம் என்பர் நச்சினார்க்கினியர்.

'நல்லம்பர்' என்னும் தொடக்கத்துச் செய்யுளை அவ்வையார் பாடினர் என்பதற்கு, கோங்குமண்டல சதகத்தில் ஆதாரம் காணப்படுகிறது. அது:—

"நெல்லுங் கரும்புங் கமுகும் பலன்தர நேர்பருவம்
செல்வம் பரத்திசைத் துப்பொழிந் தோங்கிடு சித்தன்வாழ்
வில்லந் தொறுமூன் றெறியுடைத் தென்ன வெலாக்கலையும்
வல்ல வெளவை கூறியதுங் கொங்குமண்டலமே"

என்பது.

---

## தலச்சிறப்பும்—மூர்த்திமகிமையும்.

"வஞ்ச நெடும் பாவ மயக்கை யெல்லாந் தீயினிட்ட
பஞ்செனவே செய்யும் பழநி"

அறுபத்து நான்கு குமாரஸ்தலங்களில், திருமிகுந்த திருப் பழநிஸ்தலமும் ஒன்று. இது கொங்கு வைகாவூர் நாட்டின் கண்ணது. அஞ்சு நாட்டு மலையைச் சார்ந்தது. (இம்மலை கோடைக்கானலுக்குச் சமீபத்திலுள்ளது) மங்கலமிக்குவளர் கொங்கு நாட்டிற்கே இது பேரணியாய் விளங்கும் பெருமையுடையதெனக் கூறினும் மிகையாகாது. இத்தகைய தலத்தின் சிறப்பை எடுத்து மொழிதல் இசையாதெனினும், ஆசைபற்றி சிறிது அறையத் துணிகின்றேம்.

எல்லாம் வல்ல இறைவனும், அவரை அகலாத இனிதுறையும் எம்பிராட்டியும், கயிலைநீங்கி இங்கு எழுந்தருளி இதன் சிறப்பைத் தமது திருவாயால் எடுத்துரைத்திருப்பதனாலும், திருவின் கிழத்தியாகிய செந்தாமரையாளும், லோகப்பிரகாசனாகிய திவாகரனும், தெய்வப்பசுவாகிய காமதேனுவும் தவஞ்செய்து பேறு பெற்றதனாலும், சிவ—சத்திவடிவங்களாகிய இரண்டு சிகரங்கள் இங்கு காரணார்த்தமாய் நிலை கொண்டுள்ளதனாலும், அருந்தமிழை அகலவளர்த்த அகத்தியனார் அறுமுகச் சிவனை வணங்கி அருளுரை பெற்றதனாலும், சிவச்செல்வராகிய சேரர்கோன் வழிபட்டு ஆலயம் புதுக்கியதனாலும், மூன்றாம் படைவீடாகிய திருவாவினன்குடி சேரவிளங்குவதனாலும், கூவிளவனமும், அங்குக் கோயில் கொண்டு சுயம்பு லிங்கமாகத் திகழும் பெரிய ஆவுடையார் எனும் பிரகதீஸ்வரன் அமர்ந்தருளும் 'கௌசல சேரபுர'மும், பிரகன் நாயகி தவம் புரிந்த கன்னிகாரவனம் எனும் 'காராமடையும்' திருமால் திருக்கோயில் கொண்டருளும் 'லட்சுமீ நாராயணபுர'

மும் சூழ விருப்பதனுலும், பெருங்கவிவாணராகிய நக்கீர ரைது திருமுருகாற்றுப் படையும், அருந்தமிழ் புலவராகிய அருணகிரிநாத அடிகள் அருள் சுரந்து பாடிய அருமை மிகும் திருப்புகழும் பெற்றிருப்பதினுலும், மற்றும் புலமை மிக்க புலவர் பல்லோர் மனமுருகிப் பாடியுள்ள அருமைப் பாசுரங்களும், திருப்பழநி வெண்பா, பிள்ளைத்தமிழ், பதிற்றுப் பத்தந்தாதி, பள்ளு, குறவஞ்சி, அம்மானை, வேடபேறி முதலிய பிரபந்தங்களும் விளங்குவதனுலும், பார்த்தவர் மனங் குளிரப் பரவசத்தை யளிக்கும் பான்மையுடையதனுலும் இப்பதி ஏற்றம் பெற்றதெனக் கூறுவதில் இம்மியும் ஐய மின்று.

மேற்காட்டிய அப்பிரபந்தங்களில், 'அரிய புகழை யமைத்த பெரிய பழநி' 'காசியின் மீறிய பழநி' 'பதிஞ லுலகோர் புகழ் பழநி' 'பரமமயச் சோதிச் சிவமயமாம் நின் பழநி' 'அருள் சேர்துங்கப் பழநி' 'அதிசயம் அநேக முற்ற பழநி' 'தண்டமிழ்சேர் பழநி' 'வெற்றிப்பழநி' 'நற்பழநி' (திருப்புகழ்) 'படிக்கின்றிலை பழநித் திருநாமம் படிப்பவர்தாண் முடிக்கின்றிலை'(கந்தரலங்காரம்) "வஞ்சநெ டும் பாவ மயக்கை யெல்லாம் பஞ்செனவே செய்யும் பழநி" (திருப்பழநி வெண்பா) எனவரும் சொற்றொடர்கள் தலத் தின் சீரிய சிறப்பை, மேலும் செவ்விதின் விளக்க வல்ல தாம்.

மற்றும், இத்திருத்தலத்தின் நிலவளமும், நீர்வளமும் வியத்தற்கரிய அருமையுடையன வென்பதற்கு இதனடியிற் காணும் திருப்புகழ்ப் பொழிப்புரைகள் சிறந்த சான்று களாம். அவை:—

1. "பலாமரத்தின் பழமும், மிகவும் உயர்ந்த மாமரத் தினுடைய வாசனையும், இன்சுவையும், கனிவும் இவைகளு டனே நீண்ட வாழைமீன்கள் கலந்து சோலைகள் பொருந்தி

யிருக்கும் தன்மையினாலே வயலில் உழவர்கள் ஏர்களைப் பூட்டி உழுவதனால் விளையும் நஞ்சை நிலம் புரவுகள் மிகவும் நீண்டு அதிகமாயுள்ள பழநி." (32)

2. "தெய்வலோகத்திலுள்ள கற்பகம் முதலிய பஞ்ச தருக்கள் அடர்ந்து வளர்ந்த வனத்திலிருந்து, தேனை விரும்பி வண்டுகள் சூழும் மலர்கள், உதிரப்பெற்ற நல்ல நிலத்தையுடையது பழநி" (35)

3. "நல்ல வாசனை தங்கிய பலாப்பழங்களைக் கைகளினால் கிழித்துப் பிளந்து அவைகளின் சுவைகளை மலைகளின் படிகளில் போட்டுக் குரங்குகளின் கூட்டம் விளையாடும் பெருமையுடையது பழநி" (22)

4 "பலா மரத்தின் முதிர்ந்த பழங்களினின்றும், காண்போர் மனத்தில் தின்ன வேண்டுமென்ற ஆசை யுண்டாகுமாறு பெருகி, தேன் நிரம்பப்பெற்ற வயல்களினாலும், பாக்கு மரங்கள் அடர்ந்துள்ள சோலைகளாலும் சூழ்ந்தது பழநி" (3)

5. "பரந்து வளர்ந்துள்ள நல்ல வாழை மரத்தின் குலையிலுள்ள பழங்கள் முதிர்ந்து தேனைச்சொரியவும், நீர் நிரம்பிய நீண்ட நஞ்செய் வயலகளின வரப்புகளில் கரும்புகள் முத்துக்களைச் சிந்தப்பெற்றுள்ளது பழநி"

6. "குளிர்ந்தநீர் நிரம்பப் பெற்றதும், தாமரை முதலிய மலர்கள் மலரப்பெற்றதுமான நீரோடைகளிலுள்ள கயல் மீன்கள், குதூகலத்துடன் ஆகாயத்தை அளாவிச் சென்று மீளும் வெற்றிமிக்கது பழநி"

7. "தாமரை மலர்களின்மீது வண்டுகள் ஆரவாரிக்கப்பெற்ற சுனைகள்பல, அழகாகப் பொருந்தப் பெற்றுள்ள சிறந்த தலம் திருப் பழநி" என வருவனவாம்.

மேலேகாட்டிய நீர்வளம், நிலவளம், நெல்வளம், பழ வளம் முதலியன இப்பொழுது மாதிரிக்குக்கூடச் சிறிதும் காணவில்லையே, இவை அபூத வருணனையும், அலங்காரரூப மும்போலுமென்று அன்பர்கள் அபிப்பிராயப்படலாம். அத ற்குஅடியில் வரும் காரணங்கள் சமாதானத்தைத் தரலா மென்று நம்புகின்றோம். அவை:—

சுமார் 450, 500 ஆண்டுகட்கு முன்னர், இத்தலத்தின் பிரதேசங்கள் இப்பொழுதுள்ள விதம்போல் வளமை குன் றாமலும், செழுமை கெடாமலும், பூமியின் அடித்தலத்து நீர் சுரந்து ஓங்கி வளர்ந்த மலையின்மீதும், அதன்பாங்கரு முள்ள சுனைகளிலும், மடுக்களிலும் நீரோட்டம் மிகப்பெருகி நிலைபெற்றிருந்ததால், வாழைத்தோட்டங்களும், தென்னஞ் சோலைகளும், பலன்தரும் பழ மரங்களும், பூக்களும், மச் சம் முதலிய நீர் வாழ் ஜந்துக்களும், வண்டினங்களும் நிறைந்து செழுமை யுற்றிருந்தன. இவற்றால், அவைகள் புலவர்களின் கற்பனைகளுக்கு ஏற்ற கருவிகளாய் இலங்கி மதுரங் கனிந்த பாடல்களில் இடம் பெற்று, அன்பர் நாவி லும், நினைவிலும் நிலவுதற்காயின. தற்பொழுது அவ்வளப் பங்கள் முற்றிலுங்குன்றி அதன் வாசனையும் இல்லாதொ ழிந்ததற்கு, பூமியின் கீழுள்ள நீர்மட்டம் மிகத்தாழ்ந்து, நீர் சுரப்பின்றிச் சுருங்கியதால், பலா மரங்களும், பழத் தருக்களும், மலை மேல் பட்டொழிவதற்காயிற்று என்ப னவே.

இனி, இத்தலத்துத் தங்கியிருத்தல், மூழ்குதல், மந்தி ரஞ் சபித்தல், கடவுளைத் தரிசித்தல் முதலியவற்றால் யாத்ரீ கர்கள், அடைதற்கரிய அந்தமில் இன்பத்தை இங்கு எளி தல் அடைந்து இன்புறுவர் என்று தலப் புராணத்துப் பாடல்களில் காணப்படுகின்றன. அவற்றையும், அன்பர்கள்

அறியவேண்டுமானதால், அப்பாடல்களின் கருத்துக்களை மட்டும் இங்கு சுருக்கமாக வசன வடிவில் காட்டுகின்றோம்.

"இத்திருத்தலத்தில், ஒரு கணப்பொழுது திரிகரண சுத்தியாயிருந்து சேவற்கொடியுடைய செவ்வேளை அன்புடன் தரிசிப்பவர்கள், அஷ்டதிக்குப் பாலகர்களின் அரும்பதமடைந்து அயன், மால் முதலிய தேவர்கள் இன்ப வாழ்வு துய்த்து, இறுதியில் எமது சிவலோகத்தை எய்துவர். கணப்பொழுது வாசத்திற்கே இப்பலனையின், எப்போதுமிருந்து அறத்தை வழுவாது செய்வாராயின் அவரது தன்மை என்னென்று கூறுவது" (திருவாவினன்குடிச் சருக்கம் 67)


"கந்தனே! உன்னுடைய பூசையை ஒரு தினம் இந்தக் காவல் பொருந்திய பழநித்தலத்தில் செய்வார்களாயின், இந்தப்பெரிய பூமி முதலாகப் புவனங்கள் தோறும் எங்காளும் வணக்கஞ் செய்யும் பலனுண்டாகும். ஒரு மந்திரத்தை இவ்விடத்தில் செபிக்கின், ஒரு கோடி மந்திரங்களும் சித்தியாகும். (ஷை 68)

"மயில் வாகனத்தை நடாத்தும் மைந்தனே! தெளிந்த அருவி தூங்குகின்ற வராகமலை, தென்கயிலாயமாகும். சிவலோகமும் இந்தப் பதிக்கு நிகராகாது. நாமே வெள்ளிய இலைத்தொழின் முற்றிய வேலாயுதத்தைத் தரித்த குமாரனாகும். இவ்விடத்தில் இருப்பவர் யாவரும் சிவகணக் கூட்டங்களாவர், கிடங்குகளிலுள்ள நீர் எல்லாம் கங்கா தீர்த்தமாகும். (ஷை 69)

இன்னும் பலவுள. விரியுமென்றஞ்சி விடப்பட்டன. இனி மூர்த்தி மகிமையைக் கூறுவாம்.

## மூர்த்தி மகிமை.

திருப்பொலியும் திருமலைமீது அந்தமுடன் அமைந்த திருவாலயத்தில் தெய்வப் பிரபாவமிகுந்த முக விலாசத்



முத்துக்குமாரர் தைத்தேர்.

துடன், தண்டபாணியாக விளங்கும் திருமுகூர்த்தத்தின் திருவழகு செப்புதற்கரிய திறத்தது. சிலா ரூபமாய் விளங்கும் இத்திருவடிவம், வலது கால் சற்றே சாய்ந்து, வாடிக்கைபோல வெகு வேடிக்கையாக நிற்கும் வனப்பும், உவமிக்க முடியாத முழந்தாளழகும், உதிரமணி நாவினழகும் உத்தண்டமான தண்டாயுதம் வலக்கைபால் ஊன்றிப் பிடித்த எழிலும், அழகு துடையின் மீது இடது கை விரித்து வைத்துள்ள அமைப்பும், பூரித்த மார்பின் மாண்பும், சிரத்தில் அழகுபெற விளங்கும் உச்சிக்குடுமியின் உயர்வும், [illegible]ாக்குகின்றவர்களை எல்லையின்றி வசீகரிக்கும் முகவிலாஸமும், எடுத்தியம்ப முடியாத அழகு நிறைகோலமுமாய் அமைந்து, இனிது விளங்கும் ஏற்றம் வாய்ந்தது. கணித்தற்கரிய இவ்வருங்காட்சியைக்கண்பெற்ற பேறாகக் கண்டுமகிழவும், ஆனந்த மூர்த்தியாய் அமைந்திலங்கும் ஆண்டவனது தண்ணிய கருணையைப் பெறவும் நாடோறும், ஆண்டு முழுதும் கோடிக்கணக்கான மக்கள் இமயமுதல் 'கன்னியா குமரிவரையிலுள்ள எல்லையின் இடங்களினின்றும் வந்துகொண்டிருக்கின்றனர். என்னே! அற்புதம்! என்னே! அதிசயம்!

உலகத்தில் உண்மையான ஞானத்தை நிலைநிறுத்த வலிமை பொருந்திய பெரியோனாகப் பிறங்கும் இப்பிரபாவ மூர்த்தியை, சிலர் 'பிரம்ம வித்தையால் அடையப்படும் பொருளும், அந்த வித்தையின் ஸ்வரூபமும், அதை உத்தேசிக்கும் ஆதிகுருவும், தானாகவே விளங்குபவர் கந்தபிரானே யென்றும், அவர் ஏகனாய், இரண்டின்றி நித்யசுத்த புத்த, ஸ்வரூபியாய் விளங்கும் அருண் மூர்த்தியென்றும், அம்மூர்த்தியே தென்பழநி க்ஷேத்திரத்தில் மகாயோகியாகவும், பரமகுருவாகவும் நமக்கு உபதேசிக்கும் பொருட்

டுத் திருக்கோயில் கொண்டருள்கின்றாரென்றும், கூறுகின்றனர். இதுவும் பொருத்தமே.

இப்பொருத்தம் வாய்ந்த திருத்தமுள்ள இத்திருத் தெய்வத்தை, "சித்தியடைந்ததனால் அழியாவுடம்பு பெற்றுக் கற்பங்கள் பல உயிர்வாழும் நிலைமை வாய்ந்த சித்த மூர்த்திகளும், எட்டுத்திக்குகளிலும் இலங்குகின்றவர்களும், தவநிலைமைக்குரிய ஏகாக்கிரக சிந்தனையில் சிறந்துள்ள பக்தர்களும், தேவர்களும், பிறருங்கூடி மலர்களைக் கொண்டுவந்து ஏராளமாகச் சொரிந்து [illegible] செய்யும் வண்ணம் பழநித் தலத்தையும், அத[illegible]ந்த நாட்டினையும் தனி அரசு புரிய இனிதமர்ந்திருக்கும் பெரியோனே" என்று திருப்புகழடிகள், தமது இன்னிசை நூலில் இசைத்திருக்கின்றனர். 'பழநிக்குட்பட்டத்துக்குற்றுறையும் பெருமாளே' என்ற திருப்புகழ்ச் சொற்றொடரை நினைவிற்குக் கொண்டுவருக. மற்றும் புலவர் பலர்:—

"மணிகொண்ட தண்டிரைச் சண்முகநதிப்புனல்
வளம்பரவு கொங்கு நாட்டின்
மழைக்குல முகிற் கௌரிவடிவை யொத்துத்
தழுவிவரு சிவா சலமுகட்டிற்,
றிணிகொண்ட கடகபுய சேர நிருமிதரத்ன
சிகர சினகர மத்தியிற்
றிகழ்திருப்புகழ் மருவு தெண்டாயுதக் கடவுள்
சேவடியை யஞ்சலிப்பாம்"

'பண்டான மறைகளும் எப்பண்ணவருந் துதித்து
நிதம்பரவிப் போற்றிக்
கொண்டாடுந் தண்ணருளைப் பூவுலகோர்க் கருள
வருள் கூர்ந்தென்னாளும்
வண்டார்பூம் பொழிற் கழனி வளங்குலவு திருப்
பழநி வாழ்ஞான

தண்டாயுதக் குமார சற்குருவின் பாதம தமலர்
தலைமேற் கொள்வாம்''

"வரதாமணிநீ யெனவோரில் வருகாதெது தான் அதில் வாரா
இரதாதிகளால் நவலோக மிடவே கரியாமிதிலேது
சரதாமறையோ தயன்மாலும் சகலாகம நூலறியாத
பரதே வதையாள் தருசேயே பழநிபுரி வாழ் பெருமானே"

"கந்தா வருக! வுலகமெலாங் கணத்திற் புடைபோய் வந்தவொரு
காரேவருக! மாதுநற் கனிக்குப் பிரிந்தோய் வருகவரு
மெந்தாய் வருக! வேள்வருக! விளரியோய்வருக! வெவ்வுயிர்க்கு
மேந்தால் வருக! தண்டதர வேறேவருக! நங்கடிரு
மைந்தா வருக! சிவகிரிநேர் வாழ்வே வருக! வின்பமுளா
மணியே! யணியே வருகநலம் வந்தாய் வருக! வருள் சுரக்குஞ்
சிந்தே வருக! வினன்குடியிற் றிருவே வருக! வருகவே
தேவே ஞானப் பழநீவா செல்வா வருக! வருகவே"
(வருகைப்பருவம்.)

"சென்னியில் சபினநல் லுடையும்
திருக்கரத்தினி னிலங்கிய தண்டும்
மன்னிய மருங்கிற் சேர்த்திய காழும்
மார்பினிற் றுலங்கு முப்புரி நூலும்
பொன்னென விலங்கும் வில்வமாலிகையும்
புகழ்ந்திடுங் கிண்கிணி அரைஞாண்
வன்னமா மயிலும் துலங்கவே யென்முன்
வந்தருண் குமார நாயகனே"
(மதுரைமுத்துப் புலவர்)

தேசிக வடிவாய்ச் சிவகிரிக் கொழுந்திற்
சேரர் கோனுலயத்துள்

பூசனைபுரியத் திருவருட் காட்சி
பொலிந்தவக் கோலமே நினைந்து
மாசிலாத் திருவெண்ணீற்றினையள்ளி
மருந்தை அருந்தெனக் கொடுத்தால்
பேசிடாக் குளிரும் சுரமும் வல்பிணியும்
பித்தமும் பறந்து போய்விடுமே''
(பழநிப்பதிற்றுப் பத்தந்தாதி)

"தருமிரவி உதயமது கண்டு வையாபுரிதனைக்
கண்டு சுத்திகண்டு,
சண்முகப் புனல்கண்டு நிற்மாதிகண்டு பின்
சரவணப் பொய்கை யாடி,
அருள் பெருகு மாவினன்குடி கண்டு கைலாசர்
அம்மை பெரியம்மை கண்,
டம்பொன் மலைகண் டதிலிடும்பர் சந்நிதிகண்
டங்கநேக கண்காட்சி கண்டு,
கருணைகண் டருள்வள்ளி தெய்வயானையைக் கண்டு
களிகண் டிருக்கு முந்தன்
கமலபாதங் கண்டபே ரொருக்காலு மக்
காலனைக் கண்டிடுவரோ?
பரிதிவலி கண்டவன்தனை வென்ற தம்பிதன்
பராக்ரமங் கண்டதுரையே!
பழமறை சொலியசீல தொழுமவர்களநுகூல
பழநிமலை வடிவேலனே''
(வடிவேலர் சந்நிதிமுறை)

என வரும் அருமைப் பாடல்களும்,

மற்றும், பழநியாண்டவன் மூர்த்தத்திற்கு ஆண்டு முழுதும் இடையறாது அளவிலதிகஞ் செய்யப்படும் பஞ்சாமிர்த அபிஷேகங்களும், தேன், பால், தயிர், இளநீர், பன்னீர், சந்தன, விபூதி சாத்துப்படிகளும்; கண்ணொளி மழுங்கத்தக் கற்பூர ஆராதனைகளும்; நறுமண மிகுந்த நன்

மலர்களாலும், புனுகு கத்தூரி முதலிய வாசனைப் பொருள் களாலும், வெட்டிவேர், குறுவேர் முதலியவைகளாலும் அலங்கரிக்கப்பட்ட திருக்கோலங்களும்; அத்தருணம் அன்பர்தங் கட்புலன்களுக்கு அவரவர் தம் மனத்தடிப்பிற்கேற்றவாறு ஐயனது திருவுருவக் கோலம், பல்வேறு வடிவில் அற்புதமாய் விளங்கும் இன்பக் காட்சிகளும்; வானைப்பிளக்கும் கந்தா! கார்த்திகை மைந்தா! தண்டாயுதா! குகா! குமரா! மாயோன் மருகா! சரவணபவ! சண்முகா! கடம்பா! விசாகா! சேந்தா! ஜகத்ரட்சகா! தீனபந்து என்றதோத்திர முழக்கமும்; திருப்புகழ்ச் சந்தங்கள் இன்னிசையுடன் எழும் இசை நாதங்களும், கண்டாமணி யோசைகளும், வாத்திய வொலிகளும், அஷ்டோத்திரம், சகஸ்ரநாமம் முதலிய அர்ச்சனைத் தொனிகளும், மூர்த்தியின் மகிமையை எழில் பெறக் காட்டுதற்கு ஏற்ற சான்றுகளாம்.

மூல விக்கிரகத்திற்கும், உற்சவ மூர்த்திக்கும், ஒவ்வொரு கிர்த்திகைக்கும் சாத்துப்படி செய்கின்ற முத்தங்கியும், வயிரமுடியும், தங்கமயில் வாகனமும் பழநி யாதவர் மடம், ஸ்ரீ. நாச்சிமுத்துச் சுவாமிகள் என்கிற 'சிவநாராயண தேசிகர்' அவர்களால் உபயமாகச் செய்துவைக்கப்பட்டன. இவைகளில் முத்தங்கி 1913—ஆம் ஆண்டில் பழுது பட்டுப் போனதனுல், மதுரை திருவாளர். ரா. மா. ஏழுமலைக் கோனர் அவர்கள் அழகுபெற புதுக்கி வைத்துள்ளார்.

இவையேயன்றி, மூலவிக்கிரகத்தின் திருத்தோள் பக்கத்தில் சுமார் 50-ஆண்டுகளாகச் சேரவைத்திருக்கும் தங்கக்கவசமிட்ட 'பராசத்திவேல்' ஸ்ரீபழநிசாமிப் பண்டாரம் அவர்களாலும், அவர்கள் குமாரர், ஸ்ரீகிருஷ்ணசாமிப் பண்டாரம் அவர்களாலும், உபயமாகச் செய்யப்பட்டது. இவை இவர்களது மெய்யன்பைக் காட்டும் சான்றும்.

"உன்னைச் சிங்காரித் துன்னழகைப் பாராமல்
என்னைச் சிங்காரித் திருந்தேன் பராபரமே"

என்று தாயுமானர் கூறிய அமுதமொழியை ஆய்ந்து முருக வேளைச் சிங்காரித்தது, இவர்களது மூதறிவையே காட்டு கின்றன.

அன்புவடிவமாய் அமர்ந்த ஆண்டவன், தம்மை அடைந்து வழிபட்டு வணங்குகின்ற அன்பர்கட்கு எளிதில் அருள் பாலிக்கின்றார் என்பது, அவரைக் காணச்செல்லும் அடியார் குழாங்கட்கு எளிதில் கிடைக்கும் இனிய தரிசனத்தாலேயே நன்கு விளங்கும். ஆண்டவரது அழகிய உருவம், கண்டோர் மனதைக் கவர்ந்து அன்புமய மாக்கும் அதிசயமுடையதென எத்துணை முறை கூறினும் மிகையாகாது.

சந்நிதிக்குப் பின்புறத்தில் சந்தனக்குழம்பை வாரியிறைத்து ஸ்ரீ முருகக்கடவுளை "பழநிபாவா" என்று பெயரிட்டு மகமதியர்கள் வழிபட்டு வருகின்றனர். இவர்கள் இந்துக்களின் தெய்வமாகிய குமரனை இங்ஙனம் வழிபடுவதற்கு ஏற்ற காரணம் ஸ்ரீ அருணகிரிநாதர் தமது கந்தரலங்காரத்தில்,51,37 எண்களையுடைய கவிகளில்'இராவுத்தனே' எனப்பாடி யிருப்பதே யாமென நாம் கருதுகின்றோம். 'இராவுத்தன்' என்னும் பதம், வீரனைக்குறிக்கும் சிறப்புப் பெயரே யன்றி, மகம்மதியர்க்குரிய பட்டப்பெயர்களில் ஒன்றல்ல. ஆயின், அவர்கள் ராவுத்தர் என்ற பதம் தங்களுக்குரியப்தம் என்று கருதி உரிமைகொண்டு தங்களுக்கும் முருகனை வழிபடும் பாத்தியதையுண்டு என்கின்றனர். இது, எம்மதமும் சம்மதம் என்ற பொதுக்கொள்கைக்கு பொருத்த முடையதே. யாவர்க்கும் கடவுள் ஒருவரே.



சரவணப் பொய்கை.

சமய பேதங்கொண்டு மாறுபட்டு, என் தெய்வம் உன்தெய்வம் என்னும் பேதம் பாராட்டுவது அறிவுடைமையாகாது.

---

## சரவணப் பொய்கையும்—சண்முக நதியும்.

*எந்தை முருகவேள் இன்னினிய ஆறுமுகம்*
*முந்தியருள் நற்சண் முகநதியை—வந்தொருக்கால்*
*ஆடினல் அன்புடையீர்! ஆயுசும் அத்தனையும்*
*ஓடிவரும் அங்கே உமக்கு*

### சரவணப் பொய்கை.

'சரவணப் பொய்கை' என்பது—குமரவேள் பிறப்பகத்தைக் குறிக்கும் இடம் என்ப. இப்பொய்கையில் மூழ்குவோர்க்குப் புண்ணியம் சித்திக்கும் என்பது பெரியோர் துணிபு. இதற்குப் புராணங்களிலும் போந்த சான்றுகள் உள்ளன; இக்கருத்தைக் கொண்டேதான், குமாரஸ்தலங்கள் தோறும் 'சரவணப் பொய்கை' 'சரவண தடாகம்' என்ற பெயர்களில் தீர்த்த கட்டங்கள் புதுக்கப்பட்டிருக்கின்றன. இத்திருப்பொய்கை, திருவாவினன்குடிக் குழந்தை வேலாயுதர் ஆலயத்திற்குப் பின்புறத்தில் கீழ்த்திசையில் 100 கஜ தூரத்தில் உள்ளது. தீர்த்தம் ஆடுபவர்களுக்கு வசதியாயிருப்பதன்பொருட்டு, கருங்கல் தளவரிசை செய்யப்பட்டுச் சுத்தமாயிருப்பதுடன், கிணற்றுள் இறங்குவதற்குப் படிக்கட்டுகளும் ஒழுங்காக அமைக்கப்பட்டுள்ளன. மூழ்கினோர், யானை முகனுரை வணங்குவதற்கு அரசடிவிநாயகர் ஆலயமும் அருகே எடுக்கப்பட்டிருக்கின்றது. இத்தீர்த்தம் கூவம் (கிணறு) வடிவில் தோண்டப் பட்டிருக்கிறது. படிக்கட்டுகளின் வழியில் இறங்கிக் குடங்களில் தீர்த்தத்தைச் சுமந்துவந்து வெளியில் மூழ்குவதற்கு இயலாதவர்கள், அங்குள்ள கூலிகளுக்கு இனம் ஒன்றுக்கு அரையணு கொடுத்தால், வேண்டிய நீர் வெளியேகொணர்ந்து தருகின்

ரூர்கள். கந்தனுக்குக் காவடி கட்டுவோர், இங்கிருந்தும் எடுத்துச் செல்வதை வழக்கத்தில் கொண்டுள்ளனர்.

இங்குள்ள இத்தீர்த்தத்தைத் திரு முருகன் ஒப்பற்ற தமது நீண்ட வேலாயுதத்தில் உண்டாக்கினர் என்று,பழநி ஸ்தல புராணம் திருவாவினன்குடிச் சருக்கம் 93 ஆம் கவி யில் கூறப்பட்டிருக்கிறது. பின்னும், அக்கவியிலேயே அத் தீர்த்தத்தில் மூழ்கினோர் தூய்மை அடைந்து, இறுதியில் கயிலை அடைந்து சிவ கணங்கள் ஆவார்களென்றும்; திரு முருகன் திருப்பெயரைக்கூறிக் கார்த்திகைமாதம் முழுதும், அதிகாலையில் மூழ்கினோர் சிவ வடிவத்தை எய்துவாரென் றும் விளக்கப்பட்டுள்ளன.

சரவண தடாகத்தில் குமரவேள் தோன்றியதனுல், அதற்கு ஒப்பற்ற பெருமை உண்டாயதென்று கந்தபுரா ணம் சிறப்பாகக் கூறுகிறது. அவ்வரலாற்றை அறிய விரும்புவோர் ஆண்டுக் கண்டுகொள்க.

சரவணப் பொய்கை சம்பந்தமாகத் திரு முருகனுக்கு வழங்கப்படும் பெயர்கள், காங்கேயன், சரவணபவன், கார்த் திகேயன், கந்தன், அறுமுகவன் என்பன. சிவபிரானுடைய திருநுதற்பொறிகளைக் கங்கையாறு ஏந்திச் சென்ற கார ணத்தால் காங்கேயன் என்றும், சரவணப் பொய்கையில் அவதரித்தபடியால் சரவணபவன் என்றும், கார்த்திகைப் பெண்கள் பாலூட்டி வளர்த்தமை பற்றிக் கார்த்திகேயன் என்றும், உமாதேவியார் விஞ்சிய ஆதரவுடன் சேர்த் தணைத்துப் பற்றியதன் நிமித்தம் கந்தன் என்றும், (சிலர் ஸ்கந்தர் என்பதற்கு கர்ப்பத்திலிருந்து நழுவி விழுந்தவர் என்பது பொருள் என்பர்) ஆறு திருமுகங்கள் உடைமை யால், சண்முகன் அல்லது அறுமுகப்பெருமான் என்றும், கூறுவன பெயர்க் காரணங்களாம்.



சண்முக நதி

பொதுவாக அவருக்குத் தமிழ் நாட்டில் 'முருகன்' என்னும் திருப்பெயரே மிகுதியாக வழங்கி வருகின்றது. முருகன் என்பதற்கு 'அழகும், இளமையும் ஒருங்கே உடையவன்' எனப் பொருள் கூறலாம்.

### சண்முக நதி.

கங்கையொத்த புனிதத் தன்மையுடைய இச்சண்முக நதியானது, பழநிமலைத் தொடரின் தெற்கின் கண்ணே தோன்றி, கோன்றைநதி, சாமதீர்த்தம், சுத்தநதி, மாயா தீர்த்தம்,ஞானநதி,மயூரநதி என்னும் பெயரிய புண்ணிய நதிகளுடன் ஆங்காங்கு கூடியும், பிரிந்தும், பற்பல முகமாகப் பரவியும் இறுதியாக இத்திருத்தலத்தில் ஒன்றுகூடி சண் முகநதி என்ற பெயர்பெற்று பிரபலமாக விளங்குகின்றது. இவற்றைச் சிலர் பச்சையாறு, பாலாறு, சுருளியாறு, பொரு ந்தலாறு, கல்லாறு, வரத்தாறு என்ற பெயர் வாய்ந்த ஆறு நதிகள், இங்கு ஒருமுகமாய்ச் சங்கமமடைந்து 'சண்முகநதி' யென்ற பெயர்பெற்ற தென்பர். வேறு சிலர், வரத்தாறு என்னும் வத்தமாநதி வரதாபட்டினத்திற்கு அருகில் உற்பத்தியாகி, பழநிமலைக்குத் தெற்கில் 3-பர்லாங்கில் மேற்கு முகமாகப் பாய்ந்து, ஒட்டணைக்குத் தெற்கில் வால சமுத்திரத்திலிருந்து வருகிற பாலாற்றுடன் கலந்து, வடக்கு முகமாகச் சென்று, தாமரைக் குளத்திற்குத் தெற்கே வராககிரியினின்றும் பெருகுகின்ற பச்சையாற்று டனும், சுருளியாற்றுடனும் கூடி யாவும் ஒன்றுசேர்ந்து சண்முகநதி எனப் பெயர் பெற்றதென்றும் கூறுவர்.

இப்புண்ணியநதி, இப்பழநிப்பதியிலுள்ள வையாவி புரி ஏரியின் வடக்குக் கரையின் கோடியிலிருந்து ஒரு மைல் தூரத்தில் உள்ளது. நதியின் கதிமுறை நான்குவகைப் படும். அவை நதி, நதம், நதிதீரம், நத்யம் என்பன. மேற்

கிலிருந்து தெற்குமுகமாய் ஓடுவது நதி; கிழக்கிலிருந்து மேற்கு முகமாய்ச் செல்வது நதம்; வடக்கிலிருந்து தெற்குப் போவது நதிதீரம்; தெற்கிலிருந்து வடக்குமுகமாக நடப்பது நத்யம் ஆம், இறுதியாகக் கூறிய நத்யம் என்னும் இலக்கியமே இந்நதிக்கு அமைந்துள்ளது.

இத்தகைய நதியின் கீழ்க்கரையில், ஆறுமுகமுடைய விநாயகர்க்கும், தட்சிணா மூர்த்திக்கும், புலிப்பாணி சித்தருக்கும், அநுமாருக்கும் ஆலயங்கள் அமைந்துள்ளன. மற்றும், இதன் இரு கரைகளிலும் தண்ணிய தென்னஞ் சோலைகளும், வானளாவிய பற்பல தருக்களும், பச்செனப் பரந்த புற்றரைகளும், மணல் வெளிகளும் நிரம்பி, மனோ ரம்மியமாய் விளங்குகின்றன. இங்குநின்று தான், குக னடியாரில் பெரும்பகுதியினர், தாங்கள் பற்பல வகையாக நேர்ந்து கொண்ட பிரார்த்தனைக் காவடிகளை, அன்பின் வழி நின்று, பத்தித்துறையிற் படிந்து முத்திரித்து, தோளிலேற்றிச் சுமந்த வண்ணம் கந்தனிடத்துப் பதிந்த மனத்தினராய் அரகர சப்தத்துடன் திருமுருகனுக் குரிய திருப் பழநியை நோக்கிச் செல்கின்றனர். அவரவர்கள் பக்திக்கும், சக்திக்கும் ஏற்றவாறு காவடிகளின் பெருமை சிறந்து தோன்றும்.

திருமுருகன் திருப்பெயரைத் தாங்கிய இப்புண்ணிய தீர்த்தம் உலகத்திலுள்ள 66 கோடிக்கும் அதிகமாயுள்ள தீர்த்தங்களின் மகிமையையும், உயர்வையும் பெற்று, தன்னுள் படிந்தோர்களின் பாவத்தைப்போக்கி முத்தியைத் தரவல்லமாண்புடையது என்றுச் தலபுராணம் சண்முகநதிச் சருக்கத்தில் கூறப்பட்டிருக்கிறது.

மேலும், அப்புராணத்திலேயே, 'ஒருநாள் நதியில் மூழ்கினால், மனம், வாக்கு, காயங்கள் என்னும் மூன்றின

னுஞ் செய்த பாவங்கள் தினையளவும் நில்லாதொழியும் என்றும்,

'நல்ல நீரானது சிவசத்தி வடிவமாகவும், அதன் கண்ணுள்ள மணல்கள் சிவலிங்கமாகவும் ஏற்றம் பெற்ற அத்திருநதியில், தீர்த்தமாடுவோர், அடையும் அந்தமில் இன்பம் அளவிடற்கரியது' என்றும்,

'பெருமையிற் சிறந்த திருமுருகன் திருத்தலங்களுள், திருவாவினன்குடி என்னும் பழநிப் பதியும், தீர்த்தம் ஆடுகின்ற தண்ணிய நதிகளுள் சண்முக தீர்த்தமும்; துதிக்கப்படுகின்ற தேவர்களுள், முருகவேளும் உயர்வுடையவராவர். மற்றும், அத்தலத்தைச் சென்றடைந்து தீர்த்தத்தினுள் மூழ்கி, முருகனை நெஞ்சினில் நினைத்து, வாக்கால் அர்ச்சனை செய்கின்றவர்கள் சீவன் முத்தராவார்' என்றும் விளக்கப் பட்டிருக்கிறன.

இச் சிறப்புக்களினாலேயே, இத்தீர்த்தத்தின் செப்புதற்கரிய மகிமை இனைத்தென உணரலாகும்.

மற்றும், இங்கு யாத்ரீகர்கள் மூழ்கிப் புனிதமடைவதற்கு ஸ்நான கட்டங்கள் மூன்றுள. அவை: "வையாவிபுரி ஏரி" "வர்த்தமா நதி" "மூலவாய்க்கால்" என்பன.

பின்னும் இத்தலத்திலும், திருமலைமீதும் பல சிறந்த தீர்த்தங்கள் இருப்பதாகத் தலபுராணத்தில் கூறப்பட்டுள்ளன. அவைகள்:—

ருஷிமுக தீர்த்தம், தேவதீர்த்தம், அமுததீர்த்தம், ஞானதீர்த்தம், பிரம்மதீர்த்தம், தருமதீர்த்தம், மாயதீர்த்தம், வித்யாதீர்த்தம், சித்ததீர்த்தம் என்னும் பெயரினவாம். இவைகளெல்லாம் இப்பொழுது காண்பதற்கின்றி

மறைவுற்றிருக்கின்றன. தற்பொழுது காண்கின்றவை மலைக்கு முன்புறத்தில் இடும்பன் சுனையும், காளைச்சுனையும், வெட்டுச்சுனையும், பின் பக்கத்தின் வணிச்சுனைகளுமே

இவ்வுலகத்திலே, மூர்த்திமகிமையிலும், தலமகிமையிலும், தீர்த்தமகிமையிலும் தலைசிறந்து விளங்குகின்ற சிவாலயங்கள் பலவுண்டெனினும், அவற்றுள் தென்னாட்டுள்ள கொங்கு நாட்டு வைகாவூர் (பழநி) குகஸ்தலமே முதன்மை வாய்ந்ததெனக் கூறலாம்.

குறிப்பு;— சர—நாணல், வண—காடு, பவ—உண்டானவர் என்பது சரவணபவ என்பவற்றின் பொருள். மேற்காட்டியதே சரியான பொருள். 'சரவணபவ' 'சரஹணபவ' என்று கூறுவது தவறு, சிலர் சரவணபவ என்ற இப்பதம் வியாகரணத்திற்கு ஒவ்வாது என்பர். நமது வாதம் இப்பதமே இயற்கையானதென்பது. பாணினிவியாகரணப்படி இப்பதத்தில் 'ன' வுக்குப் பதிலாக 'ண' வரவிடமில்லை. எங்ஙனமெனின்? அந்த மாறுதல் வரக்கூடிய இடங்களை அவர் ''ரஷாப்யாம்'' என்ற சூத்திரத்திலும், மற்றொன்றிலும் விளக்கியிருக்கிறார். ஒரே பதத்தில் மாத்திரம் அந்தமாறுதல்கள் நேருமென்று அதற்குப் பொருள் ராமாயண—நாராயண—பாராயணவென்ற பதங்களை அனுசரித்துக் காரணமின்றி, சரவண, எனமருவிற்று. இங்ஙனம் மருவாமல் வியாகரணப்படி மருவியிருந்தால், அதனை பாணினியார் குறிப்பிட நியாயமில்லை. ஆனல்' சரவண என்ற இந்த ரூபம், மக்களுள் பெரும்பாலும் வழங்கினதால், அதற்கு ஒரு வழி, கற்பிக்க வேண்டி, தான் செய்த சூத்திரங்களுக்கு விலக்கான சிலபதங்களைக் குறிப்பிட்டு 'பியூஷ' 'அந்தர்' 'சர' முதலிய பதங்களுக்குப் பிறகு சமாஸத்தில்வரும் 'வன' என்ற பதத்தில் 'ன' 'ண'

வாகமாது மென்று ஒரு சூத்திரத்தில் சொல்லுகிறார். இது உண்மை வியாகரணவிதி சூத்திரமல்ல. அதற்குள் அடங்காத சில விலக்குகளைக் குறிக்கும் ஜாப்தாவேயாம்.

(திரு C. R. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்கள்)

---

## ஆலயமும்—அதிசயங்களும்.

"அதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழக!" (திருப்புகழ்)

(பொருள்.)

"நினது வல்லமையையும், பெருமையையும் காட்டத்தக்க பல அதிசயங்கள் நிகழ்ந்த பழநிமலையின் மீது நிகரற்ற அழகுவாய்ந்தவனாய் எழுந்தருளியிருப்பவனே" என்பது.

பழநித் திருமலைமீது பூமிமட்டத்திற்குச் சுமார் 450-அடி உயரத்தில் ஸ்ரீ தண்டாயுதபாணி ஆலயங் கொண்டருள்கின்றனர். அவ்வாலயத்தையும், அவரையும் தரிசிப்பதற்குச் செல்பவர்கள் எவரும், அவற்றின் அழகிய தோற்றத்தையும், கம்பீர அமைப்பையும், வனப்பையும், அருமை பெருமைகள் நிறைந்த சிற்ப முறைகளின் திட்பநுட்பங்களையும் கண்டு வியவா தொழியார். யாவராலுங் கொண்டாடப்படும் ஏற்றம் வாய்ந்து, கலிகாலப் பேசுந் தெய்வங்களில் திருப்பதியுடன் ஒப்புவைத்து உயர்வாக மதிக்கப்படும் தெய்வம் திருப்பழநித் தெய்வமேயாம். திருப்பழநிமலையினும் சிறிது உயரத்திலும், பருமனிலும் சிறிது குறைந்திருந்தபோதிலும், ஒத்தாப்போல் கீழ்த்திசையில், நெருங்கிக் காண்பது இடும்பன்மலை, (சத்திகிரி) இவ்விருமலைகளையும் தூரத்திலிருந்து பார்ப்பவர்கட்கு ஓர் காவடியில் இரண்டு பாற் செப்புகள் வைத்துக் கட்டப்பட்டிருப்பது போல் தோன்றும். இத்தோற்றத்தைக் கொண்டும் இவ்

விரு மலைகளையும் இடும்பாசூரன் அகத்தியனாரது அநுக்கிரகம் பெற்றுக் காவடியாகக் கட்டிச்சுமந்து வந்ததனாலும், அது ஆண்டவன் அன்புக்கு உரித்தாய்க் கொள்ளப்பட்டு, அவனும் அவரது அருளுக்குப் பாத்திரமானதனாலும், அவ் ஐதீகத்தைக்கொண்டே அன்பர்கள், ஆண்டவனுக்குப் பலவித காவடிகளைக் கொணர்ந்து பிரார்த்தனை நிறைவேற்றும் வழக்கத்தை மேற்கொண்டனர் ஆவர்.

கந்தனுக்குக் காவடிக் கட்டிக்கொணரும் உண்மைத் தத்துவத்தை நாம் உணராதிருப்பினும், விசித்திரக் காவடிகளின் அற்புதத் தன்மையை அளவிட்டு ரைக்க முடியா. எனினும், அருந்தமிழ் வல்லார், அவற்றின் சீரிய தன்மையை அன்பர்கள் எளிதில் உணரும் வண்ணம் அழகிய பாடல்களால் விளக்கியிருப்பது நமது கருத்தை ஒருவாறு முற்றுறச் செய்யுமென்றே நம்புகின்றோம்.

அப்பாடல்கள் வருமாறு:—

I

"ஐயநின் சந்நிதியில் அறுத்த சேவல் கூவும்
அடிசிலிடும் மீன் துள்ளிடும்,
அரியபிறவிக் குருடர் ஆனந்தமாக நின்
அழகுகண்டவச முறுவர்,
"செய்யவள மிகுமணல் சர்க்கரை யதாகி
நற் சிறிய கற்கண்டதாம்.
சேய்மையோர் உன்னதக் காவடிகள் அநுதினம்
சேர்க்கலா நாளும் உளதோ!
பையரவம் ஒருவர்கைப் பந்தெனவும் விளையாடல்
பார்த்து மானந்த முறுவாய்
பாரமலைபோ லுருவ கோரவிருள் அசுரர்கள்
பறக்க வந்திடு பானுவே

வையகந் தனிலன்பர் செய்கின்ற அபிஷேக
வகைதனக் கேற்ற வாறு
வடிவங்கள் காட்டியவர் மனமுருக நாட்டியமின்
மகிமைகள் சொல்ல வெளிதோ"
(பழநிச் சந்நிதிமுறை)

## II

"வடிமதுரக் காவடிகள் சர்க்கரைக் காவடிகள்
மாங்கனிக் காவடிகள் நெய்
வார்த்த காவடிகள் பல தீர்த்த காவடிகள் பால்
வைத்த காவடிகள் நீற்றுப்
பொடிவைத்த காவடிகள் சந்தனக் காவடிகள்
கற்பூரக் காவடிகள் சீர்
புஷ்ப காவடிக ளிழநீர் பனீர்க் காவடிகள்
புனுகு காவடிகள் வருவோர்
முடியெலாங் காவடிகள் தோளெலாங் காவடிகள்
முதுகெலாங் காவடிகள் காவடிகளாய்
முக்காத வழியகல வெட்போட விடமின்றி
முக்கிய மலைமீதி லேறும்
படியெலாங் காவடிகள் காவடிகளாக விப்
பாரெலாம் பூசை கொண்டாய்
பழமறைகள் சொலியசீல தொழுமவர்க ளநுகூல
பழநிமலை வடி வேலனே" (ஷை)

இவையேன்றி, நாவில் அலகு தைப்போர்களும் நாவை யறுத்து சந்நிதியின் முன் வைத்து, அது முன் போல் ஒட்டுமாறு அருள் வேண்டுவோர்களும், ஆலயப்பிர காரங்களிலும், படிகளின் மீதும், தரையிற் படுத்து நனைந்த ஆடையுடன் தேகத்தைப் புரளவைப்போர்களும், உடலின் பலவிடங்களிலும் கூரிய வேல்முனைகளை ஆழப்பதியும்படி சொருகிக்கொள்வோர்களும் பலராவர், இவை கண்டு தான் மக்கள் 'பழநிப்பதி மகாஅநுக்கிரக அதியற்புத மகத்துவ தெய்வீகச்-செயல்கள் நிறைந்தது' என்றும், அற்புத

மகிமைகள் பற்பல வாய்ந்தது என்றும்; கூறிக்களிப்பதை வழக்கத்திற் கொண்டிருப்பதாக அறிகிறோம்.

## வணங்கியவர்களும்—பேறுபெற்றோர்களும்.

யாவராலும் ஏற்றித் தொழுது வணங்கப்படும் ஏற்றமுடையவன் இலைவேற் கரத்தனாகிய எழில்மிகு முருகனும், அவன் இனிதமர்ந்தருளும் சிறப்புடைத்தலம் திருப்பழநியே யாமென்பதும் யாவரும் அறிந்ததோருண்மை. இத்தகையமூர்த்தி,தலம்சிறந்த திருத்தலத்தில் இறைவனை வழிபட்டு பேறுபெற்றோர்கள் கணக்கிலடங்கார், அவர்களுள், இங்கு தெளிவாக அறியப்பட்டவர்கள், தேவர்களுள் திருமகளும், கிரகங்களுள் சூரியனும், முனிவர்களுள் அகத்தியரும், அரசருள் அருச்சுனனும், கௌசல சேரனும், முருகனடியார்களுள் சுவணகுத்தனும், வசுமந்தனுமே ஆவர். இவர்களே இத்தலமடைந்து தீர்த்தத்துள் மூழ்கி முக்குறும்படக்கி ஒருமனப்பட்டு தவம்புரிந்து வேலாயுதம் ஏந்திய செவ்வேளைத் தரிசிக்கப்பெற்று அந்தமில் இன்பத்தைப் பெற்றாக்களென்று தலபுராணத்துள் வரலாறு காணப்படுகின்றன. இவ்வளவே, இத்தலத்து வணங்கியவர்களையும், பேறுபெற்றோர்களையும் பற்றி யாமறிந்தவை.

---

## கிரிவலமும்—தோன்றும் காட்சிகளும்.

திருமலையைத் தரிசிப்பதும், கிரியைப் பிரதட்சிணம் (சுற்றிவருதல்) செய்வதும், யாத்ரீகர்களது இன்றியமையாத கடமை. இவர்கள் கிரிவலம் வருவதை 3. 6. 12. 24. 48 என நாட்களை எண்ணிக்கையாக வைத்துக்கொண்டு அவரவர்கள் பக்திக்கும், சக்திக்கும் ஏற்றபடி செய்வர். கிரிப்பிரதட்சிணத்துடன் மலையேறி திருமுருகனை நாடோ

றும் தரிசிப்பவர்களும், காலை மாலை இரண்டுவேளைகளிலும் மலையை வலம் வந்து அதனுடன் தங்குமிடஞ் செல்பவர்களும், குறித்த எண்ணிக்கை நாள் கழிந்ததும், மலைமீது சென்று ஆண்டவனைத் தரிசித்து அபிஷேகஞ் செய்வித்துப் பிரார்த்தனை செலுத்துபவர்களும் பற்பலராவர். சிவகிரியைப் பக்தி சிரத்தையுடன் பிரதட்சிணஞ் செய்வது சிவ வழிபாடுகளில் ஒன்றுமென்பது ஆன்றோர்களது சித்தாந்தம். பழநிமலைமீது திருவீற்றிருந்தருளும் தண்டபாணிக் கடவுளை அன்பர்கள், கண்குளிரத் தரிசிக்கும்போது உண்டாகும் இன்பத்தைப்போலவே, மலையைவலம் வரும் போதும் இன்பம் எய்தும். புண்ணியப் பேற்றையும், இஷ்ட சித்தியையும் அடைய விரும்பும அடியார்கள் ஒவ்வொருவர்களும், கிரியைச் சுற்றிவருவது அவசியமானது. மலைவலம் சுலபமானதே. எங்ஙனமெனின், ஆறுமுகத் திறைவர் ஆரோகணிப்பதும் ஒருமயில், அவர் இனிமர்ந்தருளும் சிவகிரியின் சுற்றளவும் ஒரு மைலாக விருப்பதனால். அதிகாலையிலும், இளம்மாலை நேரத்திலும், மலையைத் திருவலம் செய்பவர்களுக்குச் சுற்றிலுமுள்ள பிரதேசங்களில் வளர்ந்துள்ள சிறந்த மூலிகைகளின் மீது மோதி, வெளிப்பட்டுவரும் இனிய மணமிகுந்த மெல்லியகாற்று மனோற்சாகத்தையும், ஆரோக்யததையும் தருகின்றன. அன்றியும், இயற்கை அரசியின் எழில்மிகுந்த இனிய தோற்றமும், ஓங்கி வளர்ந்து நெருங்கிய தென்னஞ்சோலைகளின் வனப்பும், மரகதப்பாய் விரித்தாப்போன்று பச்சென்ற பசுமை நிறமுள்ள பரந்த வயல்களும், இடும்பன் மலையும், திருமஞ்சனப் பாதையும், மயில்வாகன மண்டபங்களும், நீர் வசதிக்காக அடிவாரத்தின் பிற்பாகத்தில் நவீனமாகக் கட்டப்பட்டுள்ள உயரமான பெருந் தண்ணீர் கற்கிணறுகளும், மின்சாரம் வெளிப்படுதற்கு மூலமாயுள்ள பவர்

(Power House) ஹவுசும், விநோதத்தையும், வியப்பையும் தருகின்றன. மற்றும், மலையைச்சுற்றி நாற்புறமுமுள்ள மண்டபங்கள், சிற்றாலயங்கள், திருக்குளங்கள், சமாதிகள், மயில்வாகன மண்டபங்கள் முதலியன நமது முன்னோர்கள் செய்த தருமங்களை நமக்கு நினைவூட்டுவனவாய்க் காண்கின்றன. அந்நினைவு, அவர்களது அறச்செயல்களையும் தர்ம நிலையங்களையும் நமதுமனதில் ஆழப்பதியச் செய்து நமக்கு அவர்களிடத்து அன்பும், மதிப்பும் அதிகரிக்கச் செய்கின்றன. அம்மட்டோ! அவை, நம்மையும் அத்தகைய தர்ம காரியங்களைச் செய்யத்தூண்டுவது போலுமிருக்கின்றன.

இத்தண்ணீர்த் தொட்டியும், இயந்திரமும், மலைமேல் பக்த கோடிகளுக்கு நீர்வசதியும், மைவாடி ஜமீன்தார், மற்றும் கனவான்களின் பொருளுதவியும் பெற்று, உபயமாகச் செய்தவர், சேலம் நியாயவாதி R. சுப்பிரமணிய அய்யரவர்கள். இவரது பரோபகாரமும், தர்ம குணமும் அன்பர்கள் மிகுதியாகப் பாராட்டத்தக்கன.

இனி, மேற்கூறியமண்டப—ஆலய—திருமட, சமாதிகளின் விபரங்களை விவரிப்பாம்.

## வடக்கு வீதி.

ஆரம்பத்தில் அடிவாரத்தின் முன்னணியிலுள்ளபாதம் (முதல்) அதாவது தலைமைவிநாயகனைத் தரிசித்துச் சிரத்திற் குட்டிக்கொண்டு, கிரிவலத்தின் பலனையும், மூர்த்தி தரிசனத்தின் பயனையும் கூட்டிவைக்கவேண்டுமென்று பிரார்த்தித்துக்கிரிப் ° பிரதட்சிணத்திற்குத்தொடங்க வேண்டும். மலை தென்திசையில் இருப்பதால், மலைவலத்திற்கு ஆரம்பம் கிழக்குப்பாகமேயாம். இங்ஙனம் தொடங்குவோர்க்கு முதலில் வலது பக்கத்தில் புலிப்பாணியார் திருமடமும், அவரது அகாடியிடமும், இடது பக்கத்தில் பங்குனித்

தேரும், தேர்நிலை மண்டபமும், ஆயிரவர்கோத்திரத்தில் தோன்றிய தர்மவான் சந்தனஞ் செட்டியாரவர்களால் கட்டுவிக்கப்பட்ட தண்ணீர்ப் பந்தலும், திருமடமும், அதற்கப்பால் வள்ளியம்மன், மறத்தியம்மன், கணபதி ஆகிய இவர்களுடைய சிற்றாலயங்களும், இவற்றை யடுத்து நாற்கால் மண்டபத்தில் அமர்ந்த கிரிவீதி 'வடக்கு மயில் வாகனமும்' பின்னர், தொட்டியர் குலத்தோன்றல் நாகம நாயக்கர் என்னும் செல்வரால் திருப்பணிசெய்யப்பட்ட திருக்குளமும், (இதனைப் பிரமதீர்த்தம் என்கின்றனர்) இதனை யொட்டிச் சிவன், திருமால், முருகன் முதலிய தேவர்களுக்குச் சிற்றாலயங்களும், இதற்கருகில் 'சதாசிவப்பிரம்மம்' என்ற மகானின் சமாதியும், இதற்குச் சற்று தூரத்தில் லாடசந்நியாசி கோயிலும், அங்கேயே, 'கலயந்தூக்கி மாணிக்கச் சுவாமிகள்' என்ற பெரியாரின் யோகசமாதியும், ஐந்து முகமுடைய விநாயகரது பிம்பமும், திருமடமும், இவற்றிற்கடுத்து விநாயகர் கோவிலும்;

கிழக்கு வீதி.

இதற்கடுத்து 12 பெரிய கற்றாண்களால் அழகுபெறச் சமைக்கப்பட்ட மண்டபத்தில் கிரிவீதி கிழக்கு மயில் வாகனமும், (இது மிகப் பெரிய மயிலுருவம்) இதனை யடுத்து வலது பாகத்தில் மலையை யொட்டி அழகு நாச்சியாரம்மன் சிற்றாலயமும், இரட்டைக்கால் சாவடியும், இவற்றிற்கடுத்து நாகப்பட்டினம் சாமியார் தண்ணீர்ப் பந்தலும்;

தெற்கு வீதி.

இதற்கடுத்து நிர்த்தன விநாயகரும், (இவருக்கு ஆலயமில்லை) அப்பால் கிரிவீதி தெற்குமயில் வாகனமும், அடுத்து வலது பாகத்தில் கடப்பமலர் பாதவங்களும், இவற்றை யடுத்து இடது பக்கத்தில் நந்தன் தோப்பும், ஐயனார் முதலிய சிறு தெய்வங்களும்;

### மேற்கு வீதி

இதற்கடுத்து சந்தனஞ் செட்டியார் தேவஸ்தானத்தோப்பும், இறங்குகிணறும், அர்த்தஜாம மண்டபமும், காசிச் சுவாமியார் நந்தவனமும், அப்பால் கிரிவீதி மேற்கு மயில் வாகனமும், இதற்கடுத்து வலது பாகத்தில் ஒற்றைக்கால் மண்டபமும், இதற்கடுத்து விநாயகர் ஆல்யங்கள் இரண்டும், இவற்றிற்குப் பின்பாகத்தில் சிறு கிணறும், கிணற்றை யடுத்துத் தெப்பக்குளமும், இவற்றிற்கடுத்து வீரப்பமணிய காரரது கல்மண்டபமும், அதன் பின், பொன்னம்பலம் பிள்ளை மண்டபமும், வலது பாகத்தில் கட்டைய கவுண்டர் மண்டபமும், (இது முன்னர் காசி. விஸ்வநாதர், விசாலாட்சி ஆலயங்களாக விருந்தன) இதற்கடுத்து இடது பாகத்தில் இரட்டையம்பாடி தொப்பிஞன் அவர்களது மண்டபமும், வலது பக்கம் அமரபூண்டிச் செட்டியார் மடமும், ஆய்க்குடி ஜமீன்தாரது வியாள வரிசையிட்ட மேடையும், இடதுபக்கம் மதுரைச் சொக்கநாதர், மீஞட்சியம்மையார் கோவில்களும், மண்டபமும் இருமருங்கிலும் ஒழுங்காய் அமைந்து விளங்குவன வற்றைக் கண்டு மகிழ்வர்.

---

### மலைப்படிகளும்—மண்டப ஆலயங்களும்.

"பாணிச் சடைமுடி மால்விடை பரமற்கொரு மகவாய்
நீணித்தவ மெனவெய்திய நிமலன் சிவகிரியைக்
காணிற்றவ சிவயோகிகள் கயிலைக்கிது வழியாய்
ஏணிப்படியென யேறுவர் இரவும் பகலினுமே"

(பழநிப் பதிற்றுப் பத்து)

இங்ஙனம் கிரியைத் திருவலம் வந்தவர்கள், மலைப் படிகளைக் கடந்து தண்டாயுதபாணியைத் தரிசிப்பதற்குச் செல்வதற்கு முன், மலைமீதுள்ள வழியைக் கூர்ந்து கவனித்தால், அவருக்கு வளைந்து வளைந்து காணும் படிவழி ஒரு



ஆரியர் மண்டபத்தில் காவடிக்காட்சி.

சர்ப்பத்தின் உடலாகவும், உச்சியிலுள்ள திருக்கோயிலும், சுற்றுப்பிரகாரங்களும், அப்பாம்பின் படமாகவும், ஆலயத்தில் இனிதமர்ந்தருளும் இறைவன், (முருகப்பிரான்) மின்னிப்பிரகாசிக்கும் நாகரத்தினமாகவும் தோன்றும். அன்பர்கள் ஆண்டவன் அபிஷேக ஆராதனைகளுக்குரிய தேங்காய், பழம், புஷ்பம், பால், பன்னீர், அபிஷேக திரவியங்கள், முதலியவைகளை யெடுத்துச் செல்லும்போதே மலைப்படிகளிலும், மரக்கிளைகளிலும், மண்டபங்களிலும் தங்கியிருக்கும் மிகுதியான குரங்குகளுக்குக் கொடுக்கும் பொருட்டு, பொரி, கடலை, பழம் முதலிய திண்பண்டங்களையும் உடன் கொண்டு போதல் நலம். இங்ஙனம் செல்வோர்கள் மிகுதியாகச் சிரமப்படாமல் சுலபமாய்ச் செல்வதற்குக் கற்படிகளைத் தர்மவான்கள் பலர் உபயமாகச் செய்து வைத்திருப்பதோடு, ஆதரவுக்காக கைப்பிடிச்சுவர்களும் ஆரம்பம் முதல் முடிவுவரை எடுத்திருக்கின்றனர். இத்திருப்பணியை முன்னின்று முட்டின்றி விரைவில் முடித்த முருகனடியார்கள், திரிசிபுரம்; திருவாளர் ம. கு. பெ. உலகநாதஞ் செட்டியாரவர்களும், பழநி, ப. கிருஷ்ணசாமிப் பண்டாரம் அவர்களும், பூவாளூர், அ. ரா. அமிர்தஞ் செட்டியாரவர்களுமே ஆவர். சந்தியா காலதரிசனத்திற்கும், அர்த்தசாமபூசைக்கும் சென்று வருவோர்கள், இருட்டில் இடர்ப்படாமல் எளிதாய் வருவதற்கு வசதியாக விருக்கும் பொருட்டுப் பழநியில், தேவஸ்தான ஆபீஸின் ரிஸீவர் பதவியில் அமர்ந்திருந்த காலத்தில், தேவஸ்தானத்திற்குச் சொந்தமான சொத்தில் மலைப்படிகளிலும், பிரகாரங்களிலும், ஆலயமுழுதும், கோபுரத்தின் உச்சியிலும், பின்புறம் திருமஞ்சனப் படிகளின் மீதும், நல்ல பிரகாசத்தைத் தாக்கூடிய மின்சார விளக்குகளை நிறையப் போட்டு வைத்தவர் கோயமுத்தூர் பிரபல நியாயவாதியும், பிர்மக்ஞான சபை

யின் பிரபல அங்கத்தரும், பிரசித்தரும், பி. ஏ. பி. எல். பட்டதாரியும், இப்பொழுது சென்னை ராஜதானி தேவஸ்தானங்களின் பரிபாலன சபையின் தலைவருமாக விளங்கும் உயர் திருவாளர் M. சம்பந்த முதலியாரவர்கள். இவரை இத்திருப்பணியை உடனிருந்து விரைவாக முடிக்குமாறு இடைவிடாது தூண்டி முற்றுப் பெறச் செய்வித்த கனவான்கள், வெள்ளக்கிணர் பிரபல மிராசுதாரரும், பெரும் பிரபுவும் ஆகிய கனம் வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டரவர்களும், பழநி போர்டு தலைவரும், முனிசிபல் சேர்மேனுமான கனம் M. P. மங்கல கவுண்டரவர்களுமே யாவர். மேற்காட்டிய இன்றியமையாத இவ்விரு திருப்பணிகளையும் கவனித்துச் செய்த இக்கனவான்கள், திருமுருகன் பேரன்பைப் பெறுதற்கும், சிவபுண்ணியத்தை அடைதற்கும், மக்களின் வாழ்த்துதலைக் கொள்ளுதற்கும் தகுதி வாய்ந்தவர்களாவர்.

இனி, படிகளின் வழியிற் காணும் மண்டப ஆலயங்களைக் கூறுவாம்.

மலைவலம் வந்த அன்பர்கள், மீண்டும் பாதவிநாயகனை வணங்கி, மலைமீது மேற்காட்டிய பூஜாத் திரவியங்களுடன் ஏறும் போது அவர்கட்கு முதன் முதல் தென்படுவது கலியாண மண்டபம், (இது இப்போது பூக்கட்டு மண்டபம் என்று பெயர் வழங்கப்படுகிறது) இதற்கு அடுத்தது இரண்டாம் மயில்வாகன மண்டபம், இதற்குக் கிழக்கில் வரிசையாக வள்ளியம்மை, கட்டளைத் தொட்டியம்மை, தஞ்சாவூரம்மை என்பவர்களது சிற்றாலயங்கள். இவற்றையடுத்து 24 கற்றூண்களால் அழகுபெறக் கட்டப்பட்டுள்ள ஆரியர் மண்டபம். இதற்கடுத்துக் கீழ்புறம் காண்பது 18 ஆம் படி கருப்பண சாமியும், கன்னிமார்களும், எழுந்

தருளியுள்ள சிற்றாலயம், இங்கிருந்துதான் மலை யேறுவதற்குரிய செப்பனிட்ட திருப்படிகளின் எண்ணிக்கைதொடக்கமாகிறது. இதுமுதல், தண்டபாணியின் சந்நிதானத்திற்கு எதிரிலுள்ள மயில்வாகன மண்டபம்வரையில் 659-படிகள் ஜீர்ணோத்தாரணம் செய்யப் பட்டிருக்கின்றன. ஜீர்ணோத்தாரணகாலம்(1927 ஹூ ஆகஸ்டு மீ") கருப்பண்ணசாமி கோயிலுக்குச் சற்று நேரெதிரில் சேரவிநாயகர் எனும் சிற்றாலயம், இவ்வாலயத்தில் சேரன் குதிரை மீது வீற்றிருக்கிறபடி சித்தரிக்கப் பட்டிருக்கிறது. இங்குதான், பிரமோற்சவங்களுக்குத் தேர்க்கட்டு வேலைகளுக்குத் தேவஸ்தான மரியாதைகளுடன் ஸ்தவராஜ பண்டிதரவர்கள் பழனிக் கோயிலிருந்து வந்து சேரவிநாயகனுக்கும், அவரது திருவுருவத்திற்கு அபிஷேகம் செய்து தீபாராதனைநடாத்தி ஆரம்பிப்பது. இதற்கடுத்தது ஆர்ய வைசியர் விநாயகர் சிற்றாலயம், இதனைக கோமுட்டி விநாயகர் என்கின்றனர்.

இதற்கடுத்தது 'உத்தண்ட வேலாயுதக்கடவுள்' சிற்றாலயம், இவரை மலையடி வேலாயுதர் என்றுங்கூறுவர். ஆலயத்திற்கெதிரில் மயில்வாகனமும் இருக்கிறது. இதற்கடுத்து வலது பக்கத்திலுளளது 'செங்கணபதி' என்னும் பெயரிய சிற்றாலயம், இங்கு வளர்ந்துள்ள 'கல்லிச்சி மரம்' கணபதிக்குக் குடைபிடித்துக் கொண்டிருப்பது போலிருக்கிறது. இதற்கு அருகில் இடைவெளி அதாவது சமதரை ஒன்றிருக்கிறது. இதில் சுமார் 100 பேர் தங்கலாம். இங்கு அற்பிசி ஷஷ்டி உற்சவத்தில் மண்டபக் கட்டளையும், பங்குனி பிரம்மோற்சவத்தில், இந்நகர் பிரபல வைத்தியரும், மலையப்பசாமி வைத்தியசாலையின் தலைவருமான காலஞ்சென்ற திரு. மலையப்பசாமி பிள்ளை அவர்கள் தண்ணீர்ப் பந்தல் தர்மமும் ஆண்டுதோறும் நடாத்தப்பட்டு, வருவதோடு இத்திவிழா நாளில் ஏழைகட்கு உணவும் மிகுதி

யாக அளிக்கப்பட்டு வருகிறது. அது நின்று போகாமல் அவரது சகோதாரும் வைத்தியசாலையின் தற்போதய தலைவருமான டாக்டர் சி. பி. சாமி அவர்களால் கவனிக்கப் பட்டு வருகிறது. இதற்கு எதிரில், தண்டபாணி ஆலயத் திற்கு யானை கொண்டு செல்லும் 'கோடிவழி' போகிறது. இவ்வழியிலேயே 'இடும்பன் சுனை'யும் இருக்கிறது. இதற் கடுத்தது தண்ணீர்ப்பந்தல் 'விநாயகர் மண்டபம்' (இவரை வேளாள விநாயகர் என்றும் கூறுகின்றனர்) இவ்விநாயகர்க் குப் புளியமரமொன்று குடை கவிப்பது போல் நின்று நிழலைத் தருகிறது. இக்கற்றாணில் 'நட்சத்திர சுவாமியார்' என்பவர், இவ்வாலயத்தை எடுப்பிததாகச்சாஸனம் வெட் டப்பட்டிருக்கிறது. இதற்கடுத்தது இடும்பன் கோயிலை யொட்டிய 'வையாவிபுரித் துரை'யவர்களின் சிலாவுருவம். இவ்வுருவம் சுமார் 3-அடி உயரத்தில் ஜமீன் பட்டத்து உடையில் தலைப்பாகை தரித்து, இரண்டு கைகளையும் மார் பின்மீது வைத்து வணங்கும் வகையில் நின்ற கோலத்தில் சிற்றுலயத்தில் பிரதிஷ்டிக்கப் பட்டிருக்கிறது. இத்துரை யைப்பற்றி நம்பத்தகாத பற்பல வரலாறுகள் கூறப்படுகின் றன. இடும்பன் கோயிலைப்பற்றி முன்னரே விளக்கப்பட் டுள்ளது. இதற்கடுத்தது 'மோச்சைக்கோட்டை விநாயகர்' சிற்றுலயம், 'மொச்சைக் கொட்டை நாராயணன்' என்பவர் கட்டுவித்ததனுல் அப்பெயர் வழங்குவதற்தாயிற்றென்ப. இதற்கடுத்து சர்க்கரையம்மையார் விநாயகர் சிற்றுலயம். (இதனைக் 'கோங்கு விநாயகர்' ஆலயம் என்றும் கூறுகின்ற னர்.) இதற்கடுத்தது 'நாச்சான் செட்டியார் கணபதி' சிற் றுலயம். இதன் பக்கல் 'நீலகிரியார்' என்பார் கட்டிய 'நீல கிரிப்பிள்ளையார்' கோவில், இதன் அருகேயே 'வையாபுரி விநாயகர்' ஆலயமும் அமைந்துள்ளது. இவ்வாலயத்திற்கு மேற்றளவரிசை செய்யப்பட்ட கல் மண்டபமும், சுற்றுப்

பிரகாரமும் எடுக்கப்பட்டிருக்கின்றன. மலைமீது ஏறி இறங்குவோர் சிரமபரிகாரஞ் செய்து கொள்வதற்கும், பாரஞ்சுமப்போர் சுமையை இறக்கி இளைப்பாறுவதற்கும் சுமைதாங்கி யொன்றும் நிறுத்தப்பட்டிருக்கிறது. இதற்கடுத்தது 'படிகாவல் பிள்ளையார்' சிறு கோவில், இதனைப் 'பாண்டிய வேளாளர் விநாயகர்' கோவில் என்றும் வழங்குகின்றனர். இங்கிருந்து வடக்கு நோக்கியுள்ள சிற்றடிப் பாதை வழிச்சென்றால், 'காஞ்சுனையைக் காணலாம். இது, கோடை காலத்திற்குத் தண்ணென்ற அருநிழல் நிறைந்து, தங்குவோர் சுகானந்த வாரிதியில் தோய்வதற்கு தகுதியான ஸ்தலம். வனபோசனத்தை விரும்புவோர் இங்கு அடைந்தால் இன்பமுறுவர். சான்றோர் மனம் போல் தெளிந்த இனிய நன்னீர் நிலையமும் இங்குளது. இதற்கு வலது புறத்து விளங்குவது, தேவகோட்டை ரா. ம. பெ. சித. அவர்களது 'தண்ணீர்ப் பந்தல்'. இதற்கு நேர் எதிரில் வடக்கில் காண்பது அரசும், ஆலும் கூடிய விருக்ஷங்களின் அடியில் ஆலயங்கொண்ட யானை முகப் பிள்ளையார்கள். இவைகளை நூதனமாகப் பிரதிஷ்டை செய்வித்தவர், தேவகோட்டை வே. ஆ. ஆ. இராமநாதன் செட்டியாரவர்கள்.

---

## மலைமேற் கோயில்களும்—அவற்றின் விவரமும்.

எந்தை குகனிருக்கும் ஏற்றவரை யொன்றுன்னில்
சிந்தையினிக்கும் சிவந்தழைக்கும்—விந்தைத்
திருப்பெருகும் கல்வித் திறந்தளிர்க்கும் வாழ்நாள்
விருப்பமுற நீடும் விரைந்து.

பதினெட்டாம் படிக் கருப்பண்ண சுவாமி சிற்றாலயத்திலிருந்து திருமலைத் தண்டபாணி மயில் வாகன மண்டபம் வரையிலுள்ள 659 திருப்படிகளையும் கடந்தபின், பெருமை மிக்க மயிலை அன்புடன் வணங்கிச் சந்நிதியின் வெளிப்பிர

காரத்தை வலம் வரத்தொடங்க வேண்டும், அங்ஙனம் தொடங்கும் அன்பர்கட்கு முதலில் தென்படுவது யானை முகப்பிள்ளையார் சிற்றாலயம். இது, திருமதிலை யொட்டி 'கோடிக்கால் வேளாள' மரபினரது தருமநிலையமாக விளங்கும் மண்டபத்தின் கண்ணுள்ளது. இது தென்வடலில் நீளமாகக் கட்டப்பட்டிருக்கிறது. வடபுறப் பிரகாரத்திற்குச் சென்றால், வடதிசை மயில்வாகன மண்டபத்தைக் காணலாம். இதனை யடுத்தது, கீழ்த்திசை மயில்வாகன மண்டபமும், வேட்டுச் சுனையும். (இமமண்டபத்துள்ள மயில் வாகனம் பழுதுப்பட்டிருந்ததைக் கவனித்த முருகனடியார்களில் மிக்கவர், தஞ்சை நகர்வாசியும், பழநிப்பட்டினத்து டிஸ்திரிக்டு முன்சீப்பும் ஆகிய, கனம நா. வைத்தியநாத அய்யர் B.A. B.L., அவர்களே. இவர் தமது சொந்தசெலவில் பழுதுபட்ட வாகனத்தை நீக்கி, அஸ்தானத்தில் புதிய மயில்வாகனக் கற்சிலையை அதேபருமன் அளவில் தேவஸ்தானத்தார் ஆதரவுடன் பிரஜோற்பத்தி ஆண்டு தைத்திங்கள் 28-ம் நாள் (10-2-32) புதன்கிழமை பிரதிஷ்டை செய்வித்தனர்) இதற்கடுத்தது தென்றிசை மயில் வாகனமண்டபமும், மண்டபத்தை யொட்டிய விநாயகர் மேடையும், முத்து நாய்க்கரால் கட்டுவிக்கப்பட்ட நாற்கால் குறடும், தெற்குத் திருவாயிலும்; இதற்கடுத்தது மேற்றிசை மயில்வாகன மண்டபமும், மண்டபத்திற்குத் தென்றிசையில விநாயகர் திருமேடையும் அமைந்து விளங்குகின்றன.

இவைகளை வலம் வந்து தரிசித்து வணங்கியபின், திரு. அக்கண்ண செட்டியார் என்னும் செல்வரால் கட்டுவிக்கப்பட்ட முன் மண்டபத்தில் எழுந்தருளியுள் 'வல்லப விநாயகரை, வணங்கி, ஆலயத்துள் பிரவேசிக்க வேண்டும். இம் மண்டபத்தில் பூஜா காலங்களில், ஒலிக்கின்ற பெரிய கண்டாமணிகள் கட்டப்பட்டிருப்பதனால், இதனை,

"மணிகட்டி மண்டபம்" என்கின்றனர். இதற்கடுத்துக் கடுத்துக காண்பது, 'நாய்க்கர் மண்டபம்'. இது நெய்க்கார பட்டி மைனர் அவர்களது முன்னோரால் கட்டுவிக்கப்பட்டது. தெற்கு வடக்கில் நீண்டு கிழமேல் சுருங்கிய இப்பெரிய கல்மண்டபம் 104 சித்திரக் கற்றூண்களைக் கொண்டு அழகாக விளங்குகிறது. இவற்றில் பற்பல சிற்றறைகளும, சிறு கோவில்களும் இருக்கின்றன. இதன் தென்பாகத்தில் சுப்பிரமணிய விநாயகர் என்னும் பெயரிய விநாயகர் சந்நிதியும், சந்நிதிக் கெதிரில் மைனரவர்களது முன்னோர்களது (நற்சிலையிலமைந்த) திருவுருவங்களும் தூண்களில் சித்தரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இவையேயன்றி, தாழ்த்தப்பட்டவர்கள் நின்று தரிசிப்பதற்கு இம் மண்டபத்தின் வடபாகத்தில் விநாயகர் மேடையும், பூசை சாமான்கள் வாங்குவதற்குச் சிறுகடையும், தாகசாந்திக்காக சோடாக் கடையும் கட்டப்பட்டிருக்கின்றன. இதற்கடுத்தது இராயகோபுரம். இது, பூமியின் தளவரிசை மட்டத்திற்குத் தென் வட பாகங்களில் 22-அடி அகலமும், கிழமேல் 27½ அடி நீளமும் இருக்கின்றன. ஐந்து நிலைகளைக்கொண்ட உயரிய கோபுரம். இதற்கடுத்தது, 'பார்வேல்மண்டபம்' இதனை, கொங்குவேளாளர்களில் பிரபல செல்வர்களும், பெருநிலக் கிழவர்களும், 'பட்டக்காரர்' என்று பிரபல பட்டம் வாய்ந்தவர்களுமாகிய வேளாளமன்றாடிகளது மண்டபம் என்று கூறுகின்றனர். இது, தென்வடல் 30 அடி அகலமும், கிழமேல் 53 அடி நீளமும், 42 கற்றூண்களும், (இவைகளில் 8 சித்திரத்தூண்கள்) மன்றாடிகளது கற்சிலைத் திருவுருவங்கள் 4-ம், துவாரபாலகர் திருவுருவம் 2-ம் கொண்ட அழகிய மண்டபம். இம்மண்டபத்தில் கற்பூரத்தை மிகுதியாகக் கொளுத்தும் பெரிய கற்றொட்டியும், இதற்கருகில் இரும்பினால் செய்யப்பட்ட நீண்ட வேல்

களும் வைக்கப்பட்டிருக்கின்றன. இம்மண்டபத்தின் மத்தியபாகத்திலிருந்து தான் இரண்டாம் சுற்றுப்பிரகாரத்திற்குச் செல்லவேண்டும். இப்பிரகாரத்தின் நாற்புறத்து மதிற் சுவற்றை யொட்டி நீண்ட காலத்திற்கு முன்னரே நீராழிமண்டபம் கட்டப்பட்டுள்ளது. அவற்றில், பிற்காலத்தில் கோயிற் பண்டாரங்கள், அர்ச்சகர்கள் ஆலயசேவை சம்பந்தமாகத் தங்குவதற்கும், சாமான்கள் வைத்துக் கொள்வதற்குமாகத் தேவஸ்தானத்தார் அநுமதிபெற்று 48 சிற்றறைகள் நான்கு பக்கங்களிலும் கட்டிக்கொண்டிருக்கின்றனர். இவைகளில் சிலஅறைகளில் சிவலிங்கம், அம்பிகை, கணபதி, தண்டபாணி இவர்களின் சிலாவுருவங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இவைகளுக்கு பூசையில்லை, 9. 30. 46-ஆம் எண்கள் சேதுபதி மகாராஜா, சிவகங்கை மகாராஜா, புதுக்கோட்டை மகாராஜா அவர்களது உச்சிக்காலக் கட்டளை அறைகள் 32-ஆம் எண். பூவாளுர் செட்டிமார்களுடைய காலைவிழாக்கட்டளை அறை. 19-ஆம் அறைக்குச் சமீபத்தில் பூக்கட்டு மண்டபமும், சந்தனம் இழைக்கும் மண்டபமும் இருக்கின்றன. இம்மண்டபத்தின் எதிரிலே தான் பட்டுப்போன ஸ்தல விருக்ஷம் புளியமரம் இருந்தது. 22-ஆம் அறையில் விநாயகர், நவவீரர்கள், இலக்கத்தக்கவர் சிலா விக்கிரகங்கள் பிரதிஷ்டிக்கப் பட்டிருக்கின்றன. இவைகட்கு நித்யபூஜை நிவேதனத்துடன் நடைபெற்று வருகின்றன. இவற்றின் இடைகளிலும், மத்தியபாகத்திலும், மதிற்சுவற்றை யடுத்தும், மயில்வாகன மண்டபம், நந்திமண்டபம், சிவன் கோயில் (கயிலாச நாதர்) தட்சிணாமூர்த்திகோயில், சண்டீஸ்வரர், கிழக்குவாயில் சிறு நிலைக்கோபுரம், இதற்குச் சிறிது வெளியில், வெட்டுச்சுனையை யொட்டியது 'சண்முகர் சமாராதனைச் சத்திரம்.' (இது தனவணிகர், காரைக்குடி திரு. மு. ரு. வீ. ர அவர்களால் தர்மத்திற்காகக்

கட்டுவிக்கப்பட்டது.) இதற்கடுத்தது மடப்பள்ளி, பின்னர் **தெற்குவாயில்**, அதன்பின்னர் **போகர் சமாதிநிலையம், கன்னிமார் கோயில்** முதலியன. இவை பிரகாரத்தை வலம் வரும் குகனடியார்களுக்குச் சேவை சாதித்துக் கொண்டிருக்கின்றன; முதல் பிரகாரம் இரண்டாம் பிரகாரங்களின், தரைகள், கருங்கல் தளவரிசை செய்யப் பட்டிருக்கின்றன.

இங்ஙனம் பிரகாரத் திருவலத்தை,தெற்குத்திசையில் முடித்துச் சண்டேச்சுரரைத் தரிசித்து வணங்கியபின், மீண்டும் பாறைவேல் மண்டபத்துட் புகுந்தால், வலது பாகத்தில் தேவஸ்தான ஆபீசும், இடது பாகத்தில் மூலைக்கொமூந்து சிவனார் கோயிலும்,சிவலோக நாதர் சந்நிதியும் தென்படும். இதன் நடுவில் சேவற்கொடியின் கீழமைந்த பலிபீடத்திற்குக் கீழமர்ந்த மயில்வாகனத்தையும் காணலாம். இவைகளை வணங்கிக்கொண்டு, துவாரபாலகரையும் கும்பிட்டு உள்ளே சென்றால், நவரங்க மண்டபத்தை அடையலாம். இம்மண்டபம் அந்தமுடன் அமைந்து கம்பீரத் தோற்றத்துடன் விளங்குகிறது. இங்கு தான், உற்சவ மூர்த்தியும், பரிவார தேவதைகளும, பள்ளியறையும், அவைகள் அமையவேண்டிய உரிய இடங்களில் அமைந்து காண்கின்றனர். மற்றும், தண்டாயுதக் கடவுளுக்கு அபிஷேகமாக வேண்டிய பல்வேறு வகை அபிஷேக திரவியங்களும், அலங்கார சாமான்களும், இம்மண்டபத்தின் மத்தியபாகத்தில் வகுக்கப்பட்டுள்ள நல்லிடத்தில் வைத்து புண்யாவாசனம் செய்யப்படுகிறது. இவைகளைத் தரிசித்த பின்னர்,தெற்குப் பக்கத்திலுள்ள சிறுவாசல்வழி நுழைந்து கர்ப்பக்கிரகத்தை யொட்டிக் கட்டப்பட்டுள்ள நீராழி மண்டபத்தின் வழியாக மூன்றும் பிரகாரத்தைச் சுற்றிக் கொண்டு, வடக்குச் சிறுவாயின் மூலம் அர்த்த மண்டபத்தையடைந்து, அங்குநின்றே அகில லோக சரண்யனாகிய

ஆண்டவனைக் கண்பெற்ற பேறாகத் தரிசித்து இன்பமடைதல் வேண்டும்.

## கர்ப்பக்கிரகமும்—கல்வெட்டுகளும்.

ஸ்ரீ பழநியாண்டவன் கோயில் கர்ப்பக்கிரகத்தில் தெற்கு வடக்குச் சுவர்களிலும், வியாழவரிகள் அதாவது அடிப்பாகத்திரணைகளின் மூன்றுபக்கங்களிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. விஜயநகர அரசர், மைசூர்கர்த்தர்கள் அரசு செய் காலங்களில பழநியாண்டவன் ஆலயம் அவர்கள் சுவாதீனத்திலிருந்தபோது, இக்கற்சாஸனங்கள் வெட்டப்பட்டிருக்க வேண்டும். இவற்றில், அவ்வரசர் பெயர்கள் காணப்படுகின்றன. விஜயநகர அரசுக்காலம் கி. பி. 1295-ஆம் ஆண்டு; கி. பி. 1565-ஆம் ஆண்டில் இவ்வரசர் ஆட்சி குன்றவே, கி. பி. 1600-ஆம் ஆண்டில் கொங்குநாடு மைசூர் அரசர் ஆதீனத்திற்குட்பட்டது. இக்காலங்களின் முன்னே, பின்னே, அரசுசெய்த கோச்சடைபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்தி, சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான், ஸ்ரீமந் கோனேரின்மை கொண்டான் 'வீரபாண்டியதேவர்' என்ற பெயருடைய பேரரசனது பெயர்கள் நான்கு சாஸனங்களில் காணப்படுகின்றன. இவன் கொங்கரசர்களில் ஒருவனாக விருக்கவேண்டும், 'கோனேரின்மை கொண்டான்' என்பது ஒருபட்டப் பெயரேயன்றி அரசன் பெயரல்ல. இத்துடன் 'வீரபாண்டியதேவர்'என்ற பெயரும் இணைக்கப்பட்டிருப்பதால், கொங்கு அரசரில் ஒருவன் தனது பெயருடன் இப்பட்டப் பெயரை வகித்திருக்க வேண்டும். அன்றியும் கொங்குநாட்டுச் சிவாலய குகாலயங்களில் 55 கல்வெட்டுகள் கோனேரின்மை கொண்டான் பெயரிலுள்ளன. இவற்றில் 'பேரூரில்' மூன்றும், 'குமரலிங்கத்தில்' ஒன்றும், ஆக நான்கு. கொங்கு சிவஸ்



கர்ப்பக்கிரகமும் சுற்றுப்பிரகாரமும்.

தலங்களில் பேரூரும், குமரலிங்கமும் சேர்ந்தவை. குமரலிங்கம் பழநிக்கு மிகச்சமீபம். ஆனதால், பழநிக்கல்வெட்டில் காணப்படுகிற கோனேரின்மை கொண்டானும் பெயரொற்றுமையால் ஒருவனாகவே யிருக்க வேண்டுமென்பது நமது அபிப்பிராயம். வேறு இரண்டு அரசர்களும் இப்பெயரைக் கொண்டிருந்தார்கள்.

இங்குள்ள 8 சாஸனங்களில், No. 288-ஆம் ஆண்டு சாஸனம் ஒன்றில்மட்டும், சாஸனகாலம், 'சாலிவாகன சகாப்தம் 1442-ஆம் ஆண்டு' என்று குறிப்பிட்டிருக்கிறது. அதன்படி கணக்கிட்டால் இன்றைக்கு 411 ஆண்டுகளாகிறது.

மேலேகாட்டிய பெயர்களன்றி, 'சேரவரசன்' பெயரில் ஒரு கல்வெட்டேனும் காணப்படவில்லை. இவன் பெயரில் பல கல்வெட்டுகளிருப்பதாகக் கன்ன பரம்பரையில் மிகுதியாக வழங்கப்பட்டதே இப்பிரஸ்தாபம் பலப்படுதற்குக் காரணமெனலாம். இதனாலேயே, இவன் திருமுருகனுக்குத் திருவாலயம் கட்டுவிக்கப்படவில்லையென்று கூறிவிட முடியாது. இச்சேரனது திருவுருவச்சிலை பழநியாண்டவன் கோயில் கர்ப்பக்கிரகத்தில் சித்தரிக்கப்பட்டிருப்பதே இவன் இவ்வாலயத்தை முதன் முதல் சிற்றாலயமாகக் கட்டுவித்தற்குச் சான்றாகும். இவ்வரசன் காலத்தில் கல்வெட்டுகள் செதுக்கி வைப்பது வழக்கத்தில் இல்லாதிருக்கலாம். இருந்தும், இவன் கவனிக்காமல் விட்டிருக்கலாம். பிற்காலத்தரசர்கள் பெயரில் காணப்படும் கல்வெட்டுகளிலும், ஒருவரேனும் திருவாலயத் திருப்பணி செய்வித்ததாகக் குறிக்கப்படவில்லை. இவர்களது திருப்பணிகள் யாவும் தண்டபாணியின் பூசை நிவேதனங்களுக்காக, நஞ்சை, புஞ்சை, தோட்டம் முதலிய நிலங்களும்,

அந்நிலங்களுக்கு நீர் பாய்வதற்காக ஏரிகளும், பொருள் வருவாய்க்குக் கிராமங்களும், திருநந்தாவிளக்கு, திருஅமுது, வெஞ்சனம், திருமஞ்சனம், மாலை சாத்துப்படி, பரிகலப் பரிசின்னங்கள் முதலியவைகளுமாம். இவற்றால் பிற்கால த்தரசர்கள் எவருமே திருக்கோயில் திருப்பணி செய்யப் படவில்லை என்பது புலனாகின்றது.

மேற்காட்டிய அரசர்களது கல்வெட்டுகள் வருமாறு:-

சாஸனங்கள்.

No. 285, A. R. No. 609 of 1893.

வடபுறம் சுவர்.

(1) மைசூர் சம்ஸ்தான தளகர்த்தர் பெயருள்ள கல்வெட்டு.

ஸ்வஸ்தி ஸ்ரீமந், மகாமண்டலேஸ்வரன், அரிராயவி பாடன்,பாஷைக்குத்தப்புவராத(மிரு)கண்டன், §ஸ்ரீவீரநஞ் சணவுடையாருக்கு, செல்லாநின்றருத்திரோத்காரி ஆண்டு தைமாதம் 28-தேதி அமர பட்சத்து வெள்ளிக்கிழமையும், ரேவதியும், பஞ்சமியும், பெற்ற நாள், நயினர் இளையநயி னார்க்கு அமுதுபடிக்கு, வைகாவூர் நாட்டுக் கலயன் புத்தூர் சபையாரில் பெரிய பெருமாள் நம்பி திருவாழி ஆழ்வார் தேவதானமாக கொடுத்ததாவது—எமக்குக் காணியாட்சி யான நிலத்தில் வடக்கு வயலில், கார்நிலத்தில் (கொக்கு) செய்நிலம் அரைமாவும், கருப்புசாமி நிலத்தில் ஒருமாவும், பன்றிப்பள்ளத்து ஐந்தரைமாவும் கொக்குத்தடி ஒன்பதே காணியும், பனம்பள்ளி அரைமாவுக்கு வடக்குத்தடி ஒன்று. நிலம் காணி முந்திரியும், இதற்கு வடக்குக்குத்தடி மூன்று

§ இப்பெயர் அவிநாசி, திருமுருகன் பூண்டி திருவாலயங்க ளில் வெட்டப்பட்டுள்ள கற்சாஸனங்களில் 'வீரநஞ்சராயவுடையார்' என்று காணப்படுகிறது. இவனது ஆட்சிக்காலம் 1489-1517 ஆண்டுகள் பெயரொற்றுமை பற்றி இருவரும் ஒருவராகவே யிருக்க லாமென்று கருதுகின்றோம்.

காணி அரைக்காணி முந்திரியும், ஒரு நிலத்தில் புளியஞ் செய் ஐந்தும், ஒருமாவும், இதற்கு மேற்கு திட்டைத்தடி இரண்டுமா செய்ஐந்தும், இதற்குத் தெற்கு தடிநான்கு மாகாணி அரைக்காணி முந்திரியும்,தெற்கில் குளத்தில்........ (முடிவில்லை)

## II

## No. 286. A. R. No. 611. of 1893.

### வடபுறம் சுவர்.

(1) *வீரபாண்டிய தேவர் பெயருள்ள கல்வெட்டு-*

ஸ்ரீ கோச்சடை பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ. வீரபாண்டிய தேவர்க்கு, யாண்டு இருபத்திரண்டாவது ஆனிமாதம் வைகாவூர் நாட்டு ஆய்க்குடியில் சுந்தர பாண்டிய நல்லூர்க் காரணவரோம், நாயனார் பண்டாரத் தார்க்கு விடுதிட்டுக்கொடுத்த பரிசாவது:—

எங்கள் காணியான நன்னிலம் நானூற்றிருபத்தொன்றும், இதில் நாங்கள் முன்னாள் தேவதானமாக விட்ட கார் மறுநிலம் ஒருமா முக்காணியும், ஒரு பத்தரை நிலம் நான்கு மாவும், ஆகநிலம் ஐந்து, மாமுக்காணியும் நீக்கி, நிலம் நானூற்றைந்து மாகாணியும், இதற்கு அடைப்பான சுந்தர பாண்டிய நல்லூரும், காடுகளும், புன்செய்களும், குடி இருப்புகளும், தோட்டங்களும், குளங்களும், ஊருணிகளும், மேனோக்கின மரமும், கீழ்நோக்கின கிணறும், மற்றும் சமஸ்தப்பிராப்திகளும், இற்றை நாளில் எங்கள் அன்புடைமையாலே நயினார் பண்டாரத்தார்க்கு, காரணவரோம் விடுதிட்டுக் கொடுத்தோம். இப்படிக்குக் காரணவர் அமைந்தமைக்கு ரிஷபதேவர் மகன் திருநட்டப் பெருமாள் எழுத்து, குடுமித்தேவர் எழுத்து, முடிகொண்ட பல்லவரையன் தற்குறி மாட்டெறிந்தோன் ரிஷபதேவன் எழுத்து,

ஒலக்க சோழநாடாழ்வான் தற்குறி மாட்டெறிந்தோன் முடிகொண்ட பட்டன் கையெழுத்து, செம்மன் எழுத்து, தில்லை சிங்கதேவர் தற்குறிமாட்டெறிந்தோனான நாராயண தேவர் எழுத்து, பல்லவராயன் எழுத்து, இப்படிக்கு இவர்கள் சொல்ல, இவ்விடுதிட்டு எழுதினமைக்கு இவ்வூர் மாகேச்சுரரான அறுமுகப் பிச்சன் எழுத்து.

## III

### வடபுறம் வியாழவரிக்கல் வெட்டு.

(இச்சாஸனம் சர்க்காரால் எடுக்கப்படாதது)

(2) வீரபாண்டிய தேவர் பெயருள்ள கல்வெட்டு.

ஸ்வஸ்தி ஸ்ரீமக கோனேரின்மை கொண்டான் வீர பாண்டிய தேவர்க்கு, யாண்டு பத்தாவது..............யாண்டு ஐந்தாவது வைகாவூர் நாட்டுப் பழநிமலையின் சுப்பிரமணிய பிள்ளையார் கோவில் தேவஸ்தானம் சார்வபௌமருக்கு.... ......................விடுதிட்டுக் கொடுத்திட்ட பரிசாவது:— வீரசோழ மன்னனது வயலின் தென்கரையிலுள்ள இடும்பன் குளத்திற்கு நான் கெல்லையாவது—கீழ்பால் எல்லை இடும்பன் குளத்து நீர் தேங்கவைக்கும் இடம்; மேல்பால் எல்லை சரளன் ஊற்று; வடபால் எல்லை பழநியூர்வாய்க்கால்; இந்த நான்கு எல்லைகளுக்கும் உள்ளிட்ட நிலங்களும், அல்லாமல், கார்த்திகேயன் திருவிளையாடல் செய்கின்ற நிலத்தில் ஒருமா நீக்கி, நின்றநிலமும, பழநி தேவஸ்தானத்தின் நிலத்தின் அறைமாவும், நீக்கிநின்ற நிலமும், புன்செய்யும், சித்திரைத்திங்கள் முதல், இந்நயினார்க்குத் திருப்பணிக்கும், அமுதுபடி சாத்துப்படிகளுக்கும், உள்ளிட்ட நிபந்தங்களுக்கும், உபயமாக விருக்கக் கொடுத்தோம். இக்குளத்திற்குச் சார்ந்ததா யுள்ள நெல்லும், பொன்னும், கிருத்திகைப்பச்சை அந்தராயம் கழித்து, மற்றும்பல தீமைகளிலும், வரியிலாக்கணக்கிலும் கழித்துக்கொண்டு, நாம் இவ்

வாறு கொடுத்ததை நமது ஓலைப்படியாகக் கொண்டு, இக் குளம் சந்திரா தித்தர் வரை செல்லுவதாக. இதனைக் கல் லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்க. இப்படிக்கு அளந் தூர் நடையான் எழுத்து. காலிங்கராயன் எழுத்து.

## IV

## No. 286 A. R. No. 610 of 1893.

### தென்புறம் சுவர்.

(1) *விஜயநகர அரசர் பெயருள்ள கல்வெட்டு.*

ஸ்வஸ்தி ஸ்ரீ. மகாமண்டலேஸ்வர ஹரிராய விபாடன் பாஷைக்குத் தப்புவராத கண்டன், கண்டநாடு கொண்டு கொண்ட நாடுகொடாதவன், பூர்வபச்சிம—உத்தர—தட்சிண அதிபதி மகாராயதேவராய மல்லிகார்ச்சுனராயர், பிருத்வீ ராஜ்யம் பண்ணி அருளாநின்ற காலத்தில், இராய........கள் அரிரா...........நமாய ராயவுடையார், கார்த்திகை மாதம் 5-தேதி மதிநாள் பக்கம், பஞ்சமிமூலம், வெள்ளிப் பொழு தில் சூரிய கிரகண புண்ணிய காலத்தில், தாராபூர்வமாகத் தன்ம சாஸனம் பண்ணிக் கொடுத்ததாவது:—

சகல லோகத்திற்கும் தாம்பிரானர் நயினர், இளைய நயினர்க்குத் திரிசந்தியா காலமும், மகாபூசையாக நடக்கத் தக்கதாகத் திருமுன் அமுதும், திருநந்தாவிளக்கும், திரு மாலையும், திருமஞ்சனமும், ஆகிய இவைகட்கும், நம்பரி காரம்கோயில் பரிகல பரிச்சின்னங்களுக்கும் உபயோகமாக விருக்கும் பொருட்டு, வைகாவூர் நாட்டு, இரவிமங்கலம் மேற்பாகெல்லையும், ஆலமரம் கீழ்ப்பாலெல்லையும், கொழுமத் திற்குச் செல்கின்ற வழி வடபால் எல்லையும், பனிறிமலை வழிக்கு வடக்காகவுள்ள தென்பால் எல்லையும், கூடிய இந் நான்கு எல்லைகளும், அதனுட்பட்ட நஞ்சை புஞ்சைகளும், சர்வமான்யமாகச் சந்திராதித்தர் வரை நடக்கும்படிக்குக்

கற்பித்த இந்த அளவுக்கு, நிதிநிட்சேபம், செல பாஷாணம் முதலாயுள்ள சர்வசாம்யமும் இந்தக் கோயிலுக்குக் கடவதாக நிசராகம் பண்ணிக்கொண்டு, இம்மரியாதை நடத்தக் கடவராகவும்,

## V

## No. 288 A. R. No. 612 of 1893.

### தென்புறம் சுவர்.

(2) விஜயநகர அரசர் பெயருள்ள கல்வெட்டு.

ஸ்வஸ்தி ஸ்ரீ. ஜயாப்யுதய சாலிவாகன சகாப்தம் 1442-க்கு மேல் செல்லாநின்ற விக்கிரம ஆண்டு, சித்திரைத் திங்கள் 10-ஆம் நாள், வெள்ளிக்கிழமை பெற்ற நவமி ரேவதி நட்சத்திரத்தில், மகாராஜாதிராஜா ராஜபரமேஸ்வர வீரப்பிரதாப ஸ்ரீகிருஷ்ணதேவ மகாராயர் பிருத்வீராஜ்யம் பண்ணியருளா நிற்கையில், மகா மந்திரி சேகரர் கொண்டல் அரசையர் சம்ஸ்தராஜ்யத்துக்குக் கர்த்தரான காவேரி வல்லவ சடக சூறைக்காரன், வி....ஸி....உறையூர்ப் புராதீஸ்வரம்........வஸ்திப பத்யராதகரான செந்........கொண்ட தேவமகா ராஜர் ஸ்வஸ்தி.........திபன், சிவ ஸ்ரீ. பழநிமலை வேலாயுதப் பெருமானுக்கு—மாத்தூர் சீமையான கரைவழி வைகாவூர் கலையன்புத்தூர் நரிக்கரைப் பள்ளமும், கீழ்ப்பாற்கெல்லை........................................ ...........தன்மமாகக் கொண்டு, கிரகண புண்ணிய காலத்தில் தேவ தானமாகக் கொடுத்தோம். இத்தர்ம்மப் பட்டயத்தைச் செம்பிலும், கல்லிலும் வெட்டிக்கொண்டு நடத்தி வருவாராகவும்.

## VI

### தென்புறம் வியாழவரிக் கல்வெட்டு.

(இச்சாஸனம் சர்க்காரால் எடுக்கப்படாதது.)

(3.) வீரபாண்டிய தேவர் பெயருள்ள கல்வெட்டு.

ஸ்வஸ்தி ஸ்ரீமந். சக்ரவர்த்தி கோனேரின்மை கொண்டான். * வீரபாண்டிய தேவர்க்குப் பதினேந்தாவது ..............வைகாவூர் நாட்டுப் பழநிமலையில் சுப்பிரமணிய பிள்ளை கோயிலுக்கும், இப்பிள்ளையாருக்கும். அமுதுபடி சாத்துபடி உள்ளிட்ட வெஞ்சனத்துக்கும், பல படித்த ரத்துக்குமாகப் பழநியிலிருக்கும பனங்குளத்து வீர சோழமனை மாதகுன்றன் வடகரைவயல், தேவதானமாக வழங்கப்பட்டதின் பரிசாவது:— இவ்வயலுக்கு நான்கெல்லையாவன. பனங்குளம் கீழ்பால் எல்லை, ஊர்வாய்க்கால் மேற்பால் எல்லை, பிள்ளையார்...........வடபால்எல்லை, பேச்சிமலைக்காடு தென்பால் எல்லை. இந்த நான்கெல்லைக்கும் உட்பட்ட நிலம் இருபத்திரண்டுமாவும், அரைக்காணியும் கொடுத்து, இந்நிலத்துக்கு வரும் கடமைப் பட்டம் கிருத்திகைப் பச்சை அந்தராயம் உள்ளிட்ட யாவும் புறவர்க்கமும் கழித்து,வரியில்லாமலும்,கழித்துக்கொண்டு,பாக்கிக்கி இவ்வோலைப்படிப் பாடாகக்கொண்டு, சந்திராதித்தவரை நடந்து கொள்வாராக. இதனைக் கல்லிலும், செம்பிலும் வெட்டிக்கொள்க. ........... இப்படிக்குப் பெரியவுடையான் எழுத்து, சுந்தரபாண்டிய சோமித்தேவன் எழுத்து, பதினேந்தாவது களம் கிராமத்தார்கள் எழுத்து, ஸ்ரீ. மாகேஸ்வர ரக்ஷை.

## VII

### மேற்குப்பக்கம் வியாழ வரிக்கல்வெட்டு.

(இச்சாஸனம் சர்க்காரால் எடுக்கப்படாதது.)

(4) வீரபாண்டியத்தேவர் பெயருள்ள கல்வெட்டு.


ஸ்வஸ்தி ஸ்ரீமந். சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் வீரபாண்டிய தேவர்க்கு, வைகாவூர் நாட்டுப் பழநியில் சுப்பிரமணிய பிள்ளையார் கோயில் தானத்தார்க்கும், இப்பிள்ளையார்க்கும்,.............. 'நம் பெயரால் ஆராதனைக்

கும், அமுதுபடிக்கும், சாத்துபடிக்கும், உள்ளிட்ட வெஞ்சனத்துக்கும், ஸ்ரீ வைகாவூர், ஐபன் புள்ளியான அவனிவேந்த ராமநல்லூர் அடங்கலும், தேவதானமாக இறையிலியாகத் தந்தோம். இவற்றிற்கு நான்கெல்லையாவது.............. கொண்டை ஊற்றுக்கும், அணைக்கும் மேற்கு, ..............வைகாவூர் பெருமலைக்கும் வடக்கு,........ ........க்கரைக்கு ...................... தேன்பதி உள்ளிட்ட நஞ்சை புஞ்சை ............... (பூர்த்தியில்லை.) (கல்பொரிந்து எழுத்துக்கள் பழுதுபட்டுப் போயின.)

---

## பட்டினமும்—அடிவாரமும்.

புண்ணிய க்ஷேத்திரமாகிய இப்பழநிப் பதியில் 'அடிவாரம்' 'பட்டினம்' என்று இரு பிரிவுகள் இருக்கின்றன. இது இப்பொழுது மதுரை ஜில்லாவின் ஒரு தாலூகாவாகவுள்ளது. ஜனத்தொகை 18888. பதினெண்ணாயிரத்து எண்ணூற்றி எண்பத்தெட்டு. பட்டினப்பிரிவில் நகரபரிபாலன சபையும், (Mumicipality) தாலூகாபோர்டு ஆபீசும், தபால் தந்தி ஆபீசும், (E. Circle) போலீஸ் ஸ்டேஷனும், தாலூகாக் கச்சேரியும், தாலூகா போலீஸ் ஸ்டேஷனும், சப்ஜுரிஜிஸ்ட்ராரும், மாஜிஸ்திரேட் கோர்ட்டும், டிஸ்திரிக்ட்டு கோர்ட்டும், முனிசிபல் ஹைஸ்கூலும், போர்டு எலிமெண்டரி ஸ்கூல்களும், எயிடட் ஸ்கூல்களும், வேர்மென் மிமோரியல் பாடசாலைகளும், சர்க்கார் ஆஸ்பத்திரியும், முசாபரி பங்களாவும், புகைரத நிலையமும், (Railway station) உயரமும் அழகும் வாய்ந்த இருஸ்தூபிகளுடைய மகம்மதியர் மசூதியும், நீண்ட கடைத்தெருவும், யாத்ரீகர்கள் தங்குவதற்குப் பற்பல சத்திரங்களும், மிகப்பழைமையும், மகிமையும் வாய்ந்த 'பட்டத்து விநாயகர்' 'பாதிரி விநாயகர்' ஆலயங்களும், பெரிய நாயகியம்மன், கயிலாயநாதர், முத்துக்குமாரர்,



(மலையும், அடிவாரத் தெருவும்.)

கோசல விநாயகர், அபரஞ்சிவிநாயகர், இலட்சுமிநாராயணப் பெருமாள் கோயில்களும், வைசூரித் தெய்வமாகிய மாரியம்மன் ஆலயமும், தேப்பக்குள முதலியவைகளும், மற்றும், வைத்திய ஆசிரியர் பட்டங்கள் பெற்ற C. மலையப்பசாமி பிள்ளை, R. M. K. வேலுசர்மி பிள்ளை, இருவர்களின் சித்த வைத்திய சாலைகளும், அச்சுக்கூடங்களும், 'சன்மார்க்கன்' 'குலால மித்திரன்' பத்திரிகாலயங்களும், முனிசிபல் பொதுஜன வாசக சாலையும் அழகுபெறவமைந்து சிறந்து பொலிகின்றன.

அடிவாரப்பிரிவில்—'அடிவாரத்தேரு' எனப்படும் பிரதான வீதியின் இருமருங்கிலும் அமைந்துள்ள கடைகளில் யாத்திரை வாசிகளுக்குத் தேவையான உணவுப்பொருள்களும், அபிஷேகத்திற்கு வேண்டிய சாமான்களும் ஏராளமாக வாங்கலாம். பலசரக்கு மளிகைகளில் பிரதானமானவை, ஆர்பவைஸ்ய கோ. சு. கோண்டல் செட்டியார், சு. எல்லப்ப செட்டியார் அவர்களுடையன. மற்றும் பாத்திரக்கடைகளும், ஷாப்புக்கடைகளும், கலவச்சந்தனக் கடைகளும் புத்தகக்கடைகளும், பஞ்சாமிர்தத்தைப் பதனப் படுத்துவதற்குப் பலவகை அளவுள்ள தகரடப்பிகள் தயார் செய்யும் தொழிற் கூடங்களும் இருக்கின்றன. பின்னும், பிராஞ்சுத் தபாலாபீசும், முனிசிபாலிட்டி எலிமெண்டரி பாடசாலையும், தென்கோடியில் ஸ்ரீ பழநியாண்டவர் எழுந்தருளியுள்ள சிவமலையும், வடகோடியில் குமாரக்கடவுள் விருப்பத்தோடு கோயில் கொண்டருள்கின்ற ஆறுபடை வீடுகளுள் ஒன்றாகக் கூறப்படும் திருவாவினன்குடி என்னும் திருவாலயமும், இவ்வாலயத்திற்குப் பின்பாகத்தில் சரவணப்பொய்கையும், அமைந்து இலங்குகின்றன. அடிவாரத்திற்கும், பட்டினத்திற்கும் இடையில் 'வையாவிபுரி

என்னும் பெயரிய பெரிய ஏரியும், (குளம்) பாளையம் என்ற ஓர் சிற்றூரும் உள்ளன. ஒரு காலத்தில்,இங்கு படைகள் வந்து தங்கியிருந்ததால் 'பாளையம்' என்று பெயர் வாய்ந்த தென்ப.

அடிவாரத்தின் தென்கோடியில், கம்பீரமான தோற்றத்தில் இயற்கை யழகு சிறக்க, செங்குத்தான உயரமின்றி, கோபுரம் திருமதில்,மயில்வாகன மண்டபம், இடும்பன் சந்நிதி முதலியவற்றுடன் கூடிய சிவகிரி என்னும் திருப்பழநிமீது தண்டாயுதக் கடவுள் கோயில் கொண்டருள்கின்றனர். இத திருமலை திண்டுக் கல்லினின்று வரும் நெடுஞ்சாலைக்குத் தெற்கே யிருக்கிறது.

8-ஆம் சாஸனம் அலிகாசமின்மையால் எடுக்காமல் விடப்பட்டது.

---

## திருமடங்களும்—தர்மசத்திரங்களும்.

மலை அடிவாரத்தின் தெற்கிலும் வடக்கிலும், நடுத்தெருவிலும், மேற்குக்கிழக்குத் தெருக்களிலுமாகத் திருமடங்களும், தர்ம சத்திரங்களும் மிகுதியாக வுள்ளன. இத்திருமடங்கள்—தமிழ் வளர்ச்சியையும், வேதாந்த சித்தாந்த சாத்திர வளர்ச்சியையும், சாதுஜனக்கூட்ட சத்விஷய சமரஸ சன்மார்க்க வளர்ச்சியையும், சைவசமயத்திற்குரிய ஆசார ஒழுக்க நியம நிஷ்டைப் பயிற்சியையுமே கருத்தாகக்கொண்டு வளர்த்துவரும் திருவாவடுதுறை, தருமபுரம் முதலான சைவத்திருமடங்களைப் போன்ற கொள்கையுடையனவாயில்லை. இங்குள்ள திருமடங்கள் யாவும் ஒரு கூட்டத்தார், அல்லது, மரபினர், சமூகத்தார்களது ஜாதிய மடங்களே. இம்மடததின் தலைவர்களும் ஜாதிகளின் ஆசாரியர்களே. இவர்களுள், முதன்மை வாய்ந்தவர் திருப்பாலய சுவாமிகளும், திருவாமத்தூர் கௌமார மடத்து ஆசா

ரிய மூர்த்தி திருப்புகழ் சுவாமிகள், 'அபர அருணகிரி' என்ற சிறப்புப் பெயர்கள் வாய்ந்த தண்டபாணி சுவாமிகளும், யாதவ மடத்து சிவநாராயண தேசிகரும், செட்டிநாட்டுக் கோவிலூர் சிஷ்ய வர்க்கத்து மானூர் சதானந்த சுவாமிகளுமே. இவர்களுள் தற்காலம், கல்வி, ஒழுக்கம், உதார குணம், புலவர்களை மதித்துப் போற்றுதல் முதலியவற்றில் மிக்கார் வீர சைவ, திருப்பாலைய சுவாமிகள் எனக் கூறுவது மிகையாகாது. இவர் மலையாளத்து எல்லா மரபினர்களுக்கும் குருசுவாமிக ளாயிருப்பதுடன், 1. ஸ்தவராஜ பண்டிதர், 2. பச்சைக் கந்தையர், 3. பாணிபாத்திரர், 4. பாலையர், 5. நல்லான் சக்கரவர்த்தி என்னும் பழநிப் ¶ பஞ்சமடங்களுள் ஒன்றிற்கு அதிபதியும் ஆவர். இவரையும் மடத்துப் பூர்வீக வரலாற்றையும் அச்சிட்டுள்ள தனிப் புத்தகத்தில் கண்டுகொள்க. மற்றும், இராக்கால மடங்களும், பசுமடங்களும் உள்ளன.

இனி, தர்மசத்திரங்களைப் பற்றிக் கவனிப்பாம்:- அடிவாரத்தின் எல்லாப் பாகங்களிலும், தர்ம சத்திரங்கள் மிகுதியாக அமைந்துள்ளன. இத்தர்ம சாலைகளில் பழநியாண்டவனைத் தரிசிக்க வரும் பக்தகோடிகள், வசதியாகத் தங்கியிருப்பதற்காகவே புண்ணியப்பயனை எண்ணியுணர்ந்த தர்மசீலர்கள் அதனை அடைவதற்காகத் தங்கள் அரும் பெரும் பொருள்களை அபரிமிதமாகச் செலவு செய்து தரும நிலயங்களைக் கட்டி வைத்தார்கள். ஆயின், இத்தர்மச் சாலைகள், இப்பொழுது அவர்களால் ஏற்படுத்திய காரி

¶ சிலர், இராமாநுஜர், சாரங்க தேவர், புலிப்பாணி, ஸ்தவராஜ பண்டிதர், பச்சைக் கந்தையர், எனபவர்களே பழநிப் பஞ்ச மடாதிபதிகள் என்பர்.

வேறு சிலர், தேவணசித்தர், மருளசித்தர், ஏகோராமையர், பண்டாரத்தார். அல்லமாப் பிரபு எனபவர்களே பஞ்ச மடாதிபதிகள் என்கின்றனர்.

யஸ்தர்களாலும், அவர்களது உறவினர், உற்றார்களாலும் சந்ததிவார்சுகளாலும், சுங்கச் சாவடிகளாகவும், சாஸ்வத ருத்தகை ஸ்தலங்களாகவும் ஆக்கப்பட்டு அறத்தை வேருடன் களைந்து அப்புறப்படுத்தப் பட்டிருக்கிறது. அறத்தின் சீரிய தன்மையைச் சிறிதும் உணராதார் இத்தர்ம நிலயங்களில் ஏற்பட்டு, அறத்தைப் பாழ்படுத்தும் பதிதர்களாக விளங்குவார்களென்று முன்னமே அவர்கள் உணர்ந்திருந்தால், இத்தர்ம சத்திரங்களைக் கட்டுவதில் ஈடுபட்டிரார். இத்தகையோர்களை ஏற்படுத்தியுமிரார். அந்தோ! தர்மத்தின் கொடிய விரோதிகள் இது போழ்து இவ்வளவு மிகுதியாக ஏற்பட்டிருப்பது கலியின் திருக்கூத்துப் போலும்.

சாமான்ய காலத்திலும், விசேட உற்சவ சமயத்திலும் யாத்ரீகர்கள் தமது குடும்பசகிதம் வந்து, இங்குள்ள தர்ம சத்திரங்களில் தங்கி வசதியாயிருப்போமென்று எண்ணி வந்தபடி, இடமின்றி ஏமாந்து பலவிடங்களில் இடத்திற்கு ஓடியலைந்து திரிவதை நேரில் காண்போர், கல்நெஞ்சராயினும் கரைந்துருகுவர். இச்சமயத்தில் தான், சத்திரங்களில் சமய சந்தர்ப்பத்திற்கேற்ப வாடகை உயர்வும் மிகுதிப்படுவது.

இப்பெருங் குறைகள் ஒழிந்து தர்ம நிலையங்கள் பண்டுபோல் நிலைபெற்று தர்மத்தின் இனியமணம் எங்கும் வீசப்படவேண்டுமானல், செல்வாக்கும், கல்வியும், ஈகையும் அதிகாரமும், அறத்தின் பரிபாலன நோக்கமும், மிகுதியும் வாய்ந்த கனவான்கள் வெளிப்படவேண்டும். அந்நன்னாளைத் திருமுருகன் விரைவில் தோற்றச் செய்ய, அவன் பொன்னார் திருவடியைப் போற்றுகின்றோம்.

'பேர் கங்கா பவானி குடிப்பதற்கு மட்டும் நீரில்லை' என்பது போல, அடிவாரத்தில் சத்திரங்கள் நிரம்பி யிருப்பி

னும், அன்பர்கள் சுவாமி தரிசனார்த்தம்வந்து இரண்டொரு நாள் இலவசமாகத் தங்கிச் செல்வதற்கு மட்டும் இடம் கிடைப்பது துர்லபம். யாத்ரீகர்கள் பெரும்பாலோர் ஏழை மக்கள் என்பது யாவரும் அறிந்த விஷயம். இவர்களைக் கவனித்துத்தான் தர்மப் பிரபுக்கள் தர்ம சத்திரங்களைக் கட்டிவைத்தார்கள். அச்சத்திரங்களின் நிர்வாகஸ்தர்களது சுயாலத்தில், பிரபுக்கள் எதிர்பார்த்த புண்ணியத்தைப் பெற இயலாது ஏமாந்து போயினர். அந்தோ! இது மிகவும் வருந்தத்தக்கது.

அடிவாரத்தில், வாடகையை எதிர்பாராமல் புண்ணியத்தை எதிர்பார்த்து நிற்கும சத்திரங்களில் பிராமணரல்லாதாரின் வடசேரி சத்திரம், உடுமலை சோழிய கவுண்டரவர்கள் சத்திரம், பட்டினத்தார சத்திரம், ப. கிருஷ்ணசாமிப் பண்டாரம் அவர்கள் சத்திரம் ஆதியவைகளும், பிராம்மணருக்கு மட்டும் கொழுமம், வரதராஜபுரம் பெருநிலக்கிழவரும், பாரி மிராசுதாரரும், நிரம்பிய தனவந்தருமாகிய பிர்ம்மஸ்ரீ. வேங்கடகிருஷ்ணய்யரவர்கள் தர்ம சத்திரமும் ஆம். இவைகளில யாத்ரீகர்கள் தாராளமாய் வந்து தங்கி வசதியாயிருந்து சுவாமி தரிசனம் செய்து போகலாம்.

பங்குனி பிரமோற்சவத்தில் நான்காம் திருவிழா முதல், பத்தாம் திருவிழாவரை இச்சத்திரத்தில் பிராம்மணருக்கு மட்டும அறுசுவையுடன் கூடிய உணவு இரு வேளைகளிலும் மிகுதியான உபசாரத்துடன் ஏராளமாக அளிக்கப்பட்டு வருகின்றது.

இவையேயன்றி, அடிவாரத்திலும், பட்டினத்திலும், ஒவ்வோர் யரபினருக்குமு தனித்தனி தர்ம சத்திரங்களும், தண்ணீர்ப் பந்தல்களும், மடங்களும் இருக்கின்றன. அவைகளில், அவரவர்கட்கேற்ற மடங்களில், அந்தந்த

ஜாதியினர் தங்கலாம். அவற்றின் பெயர்களும், இருக்குமிடமும், திசையும் அடியில் வருமாறு:—

அடிவாரம் பிரதானத் தெருவின் இருமருங்கிலும், தெற்கிலிருந்து வடக்குக் கோடிவரை.

1. தொண்டை மண்டலம்-முதலியார் மடம்.
2. இராக்கால மடம் (நாட்டுக்கோட்டையார்)
3. செங்குந்தர் மடம்.
4. குறும்பர் மடம்.
5. திருவாவடுதுறை மடம்
6. வேளாளர் மடம்
7. விஸ்கர்மாக்கள் மடம்.
8. திருஞான சம்பந்தர் ,,
9. வாலசமுத்திரம் இராமசாமி நாடாழ்வார் தண்ணீர்ப் பந்தல.
10. பரிகாரிகள் மடம்.
11. லால்குடியார் மடம்.
12. உடையார் மடம்.
13. முத்துராஜாக்கள் ,,
14. சான்றூர் மடம்.
15. சாலியர் மடம்.

வடதிசையினின்றும் தென்றிசைக் கோடிவரை.

16. செங்குந்தர் மடம்.
17. கைக்கோளர் மடம்.
18. புதுச்சேரி சத்திரம்.
19. சங்குமுகப் பாண்டியச் செட்டிகள் மடம்.
20. துளுவவேளாளர் மடம்
21. விசங்க நாட்டுக் கள்ளர் மடம்
22. சவளக்காரர் மடம்.
23. மாணூர்ச்சுவாமிகள் ,,
24. குறவர் மடம்.
25. ஆயிரவர் மடம்.
26. சோழிய வேளாளர் ,,
27. சௌராஷ்டிரர் மடம்.
28. ஆர்யவைசியர் மடம்.
29. பால்காவடி மடம்.

கோழுமம்-கிருஷ்ணய்யர் சத்திரம் தெரு. மேற்கு வரிசை. தென்றிசையினின்றும் வடகோடி வரை.

30. குலாலர் மடம்,
31. ப. கிருஷ்ணசுவாமிப் பண்டாரம் மடம்.
32. வி. சு. பாலராமலிங்கஞ் செட்டியார் மடம்.
33. கலயமுத்தூர் சுந்தரசாமி அய்யா மடம்.
34. உடுமலை, சோழிய கவுண்டர் மடம்.
35. ரெட்டியார் புதூர் கூழையப்ப ரெட்டியார் வாடகை விடுதி

இவ்விடுதியில் கீழ்மேல் வரிசையில் நெட்டாகப் பதினாறு அறைகளும், இதிற்கெதிரில் அவற்றிலும் சிறிய பதினான்கு அறைகளும், தின-மாத வடகைகளுக்கு விடுவதற்காகவே புதிதாகக் கட்டப்பட்டிருக்கின்றன. விடுதியின்பிற்பாகத்தில் வாசல் மத்தியில் கிணறும், மல சல விசர்ஜனங்களுக்கு அகன்ற பெருவெளியும் இருக்கின்றன. செயலுள்ள யாத்ரீகர்கள் இங்கு இடவசதி செய்துகொள்ளலாம்.

36. ப. வேங்கடசாமி கிராமணியார் சத்திரம்.
37. கொழுமம் கே. கிருஷ்ணையர் சத்திரம்.
38. மறவர் மடம்.
39. சோழிய வேளாளர் ,,
40. தாசி. மருதமுத்தம்மாள் தண்ணீர்ப்பந்தல்.

மேற்கூறிய சத்திரம், மடம், தண்ணீர்ப்பந்தல்களை நிரந்தரமாகப் பாதுகாப்பதற்கும், கவனித்துக்கொள்வதற்குமாக இவைகளில் ஒவ்வொரு பண்டாரங்களை ஒருவித ஒப்பந்தத்துடன் தர்மஸ்தாபனங்களின் தலைவர்களாக அமர்த்தப் பட்டிருக்கின்றன. யாத்ரீகர்கள் அவர்களைக் கண்டு இடவசதி செய்து கொள்ளலாம்.

இங்கு, கோடை காலமாகிய பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் சில சமயங்களில் ஸ்நானபான வகைகளுக்குத் தண்ணீர்ப் பஞ்சமாக விருக்கும். எனினும், பொதுவாகத் தேகாரோக்கியமான இடமென்றே சொல்லலாம்.

இவ்வடிவாரப் பிரிவில், 'வாக்கிற் கருணகிரி' 'கருணைக் கருணகிரி' என்று புகழ்ந்தோதப்பட்ட திருப்புகழடிகள் ஸ்ரீ அருணகிரிநாதர் பன்னாள் தங்கி, தண்டபாணியைத் தமது திருவாக்கால் பலபடப் புகழ்ந்து பாடியுள்ளார். இவ்வுண்மை, திருப்புகழ் பெற்றுள்ள தலங்களுள், பழநித் தலமே பதிகத் தொகையில் அதிகரித்திருப்பதால் பெறப்படும். மற்றும் 'சுனைபல விளங்குதுங்க பழநிமலை' 'அதிசய

மநேகமுற்ற பழநிமலை' 'பதும வயலிற் பூகமீதே வரால்கள் துயில் வரு புனல பெருக்காறு காவேரி சூழ்வளர் பழநி, 'கோமளம் பலசூழ் கோயில் மீறிய ஆவினன்குடி' 'ஆதவன் கதிரோவாதுலாவிய கோபுரங்கிளர் மாமாது மேவிய ஆவினன்குடி, 'பவனப் புவனச் செறிவுற்றுயர் மெய்ப் பழநி' எனவரும் திருப்புகழ்ப் பாடல்களில், பழநிப்பதியின் அதிசயங்கள் பலவற்றைப் பரக்க வுரைப்பதாலும் விளக்கமாம்.

அடிவாரத்திலும், பட்டினத்திலும், வாலசமுத்திரத்திலும் மற்றும் பழநியைச் சூழ்ந்த பாகங்களிலும், பாடவல்ல புலவர்கள் பலர் தோன்றி இப்பதிக்குப் புதிய புகழை நிலைநிறுத்தி யிருக்கின்றனர். அவர்களுள் முதன்மையானவர்கள் சிலர் பெயர் அடியில் வருமாறு:—

மாம்பழக் கவிச் சிங்க நாவலர் 1. பெரிய வீட்டுச் சின்னத்தம்பி ஆசாரியார் 2. அங்கண்ண சேர்வை 3. சேனுபதி வெற்றிவேற் கவிராயர் 4. பாலசுப்பிரமணியக் கவிராயர் 5. அண்ணுமலைக் கவிராயர் 6. சுந்தரமுர்த்திக் கவிராயர் 7. வே. பொன்னுசாமிப் பண்டாரம் 8. சு. பெரியசாமிப் பண்டாரம் 9. S. K. M. முத்துக்குமாரப் பண்டாரம் 10. சித்திரபுத்திரக் கவிராயர் 11. வேலாயுதக் கவிராயர் 12. ரத்னகிரி நாவலர் 13. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆசாரியார் 14. வே முத்தனுசாரியார் 15. சாரைசைதுபுலவர் 16. முதலினேர்.

இவ்வளவே அடிவாரம் பட்டினங்களைப்பற்றி செய்திகள்.

---

## யாத்ரீகர்களும்—கவனித்தற்குரியவைகளும்.

" பகலிர விற்போ திற்பணி
பணியற விட்டா ரெட்டிய
பரமம யச்சோ திச்சிவ



பெரியநாயகியம்மன் கோவிலில் முத்துக்குமாரர் சந்நிதி.
இது, பழநி. ஸ்ரீ தெண்டபாணி தேவஸ்தானத்தார் உதவியது.

*பழநி தனிற் போயுற்பவ*
*வினைவிளை கட்சேர் வெட்சிகு*
*ரவுபயில் நற்ருள் பற்றுவ—தொருநாளே*
*(திருப்புகழ்) (78)*

(பொருள்)

"சுக துக்கங்கள் இல்லாத விடமான முத்தி வீடாம் நினது பாத மலர்களில் வணங்குபவர்களும், செயலை முற்றிலும் ஒழித்தவர்களுமான பெரியோர்கள் அடையும் நிஷ்களங்கின் நிறைவான ஜோதியாய் நிற்கும் சிவனது உருவமேயான நினது நிலைபெற்ற இருக்கையான பழநி யென்னும் திருத்தலத்திற்குச் சென்று, அடியேனை மீண்டும் மீண்டும் பிறக்கச் செய்யும் கருவினையானது அகலும் வண்ணம், தேன் பொருந்தியுள்ள வெட்சி மலர்மாலையும், குரவ மலர் மாலையும் நெருங்கிப் பொருந்தியுள்ள நன்மையைச் செய்யும் நினது பாத மலர்களை உற்ற துணையாகப் பிடித்துக்கொள்ளும் நாளும் உளதோ?" என்பது.


இத்தகையே மேலான பெருமை மிக்க பழநிப்பதியை அடையும் பக்தகோடிகள் முதன் முதல் கவனிக்க வேண்டுவது இட வசதி. இதனை ஏற்பாடு செய்துகொண்ட பின், சண்முக நதி, சரவணப் போய்கை, வரதமாநதி, வையாவிபுரித் தடாகம், மூலைவாய்க்கால் என்னும் புண்ணிய தீர்த்தங்களுள் ஒன்றில், சங்கற்பங்கூறி அதற்குரிய விதியுடன், ஸ்நான பலனைத் தந்தருளும்படி இஷ்டதேவதையைப் பிரார்த்தனை செய்து மூழ்கி, தூய உடையுடுத்துத் திருநீரணிந்து ஜபம், தவம், பிரார்த்தனை முடித்தபின், பாதவிநாயகரை வணங்கி, தத்தமக்குரிய சக்திக்கேற்ற அபிஷேகம், அல்லது காவடிகளுக்கு வேண்டிய சாமான்களுடன் மலைமீதேறித் திருக்கோயிலை வலம் வந்து, தண்ணருட் கடலாய் விளங்கும் தண்டபாணியைத் தரிசித்துச் செய்ய வேண்டிய

திருத்தொண்டுகளை யெல்லாம் முறைப்படி செய்து வணங்கித் தொழுதல் வேண்டும்,

பின்னர், மிகவும் ஏழை எளியவர்களுக்கு இயன்ற வரை தர்மஞ்செய்து மலைவிட்டிறங்கி உணடு முடித்துச் சிரமபரிகாரஞ் செய்துகொண்டு மாலையில், முத்தமிழ்க் கரை கண்ட நக்கீரர் முதலாய பொய்யடிமை யில்லாப் புலவர்கள், அநுபூதிச் செல்வம் பெற்ற அருணகிரிநாதவடிகள் முதலிய புலவர் பெருமக்கள், புகழ்ந்து பாடிய திருவருட் பாசுரங்களைப் பெற்றதும், மூலாதாரம் முதலான சடாதாரத தானங்களுள் மணிபூரகத் தானமாய் விளங்கப்படுவதும், (அதாவது மூன்றும படை வீடு) சாதரண ஆண்டு ஆனித் திங்கள் 13-ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை எட்டே கால் நாழிகைக்குமேல் பத்து நாழிகைக்குள் சிம்மலக்கினம் விருஷப நவாம்சத்தில் மகா கும்பாபிஷேகம், சிவச் செல்வர்களாகிய நாட்டுக்கோட்டை நகர வணிகர்களில், கண்டனூர் கு. ப. பழனியப்ப செட்டியார், காரைக்குடி. நா. மு. சுப. ராம. சுப்பிரமணிய செட்டியார் அவர்களால் செய்விக்கப்பட்டதுமான திருவாவினன்குடியையும் அங்கு கோயில் கொண்டருளும் குழந்தைவேலப்பரையும் சென்றுசேவித்து ஆலயம் நீங்கி, பழநிப்பட்டினத்தில் பழமையாய் ஆலயங் கொண்டருள்வதும், சகல காரியாநுகூல சர்வாபீஷ்ட வரப்பிரஸாதமூர்த்தியாய் விளங்குவதும்,சிவநேசர்களாகிய K.C. கிருஷ்ணசாமிப் பண்டாரம், V. S. பாலராமலிங்கம் செட்டியார், A. முத்தையா பிள்ளை முதலிய கனவான்களது உழையா முயற்சியால் கவிபுராப்தம், 5029, பிரபவ-ஆண்டு ஆவணித் திங்கள் 13-ஆம் நாள் திங்கள் கிழமை, உத்திர நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம செய்விக்கப்பெற்றதுமான ஸ்ரீ பட்டத்து விநாயகரைச் சென்று வணங்கிக்கொண்டு,



லட்சுமீ நாராயணப்பெருமாள் கோவில்
இது, பழநி. ஸ்ரீ தண்டபாணி தேவஸ்தானத்தார் உதவியது.



பெரிய ஆவுடையார் கோவில்.
இந்த போட்டோபிளாக், பழநி. ஸ்ரீ தெண்டபாணி
தேவஸ்தானத்தார் உதவியது.

பழநிப்பட்டினத்து மத்திய பாகத்தில் திருவீற்றிருந்தரு ளும் ஸ்ரீகைலாச நாதர், சிவலோக நாயகியார், பிரகன்னாய கியார் (பெரிய நாயகி) முத்துக்குமார தேவர் முதலிய தெய்வங்களையுந் தரிசித்து அழகிய, சிற்பங்கள் நிறைந்த நவரங்க மண்டபம், முத்துக்குமார தேவர் மண்டபம், நட ராஜர் சந்நிதி, பிரகாரம்,கோபுரம் முதலியவற்றையுங்கண்டு, பர்வதம்போன்ற மூன்று யானைகளையும், அவைகள் தங்கும் பெரிய கொட்டகைகளையும் பார்த்து, இருக்கை சேர்தல் வேண்டும்.

## ஆவுடையார் கோயில்.

மறுநாள், அதிகாலையில் எழுந்து, பழநியம்பதிக்கு நேர்வடக்கில் பழைய தாராபுரம் நெடுஞ்சாலையில் சுமார் 3 மைல் தூரமுள்ள மிகப்பழைமையான ஆவுடையார் கோயில் சென்றடைதல் வேண்டும். இது சிவபரம், கௌசலபுரம், வன்னிபுரம், புயங்கபுரம், சபரபுரம், பிரமபுரம், கன்னிசா ரவனம், கோங்கு வனம், திருக்காம கோட்டம், என்னும் பெயர்கள் பெற்றதும்,பிரமனாலும், விஷ்ணுவாலும் பார்வதி தேவியாராலும் பூசிக்கப்பட்டதும், 1915-ஆம் ஆண்டுக்கு, ராக்ஷஸ ஆண்டு ஆனித் திங்கள் 11-ஆம் நாள் வெள்ளி வாரம், சுக்லபக்ஷத் திரயோதசி, அநுஷ நட்சத்திரத்தில் உதயாதி $18\frac{3}{4}$க்கு $19\frac{1}{4}$ நாழிகையளவில், பழநி திருவாளர் கள், வெ. ராம. ராமசாமிபிள்ளை ப. கிருஷ்ணசாமிப் பண் டாரம் சு. பெரியசாமிப் பண்டாரம் முதலான சிவபக்தி மிகுந்த செல்வர்களால், சிவாபிமானமிக்க அன்பர்களது பொருளுதவியைக்கொண்டு கும்பாபிஷேகம் செய்விக்கப் பெற்றதுமான சிவஸ்தலம். பழைமை பெருமைகள் சிறந்த இத்திருத்தலத்தில் கோயில்கொண்டருள்கின்ற பெருமான் பெயர் பிரகதீஸ்வரர். இச்சிவ மூர்த்தம் சுயம்புலிங்கம் என்ப. யக்ஷணிக மானுட ஆரிட தெய்வீக-காண இலிங்

கங்களினும் மேம்பட்டது சுயம்புலிங்கம். மற்றொரு வஜை யாகக் கூறின், தச்சன் கல்லை உளியினுல் செதுக்கிச் செய் யாமல், இயற்கையாய் சிவலிங்கமாய் அமைந்த அதிசய வடிவெனலாம். தச்சன் செய்த கிருத்திம லிங்கத்தை விட சுயம்பு லிங்கத்திற்கு மேன்மை அதிகம். இத்தகைய சுயம்பு லிங்கத்தை (பிரகதீஸ்வரரை) ஆலயத்தின் அருகே யோடும் சண்முக நதியில் மூழ்கி,

"செங்கணனும் பிரமனுந்தம்முளே
எங்குந் தேடித்திரிந்தவர் காணகிலர்
இங்குற்றே னென றிலிங்கத்தே தோன்றினுன்
பொங்கு செஞ்சடைப் புண்ணியமூர்த்தியே''

என்று தோத்திரஞ்சொல்லி வாயார வாழ்த்தித் தலையாரக் கும்பிட்டால் எய்துதற்கரிய பயனை இனிதடைந்து யாத்ரீ கர் இன்புறுவர். அவகாசம் இருப்பின், பழநிக்கு வட மேற்கு 5-மைல் தூரமுள்ள சுயம்புலிங்கமாகிய நகிலீஸ்வர ரையும், ஈசான திசையில் 18 மைல் தூரத்திலுள்ள கூத்தன் பூண்டி சோழீஸ்வரரையும் சென்று தரிசிப்பது நலம்.

## ஆண்டவனுக்குச் செய்யும் ஆறுகால பூஜைகளின் விவரம்.

காலை விழா:-காலை 7-மணி. சிறுகாலை சந்தி:-காலை 8-மணி
காலை சந்தி:- காலை 10-மணி.

இக்காலங்களில் பால் அபிஷேகம், பஞ்சாமிர்தம், தைலம் முதலியன வைத்து நிவேதிக்கப் படுகின்றன.

உச்சிக்காலம்:-பகல் 12-மணி.

மாலை சந்தி, (சாயரட்சை) மாலை 6-மணி.

இதற்கு மேற்கூறியவைகளுடன் இளநீர், தயிர், சந்தனம், விபூதிகளும், வைத்து நிவேதிக்கப்படுகின்றன.

அர்த்தசாமம்:-இரவு 9-மணி.

அபிஷேகங்களுடன், அப்பம், தேன்குழல், தேன்



மலேயப்பசாமி வைத்தியசாலே தண்ணீர்ப் பந்தல்.

தினமாவு, திரட்டுப்பால், பொங்கல் முதலியவைகளும் வைத்து நிவேதிக்கப்படுகின்றன.

யாத்ரீகர்கள், காலை விழா, அதாவது விசுவரூபதரிசனத்திற்கும், இரவு அர்த்தசாம பூஜைக்கும், மலைமேற் சென்று தரிசிப்பதுண்டு.

இக்காலங்களில் யாத்ரீகர்கள், ஆண்டவன் திருமேனியின்மீது அபிஷேகிக்கப்பட்ட பால், தேன், பன்னீர், பஞ்சாமிர்தமாதிய வஸ்துக்களின் ஈரம், சிலா விக்கிரகத்திற்கு அணிவிக்கப்பட்டுள்ள கௌபீனத்தில் தங்கியிருப்பதையும், திருமேனியின்மீது படிந்துள்ள தைலங்கூடிய விபூதியையும், பிழிந்தும், வளித்தும் அர்ச்சகர்களால் அளிக்கப்படுவதைத் தேவப்பிரசாதம் என்று முழுமனதுடன் நம்பி ஏற்று உட்கொள்ளுவார்களாயின், கொடிய பவரோகங்கள் விரைவில் சுகப்படுவதாக, உட்கொண்டு நன்மை யடைந்த அன்பர்கள் கூறுகின்றனர்.

## யாத்ரீகர்கள் தேவஸ்தானத்திற்குச் செலுத்த வேண்டிய கட்டணங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | பிரார்த்தனைப்படிமுடிகளைவதற்குஅதாவது தலைமொட்டை யடிப்பதற்கு சீட்டு 1-க்கு | 0—6—0 |
| 2. | அபிஷேக சாமான் சுமை 1-க்கு | 0—0—3 |
| 3. | காவடி ,, | 0—0—3 |
| 4. | பால், அல்லது பன்னீர்—இளநீர், விபூதி சந்தனம் முதலிய வற்றில் ஒன்றை ஆண்டவனுக்கு அபிஷேகித்துக் கற்பூர தீபாராதனை செய்வதற்கு அர்ச்சகர் தட்சணை. | 0—4—0 |
| 5. | பஞ்சாமிர்த அபிஷேகஞ் செய்வதற்குத் தேவஸ்தானத்திற்குச் செலுத்தவேண்டிய கட்டணம். | 3—4—0 |

# விளம்பரம்.

உயர்ந்த பதிப்பு! குறைந்த விலை!

## பழநி ஸ்தல மகத்துவம்.

அல்லது

## City Guide of Palni.

(ஆராய்ச்சியுடன் பற்பல சித்திரங்கள் நிறைந்தது)

பழநிஸ்தலத்தின் பழைமை பெருமைகளைப் புதிய முறையில் ஆராய்ச்சி வழியில் தெளிவாகவும், விரிவாகவும் சிறந்த ஆதாரங்களுடன், கண்டோர் களிப்புறும் வண்ணம், கண்கவர் வனப்புடைய பிரதியான சித்திரப்படங்களோடு இனிய தமிழ்நடையில் அழகுபெற விளக்குவதில் இப்புத்தகமே தலை சிறந்ததென்று தாராளமாகக் கூறலாம். இது, உண்மை என்பதற்கு, ஆங்கிலத்தில் B. A., B. A., L. T., பட்டங்கள் பெற்றுத் தமிழிலும், புலமை வாய்ந்த (ஆங்கில-தமிழ்) ஆசிரியர்களது மதிப்புரைகளே சான்றாம். சுருக்கக்கூறின், இந்நூல், சிவகுமாரனைச் சிந்தையில் வைத்து மறவாது நினைந்துருகும் அன்பர்களுக்கு கைக்கனியாம்.

150 பக்கங்களுடன் வெண்ணிறக்கடிதத்தில் முத்துப் போன்ற புதிய எழுத்தில், அழகிய அமைப்பில், பதிப்பிக்கப் பெற்றுள்ள இப்புத்தகத்தின் விலை, அணா 12 தான். உயர்ந்த சித்திரம் விளங்கும் முக படமும் (Title page) கூடிய இந்நூலுக்கு குறைந்த விலை வைத்தது யாவரும் பெற்று மகிழ்வதன் பொருட்டே. வேண்டுவோர் அடியிற் காணும் விலாசங்களுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

V. P. செலவு வேறு.

| | |
|---|---|
| திரிசிரபுரம், முசிரி<br>எம். சோமசுந்தர முதலியார்<br>அடிவாரம் பழநி. | N. நடராஜ முதலியார்<br>வக்கீல் குமாஸ்தா<br>செங்குந்தர் தெரு,<br>பழநி. S. I. |